Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර பெப். 18 - 24, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 396

# பேச்சுவார்த்தை மேசையில் ஆட்டத்துக்குத் தயாராகும் அரசியல் சதுரங்கம்





# முரசம்

## நல்ல சந்தர்ப்பம்!

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

இந்த வாரம்
இலங்கை அரசியலில்
எதிர்பார்ப்பு மிக்க வாரமாகும்.
நீண்டகால இடைவெளிக்குப்பின்
இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக
விடுதலைப் புலிகளுக்கும்
அரசாங்கத்துக்கும்
பேச்சுவார்த்தையொன்று
ஆரம்பிக்கக்கூடிய
நம்பிக்கைகள் முளைவிட்டுள்ள
தருணமாகும்.

இலங்கை அரசாங்கத்துக்கும்
விடுதலைப் புலிகளுக்குமிடையே
முன்னரும் பல பேச்சுவார்த்தைகள்
நடந்துள்ள போதிலும்,
அவை யாவும்
தோல்வியில் முடிந்ததே வரலாறாக உள்ளது.

புலிகளுக்கும் பிரேமதாஸாவின்
ஐ.தே.க அரசாங்கத்துக்கும் நடந்த
பேச்சுவார்த்தைகள்
முறிவடைந்ததற்கு
இன்னமும் கூட
சரியான காரணம்
தெரிவிக்கப்படவில்லை.

அதைவிட மர்மம்
அப் பேச்சுவார்த்தையில்
என்ன பேசப்பட்டது என்பதே
தெரிய வரவில்லை.
அடுத்து வந்த
சந்திரிக்கா தலைமையிலான
பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும்
விடுதலைப் புலிகளுக்கும்
இடையில் நடந்த
பேச்சுவார்த்தையும்
ஒரு சில கட்டங்களின்பின்
முறிவடைந்து விட்டது.

அந்தப் பேச்சுவார்த்தைகளில்
அன்றாடப் பிரச்சனைகளை முதலிலும்
அரசியல் பிரச்சனைகளைப் பின்னரும்
பேசுவதாகப்
புலிகள் வகுத்துக்கொண்ட
நிகழ்ச்சி நிரல்
அன்றாடப் பிரச்சனைகளைப்
பேசும்போதே முறிவடைந்துவிட்டது.

அரசியல் பிரச்சனைகள் எதுவும்
பேச்சுவார்த்தை மேசைக்கு
வரவேயில்லை.

தற்போது மற்றொரு சந்தர்ப்பம்
வாய்க்குமேயானால்
அதனைச் சரியாகப் பயன்படுத்தி
அரசியல் பிரச்சனைகளுக்கே
பிரதான இடம் கொடுத்து தீர்வு காண
முற்படவேண்டியது
அவசியமாகும்.

இப்போதைய வாய்ப்பில்
முன்னைய பேச்சுவார்த்தைகளைவிட
சாதகமாக அமைந்திருக்கும்
அம்சம் என்னவென்றால்,
இம்முறை
இருதரப்பு மட்டுமன்றி மூன்றாம் தரப்பாக
மேற்கத்தைய நாடான நோர்வே
மத்தியஸ்தராக விளங்குகிறது.

அதனால்,
பேச்சுவார்த்தைகளில்
இடர்படும் விடயங்களை
சரிசெய்து செல்லவும்,
நியாயமான விடயங்களை
அங்கீகரிக்கச் செய்வதற்கான
அழுத்தங்களைக் கொடுக்கவும்,
போலிக் காரணங்களால்
பேச்சுவார்த்தையை முறித்துக்கொள்வதைக்
கட்டுப்படுத்தவும்,
பேச்சுவார்த்தை முறியுமானால்
அந்த முறிவுக்கான
உண்மையான காரணங்களை
வெளியுலகுக்கு
எடுத்துக் கூறவும்
உத்தரவாதியான தரப்பொன்றின்
மேற்பார்வையில் நடப்பதாக இருக்கும்.

நோர்வே வெறும்
ஏற்பாட்டாளராகவே பங்கேற்பதாக
இருந்த போதிலும்,
அதன் பின்னால்
சர்வதேச சமூகத்தின்
ஈடுபாடும் இருக்குமென்பது
புரிந்து கொள்ளக்கூடியதே.

எனவே,
கிடைக்கவுள்ள சந்தர்ப்பத்தை
செவ்வனே பயன்படுத்துவது
பொறுப்புவாய்ந்த விடயமாகும்.
இதேவேளை
இந்த வாரத்தில்
எதிர்பார்க்கப்படும்
மற்றுமொரு விடயம்
பெப்ரவரி 18ம் திகதி
பிருத்தானியா கொண்டுவரும்
சர்வதேசப் பயங்கரவாதத்
தடைச் சட்டத்தின்கீழ்
விடுதலைப் புலிகளும்
தடைசெய்யப்படுவார்களா,
என்ற கேள்வியே.

இதில் கிடைக்கப்போகிற முடிவானது
எதிர்காலத்தில்
புலிகளின் போராட்டத்துக்கான
சர்வதேச ஆதரவை
தீர்மானிப்பதாக அமையலாம்.

அதனால் இந்த வாரம்
சர்வதேச முக்கியத்துவங்கொண்ட
கனதியான வாரமாக அமைந்துள்ளது.

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

# ஆன்மீகம்

## வீட்டில் தேவதைகளின் படம்

நான் சிவதந்தை பரமாத்மாவின் தெய்வீகத் தன்மை வாய்ந்த குழந்தை என்றும், தேவர்களின் வம்சத்தில் தோன்றியவன் என்பதையும் ஏற்றுக் கொண்டு வீட்டில் பிந்து ஒளி வடிவான பரமபிதா சிவனின் படத்தையும், ஸ்ரீலக்சுமி, ஸ்ரீநாராயணன், ஸ்ரீகிருஷ்ணன், ஸ்ரீசீதா, ஸ்ரீஇராமன் முதலானோர்களின் படங்களையும் மாட்டுவதனால் வீடே கோயிலாகும். புனித ஆஸ்ரமச் சூழ்நிலை ஏற்படும். படங்களைப் பார்க்கும்போதும், நல்ல சூழ்நிலை அமைந்துவிடுவதாலும் நான் தேவதைகளின் வம்சத்தில் வந்திருப்பவன், பரமாத்மாவின் குழந்தை என்ற எண்ணம் இருக்கும்போது காமப் பித்து தலையெடுக்காது கீழான செயல்களில் நான் ஈடுபட மாட்டேன் என்ற உறுதி மனப்பான்மை ஏற்பட்டுவிடும்.

இவ்வாறு வீட்டையே கோயிலாக்க வேண்டும். "தூய்மையாக இருந்தால் தெய்வ.கமான ராஜ்யம் எனப்படும் சொர்க்கம் கிடைக்கும். அதற்கு அருகதை உடையவனானேன். குணமுள்ளவனாகி சொர்க்கமென்னும் சாம்ராஜ்யத்தை அடையும் பாக்கியத்தை நான் இழந்து விடுவேன், யமன் என்னும் தர்மராஜனிடம் கடைசிக் கட்டத்தில் தண்டனை அடைவதற்குத் தான், அருகதையுள்ளவனாகி விடுவேன்" என்று நாம் நினைக்க வேண்டும்.

ஓம் சாந்தி.

பி.கு.விக்கி-கல்முனை.



## அல்-குர் ஆன் கூறும் மரண எச்சரிக்கை!

★ நாமே உங்களுக்கு மத்தியில் (பலவகைகளில்) மரணத்தை நிர்ணயிக்கிறோம்; (இவ் விசயத்தில்) யாரும் நம்மை மிகைக்க முடியாது. (56:60)

★ ஒவ்வொரு ஆன்மாவும் மரணத்தை அனுபவித்தே தீரும். பின்னர் நீங்கள் (விசாரணைக்காக) நம்மிடம் கொண்டு வரப்படுவீர்கள் (29:57)

★ நபியே உங்களுக்கு முன் எந்த மனிதனுக்கும் நாம் மரணமற்ற வாழ்வை ஏற்படுத்தவில்லை. ஆகவே, நீங்களே மரணமாகிய பிறகு (மனிதர்களாகிய) அவர்களா என்றென்றும் வாழப்போகிறார்கள் (21:34)

★ நீங்கள் எங்கிருந்த போதிலும், மரணம் வந்தடைந்தே தீரும். வலுவான கோட்டைக்குள் நீங்கள் இருந்தபோதிலும் சரியே. (4:78)

★ ஒவ்வொரு ஆன்மாவும் (அதற்கென) நிச்சயிக்கப்பட்ட அல்லாஹ்வின் கட்டளையின் போதுதானே தவிர (அதற்கு முந்தியோ; பிந்தியோ) இறப்பதில்லை (3:345)

ஏ.எச்.ஏ.ஹுஸைன்-ஏறாவூர்.

## நிறைவான பலன் கிடைக்கும்

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக (ரூத் 2:12)

ரூத் என்னும் மோவாபியப் பெண் தன் கணவனை இழந்திருந்த நிலமையில் ஆண்டவரை விசுவாசித்து தன் தேசத்தை விட்டு, தன் உறவினரை விட்டு, தன் தேவர்களையும் விட்டு தான் அறியாதிருந்த தேசத்திற்கும், தன்னை அறியாதிருந்த ஜனங்களிடத்திற்கும் தன் மாமியாருடன் போகிறாள். அவளுடைய சகோதரி ஓர்பாளோ தன் இனத்தாரோடே இருந்து விட்டாள். "என்னிடத்தில் வருகிறவர்களை புறம்பே தள்ளுவதில்லை" என்ற தேவனின் வாக்கின் பிரகாரம் தன்னுடைய செட்டையின் கீழ் அடைக்கலமாய் வந்த ரூத்தை தேவன் ஆசிர்வதித்தார். அவளுடைய வாழ்க்கையை சந்தோஷமாக மாற்றினார். அதே போல் ஆபிரகாமும் தன் தேசத்தை, இனத்தை, தகப்பன் வீட்டை விட்டு ஆண்டவரின் சொல்லுக்கு கீழ்படிந்தான்- ஆண்டவர் ஆபிரகாமை ஆசிர்வதித்தார். ஆகவே நாமும் எம்முடைய துன்மார்க்கமான, பாவமான வாழ்க்கையிலிருந்து விலகி தேவனை மட்டுமே அடைக்கலமாய் கொள்வோமானால் எம்முடைய வாழ்க்கையையும் ஆசிர்வதிப்பார். அவராலே எமக்கு நிறைவான பலன் கிடைக்கும்.

வி. ஆஷா-கல்கிசை.

## கவிதைப் போட்டி இல.396



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 24.02.2001

கவிதைப் போட்டி இல.396
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.393

### பரிசுக்குரிய கவிதை

### ஏக்கங்கள்

தாய் மடியில் தூங்கும்வரை
துயர் மூடி துயில வைப்பேன்
போர்ப்பிடியில் சுமந்த துயர்
இருள் நீங்க யார்
நினைப்பார்?

தெ.லோஜனா-கொழும்பு-06.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**



### தவிப்பு

பெற்றெடுத்துப் பேருமிட்டு
வாழ வைக்க வழிதெரியாது.
'பொறு மகளே காலம் வரும்'
என்று சொல்லித் தேற்றிவிட்டு,
நீ மட்டும் கண்கலங்கி
நிற்கலாமோ அம்மா?

எம்.எம். தங்கத்துரை-
கட்டுகஸ்தோட்ட.

### அன்னை

தான் ஈன்ற
அன்புச் சேய்கள்
யுத்தப் பேயின்
இரத்தப் பசிக்கு
இலக்காகிவிடாமல்
தாய்மைக்குரிய அன்புடன்
கட்டிக் காக்கும்
பாசமிகு அன்னை!

அ.யாழினி-மட்டக்களப்பு.

### எஞ்சியோர்?

ஆயிரம் பேர் இருந்த
அகதிக் கிராமத்தில்
பசிக்கும் பிணிக்கும்
பலியானோர் போக
எஞ்சிய நால்வர்?

அ.சந்தியாகோ-கண்டி.

### தாய்ப்பாசம்

உன்னையே உரமாக்கி
ஆயிரம் கனவுகளுடன்
கண்விழித்திருப்பது!
தூங்கும் எங்களுக்கெங்கே
தெரியப்போகின்றது...?

எஸ்.ஜுலியட் ஷிவானி-
கோட்டைக்கல்லாறு.

### நம்நாடு

தாய் அரவணைப்பில்
குழந்தைகள்...
யுத்த அரவணைப்பில்
நம் நாடு!

எஸ்.பி.பாலமுருகன்-பதுளை.

### நவீன நல்லதங்காள்!

பாழும் யுத்தத்தால்
பசித்த வயிற்றுக்கு
உணவு தர
வக்கில்லை எனக்கு!
அரளி விதை அரைத்தேன்
நவீன நல்ல தங்காளானேன்!

வாசுகி ஆனந்தன்-மட்டக்களப்பு.

### தாய்மை

கண்ணிமையில் தெரிவதோ
உன் சோகங்கள்....
அரவணைப்பில் தெரிவதோ
உன் கருணையுள்ளம்...
உறங்கிடுவோமே உன் அன்பின்
நிழலில் என்றும்....!

சி.தர்ஷினி-பண்டாரவளை.

### காவல்..!

கணவனைச் 'செல்'லடியிலும்
தனயனைச் சுற்றிவளைப்பிலும்
பறிகொடுத்த தாயிவளின்
பரிதவிப்பில், பெண்மக்களை-இப்போ
அரவணைத்துக் காக்கின்ற
அரணாக இருக்கின்றாள்.

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.

### வி(ச)தியா?

கட்டிய கணவனையோ!
காலன் கவர்ந்து செல்ல...!
குடும்பச் சுமைகளோ...7
தலைமேல் பாரமாக!
பெண்மணிகாள் எதிர்காலம். எண்ணி!
பேதையிவள் தவித்திருக்க...!
போர் கொடுத்த பேரிடியா இல்லை.
பொல்லாத விதியின் சதியா?

ஹப்புத்தளையூர்-மனோ கோபாலன்.

### இழப்பு

குடி இழந்தேன்
குலம் இழந்தேன்
பதி இழந்தேன்
ஒரு கண் பார்வை இழந்தேன்!
இனியும் எப்படி...
என் மணிகளை இழப்பேன்....?

ஜெ.ராம் விக்டர்-கொழும்பு-12.

### தாய்ப்பாசம்

கூட்டுக் குடும்பமின்று
போராலே சிதைவானது
கூழ் குடித்திருந்தும்-குஞ்சுகள்
குறட்டை விட்டுறங்கும்-புதுமை
தாயின் பாசமடா-இது
கோடிக்கும் கிடைத்திடுமா?

எப்.லெனாட்குமார்-பண்டாரவளை.

# வாசக[ர்] சாலை

## 'இராஜதந்திரியாரே சரி !'

தொடரும் யுத்தத்தால் நாட்டின் பொருளாதாரம் மீள முடியாத அளவு அதல பாதாளத்துக்குப் போய்விட்டது. போர்க் கருவிகள் வாங்குவதற்கும் மேலதிகமாகப் பெருகிக் கொண்டே போகும் படையினருக்கான அன்றாடச் செலவீனங்கள், காயமுற்றோர், உயிரிழப்போர் ஆகியோருக்கான நட்டஈடு ஆகியவற்றுக்கு ஏற்படும் செலவுகள் கொஞ்சமா?

பெரும்பாலான வேளாண்மை நிலங்கள் வீணாகின்றன. மரம் செடி கொடிகள் பாழடிக்கப்படுகின்றன. தங்கள் தங்கள் தொழில்களை இழந்து அகதிமுகாம்களில் ஆயிரக்கணக்கில் தஞ்சமடைவோருக்கான பராமரிப்பு-மீளக்குடியேறுவோருக்கு புனர்வாழ்வுக்குரிய கொடுப்பனவுகள்-இவையெல்லாம் பணச்செலவுகளை அதிகரிக்கவே செய்கின்றன.

யாழ் குடா நாட்டில் கற்பகதருவான பனைமரங்கள் அத்தனையும் நாசமாகிவிட்டன.

இத்தனை பேரழிவுகளிலிருந்தும் மீள்வதானால், இராஜதந்திரியார்-முரசு 394வது இதழில் சுட்டிக் காட்டியதுபோல் உடன் யுத்த நிறுத்தமே அரசு கடைப்பிடிக்க வேண்டிய ஒரே வழி!

செ.அருமைநாயகம், மாத்தளை.

## (பா)மாலை

திக்திக்கும் பல கருத்துக்களை திகட்டாமல் சிந்தனையில் திணித்து சீர் செய்யும் தினமுரசே!

வாரமொரு வண்ணமுகப்போடு உன் வருகைக்காய் எம்மை வாட வைக்கும் வாஞ்சைமிக்க முரசே. வாழிய நீ! வளர்க உன் தொண்டு.

எம்.கிருஷ்ணா, மட்டக்களப்பு.

## வாழ்த்துகிறேன்

ஒவ்வொரு வாரமும் சிந்தனை முத்துக்களை சுமந்து வரும் முரசே; 28.01.2001 அன்று நீ சுமந்து வந்த அனைத்து அம்சங்களும் பாராட்டக் கூடியவையே. அதிலும், குறிப்பாக 'சிந்தியா பதில்கள்', 'தேன் கிண்ணம்', 'சிறு கதை'. போன்றவை ரொம்பப்பிரமாதம். மேலும் உனது அளப்பெரும் சேவை வளர வாழ்த்துகிறேன்..!

அக்கரைப்பற்று, அஜந்தகுமார்.

என் இனிய முரசே,

இனிமையான அமுதினைக் கொண்டு வந்து அதனைப் பருகும்படி கூறுவதைப் போன்று உன்னுடைய சிறப்பான ஒற்றைகள் யாவும் எம் போன்ற வாசகர்களுடைய நெஞ்சங்களை இனிமையாக்கிச் செல்கின்றன. உன் புதுமையான ஆக்கங்களால் நீ பல குட்டிக் கவிஞர்களை உருவாக்கியும் விட்டாய். இனியும் சிறப்புடன் மேலோங்க இவனின் வாழ்த்து உரித்தாகட்டும்.

மொஹமட் றஸ்மி, குடாபொகுண.

## நரனும் இராஜதந்திரியும்

முரசு 394ல் நரனும் இராஜதந்திரியாரும் ஒரே தலைப்பைக் கொடுத்தே எழுதியிருந்தனர். தலைப்புகளைப் பார்த்ததும் ஒரே தகவலையே இருவரும் தந்துள்ளனரோ என்று கருதினேன். ஆனால் வாசித்தபோதுதான் இருவரும் இரு கோணங்களைக் கையாண்டு எழுதியிருந்ததனை அறிய முடிந்தது. கருத்துக்கள் யதார்த்தமானதாகவே இருந்தன.

இராம சுப்பிரமணியன், பதுளை.

## இலங்கைக் கலைஞர்கள்

முரசே,

நீ தரும் சகல அம்சங்களும் சிறப்பாகவே உள்ளன. தமிழ் நாட்டு சினிமா நட்சத்திரங்களின் சுவையான தகவல்களும் சினித் தகவல்களும் சிறப்பானவைதான்.

இதேபோல் நம்நாட்டுக் கலைஞர்களையும் முரசு சிறப்பிக்க முன்வரவேண்டுமெனக் கோருகிறேன். ஏனெனில் முரசில் ஒருகலைஞரின் பெயர் இடம் பெற்றால் அது பொற் கிரீடம் சூட்டியதற்கு நிகராகும்.

கலாபிமானி, கொழும்பு-13.




இனிய முரசே,

இலங்கைத்தீவு மற்றும் ஏனைய நாடுகளின் அரசியல் நிலமை, புதிய கண்டுபிடிப்புக்கள், சினி விசிட் என்பவற்றை இலக்கிய நயம் சொட்ட எழுதி இனிய இதயங்களில் இடம்பிடித்த முரசே, இவ்வுலகில் உனக்கு நிகர் நீயே!

ம.சுபா, புத்தூர்.

இனிய தினமுரசே!

உன் சேவைக்கு நிகர் நீயே என்பதை பறைசாற்ற மற்றுமொரு ஆதாரம் தான் 'வாரம் ஒரு வார்த்தை' காலத்தின் கோலம் அறிந்து, ரசிகர்களின் ரசனை அறிந்து யுகத்திற்கு ஏற்றாற் போல் செயல் பட்டுக் கொண்டிருக்கும் உனக்கு எப்படி நன்றி செலுத்துவது? நன்றி, நன்றி, நன்றிகள்.

ஏ.ஜி.தஸ்ரிபா, காத்தான் குடி-06.

அன்பினால் அனைவரையும் அரவணைக்கும் அற்புத முரசே...

பல கோடி வணக்கங்கள். நீ வந்திடும் நாளெல்லாம் எமக்குப் பிறந்திடும் யோகம். பார்த்து மகிழ்ந்திடுவேன். எக்காலமும் உன்னை நீ வாரம் ஒரு முறை வீட்டில் வந்திடுவாய். தினமும் பல முறை கண்களில் தவழ்ந்திடுவாய். மகிழ்வான செய்திகளை மனம் குளிர தந்திடும் உனக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

எம்.ஆர்.எம்.ஜெம்ஸீத், பதியத்தலாவ.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266

## பிரிட்டிஷ் அரசாங்கம்

# விடுதலைப் புலிகளை தடை செய்வது தொடர்பான நடவடிக்கை ஒத்திவைக்கப்படலாம்!

**தமிழீழ விடுதலைப்புலிகள் மீது தடை விதிப்பதா இல்லையா என்பதையிட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் எந்தவிதமான முடிவையும் உடனடியாக எடுக்கப் போவதில்லை என்று தெரியவருகின்றது. இலங்கை அரசாங்கம் பிரிட்டனில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டுமென்று கடந்த சில மாதங்களாக வற்புறுத்தி வருகின்றது. அந்நாட்டு அரசாங்கம் பயங்கரவாத அமைப்புக்களைத் தடை செய்யும் சட்டமொன்றை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. அவ்வாறு தடைசெய்யப்பட வேண்டிய இயக்கங்களுள் ஒன்றாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதே இலங்கை அரசின் கோரிக்கை.**

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் தடை செய்ய வேண்டுமென்று இலங்கையில் பேரினவாதிகள் பேரியக்கங்களை நடத்தி வருகின்றனர். ஆயிரக்கணக்கில் கையொப்பங்களைப் பெற்று பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயம் மூலம் மகஜர்களை அனுப்பி வருகின்றனர். இலங்கை அரசாங்கமும் இராஜதந்திர ரீதியில் தடை செய்யக்கோரிக்கை விடுத்து வருகிறது.

இதேவேளை, இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் சார்ந்த சில அரசியல் கட்சிகள், மாணவர் இயக்கங்கள், பல்கலைக்கழக சமுகம் மற்றும் பல சமூக-சமுதாய அமைப்புகள், விடுதலைப் புலிகளை பிரிட்டிஷ் அரசாங்கம் தடைசெய்வதன் மூலம் இலங்கையில் மேலும் இரத்த ஆறு பெருக்கெடுத்தோடும் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அறி வுறுத்தி வருகின்றன.

பிரிட்டிஷ் அரசாங்கம் இம்மாதம் 18ம் திகதி அந்நாட்டின் பாராளுமன்றத்தில் கொண்டு வரவுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளும் இடம் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் பெரிதாகத் தென்படவில்லையென்று இராஜதந்திர வட்டாரங்கள் மூலமாகத் தெரியவருகிறது.

தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை அரசாங்கத்துடனான அரசியல் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் பெருமளவு ஆதரவு காட்டி வருவதனால் பிரிட்டிஷ் அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதை ஒத்திப் போடலாம் என்று அறிய வருகின்றது.

எதிர்வரும் 18ம் திகதி பிரிட்டன் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக தடை கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அமைப்புக்கள் பற்றிய விவரம் தற்போது பெரும்பாலும் தயாராகி இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக சர்வதேச ரீதியாகவும் பலதரப்பட்ட அமைப்புகளிடமிருந்தும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு வேண்டுகோள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

இந்நிலையில் புலிகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் பிரிட்டிஷ் உள்நாட்டமைச்சு மிக்க கவனமாகப் பரிசீலித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்தின் ஒத்தாசையோடு சமரச நடவடிக்கையில் ஆர்வம் காட்டி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒரு வாய்பளித்துப் பார்க்கலாம் என்ற அடிப்படையில் அவர்கள் மீது எந்தவொரு நடவடிக்கைகளையும் எடுப்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் ஒத்தி வைக்கும் என்றே இராஜதந்திர அரசியல் வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது. ●

## யாழ் குடாநாட்டில் சீரற்ற தொலைத்தொடர்புகள்!

யாழ் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக தொலைத் தொடர்பு சேவை சீரில்லாத நிலையிலுள்ளது. இதனால் பொதுமக்களும், வர்த்தகர்களும் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது. தலைநகர் கொழும்புடனோ அல்லது வேறு இடங்களுக்கோ தொடர்பினை ஏற்படுத்துவதற்கு தொலைத் தொடர்பு நிலையங்களில் மக்கள் பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலுள்ள தங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்வதில், அங்கிருந்தெல்லாம் பணவுதவி பெற்று அன்றாட வாழ்வை நடத்த வேண்டிய நிலையிலுள்ளவர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாக வேண்டிய நிலையிலுள்ளனர்.

இதேவேளை வெளிநாடுகளிலிருந்து யாழ் குடாநாட்டிக்கு தங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் பலர் சிரமப்படுவதாகவும் தெரிய வருகிறது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் அத்தியாவசியமான தொலைத்தொடர்புகளை சீராக அமைத்துத் தரவேண்டுமென்று முரசு மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர். ■

## "புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டாம்!"

### ம.ம.முன்னணி தலைவர் வேண்டுகோள்!

"சிறுபான்மை தமிழ் மக்களின் எதிர்காலத்தையும் இந்நாட்டின் எதிர்கால அமைதியையும் மனதில் கொண்டு, புலிகளைத் தடைசெய்ய வேண்டுமென்ற கோரிக்கையை தாங்கள் நிராகரிக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் மலையக மக்கள் முன்னணி வேண்டிக் கொள்கிறது" என்று முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான பி.சந்திரசேகரன் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து சிறுபான்மை தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் அவர்களின் அரசியல் உரிமைகளும்,பாதுகாப்பும் கேள்விக் குறியாகி வருவதாகவும் குரல் எழுப்பப்பட்டு வந்துள்ளது.

இதற்காக சாத்வீக ரீதியில் போராடி வந்த சிறுபான்மை மக்களின் அரசியல் வரலாறு மிக நீண்டது.

80களிலே தீவிரவாத இயக்கங்கள் ஆயுதம் தாங்கியபோதுகூட சிறுபான்மை மக்களின் கோரிக்கை அரசுகளினால் உதாசீனப்படுத்தப்பட்டும் கேலிக்குரியதாகவுமே உலகத்திற்குக் காட்டப்பட்டது.

சிறுபான்மை மக்களின் இந்த அவல வரலாற்றின் வளர்ச்சிக் கட்டமே இன்றைய யுத்தமாகும்.

இன்றைய யுத்தத்திற்கு மிக பலமான அரசியல் பின்னணி இருக்கின்றதென்பதை மறுப்பவர்கள் இலங்கையின் வரலாறு தெரியாதவர்களாகவே இருக்க முடியும்.

தற்போது புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சனையை முடிவிற்குக் கொண்டு வர வேண்டுமென்ற கருத்து இலங்கை அரசியலில் அக்கறை கொண்ட சகலராலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் எமது நாட்டில் நடந்து கொண்டிருக்கின்ற யுத்தத்தின் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் உயிர்கள் பலியாவதைத் தடுக்கும் உன்னதமான பணியில் தங்களின் நாட்டின் பங்களிப்பு மிக அவசியமாக வேண்டப் படுகின்றது.

இங்கிலாந்து புலிகளை தடை செய்வது, இலங்கையில் யுத்தத்தை நீடிக்கச்செய்து பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பலியாவதற்குக் காரணமாகும். இலங்கையின் இனப் பிரச்சனையை மேலும் சிக்கலாக்கும், அப்பாவி மக்கள் அகதிகளாக்கப்படுவது தொடர்ந்தும் தொடர்கதையாகும்."

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## "கொழும்பிலும் திம்பிரிகஸ்யாயவிலும் தமிழ் மொழியை அமுலாக்குக!"

### -ஜனாதிபதி-

கொழும்பு மற்றும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகங்களில் தமிழையும் நிர்வாக மொழியாக அமுல் நடத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரத்துங்க உத்தரவு பிறப்பித்துள்ளார். அரசியல் யாப்பின் 22ம் பிரிவுக்கமைய இந்த உத்தரவு ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு பிரிவுகளிலும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பரந்து வாழ்கின்றார்கள். அவர்களின் நன்மை கருதியே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசியல் யாப்பின் படி தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ்மொழியும் உத்தியோக மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சார்ந்த அதிகாரிகள் தமிழ்மொழியில் கருமமாற்றுவதற்கு அக்கறை காட்டவேயில்லை. இதனால் இப்பிரதேசங்களில் வாழுகின்ற தமிழ்பேசும் மக்கள் தங்களுக்குரிய கருமங்களை ஆற்றுவதற்கு முடியாது துன்பப்படவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

கொழும்பிலும் திம்பிரிகஸ்யாயவிலும் கணிசமானளவு தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஜனாதிபதி அவர்கள் போட்டுள்ள இந்தப் புதிய உத்தரவினால் அவர்கள் பெரிதும் நன்மையடைவர் என்பதில் ஐயமில்லை. ■

## நாவிதன்வெளி பிரதேச செயலகம்

### திறப்பு விழாவுக்கு அமைச்சர் அளித்த செய்தி

"அரசியல்காரணங்களினால் புறக்கணிப்புக்குள்ளாகி மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படும் நாவிதன்வெளி பிரதேசத்திற்கு பூரண அதிகாரங்களையும் கொண்ட முழுமையான பிரதேச செயலாளர் பிரிவு அமைக்கப்பாடுபடுவோம் என கடந்த தேர்தலின் போது நாங்கள் வாக்குறுதி அளித்திருந்தமையை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானது.

சுமார் ஆறாயிரத்திற்கும் அதிகமான குடும்பங்களையும் சுமார் 29 ஆயிரம் சனத்தொகையையும் சுமார் 12 ஆயிரம் ஏக்கர் பரப்பளவையும் கொண்ட புதிய பிரதேச செயலகமானது சுமார் 20 கிராம சேவகர்கள் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இதன்வாயிலாக இப்புதிய பிரதேச செயலகம் அமைக்கப்படுவதன் தேவை உணரப்படலாம்."

இவ்வாறு நாவிதன்வெளி பிரதேச சபைக்கான செயலகத் திறப்பு விழாவுக்கென வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தி, வடக்கு கிழக்கு தமிழ் விவகார இந்துசமய விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அனுப்பி வைத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: "திகாமடுல்ல மாவட்டத்தினுள் நாவிதன் வெளி பிரதேசத்திற்கென புதிய பிரதேச செயலகம் அமைக்கப்பட்டிருப்பதையும் புதிய பிரதேச செயலகத்திற்கென புதிய அலுவலகம் அமைக்கப்படுவதற்கான அடிக்கல் நாட்டப்படுவதையும் பிரகடனம் செய்வதாக இன்றைய வைபவம் நடைபெறுகின்றது.

பிரதேச செயலகங்கள் என்பவை கிராமிய மட்டத்தில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளை இனம் கண்டு நிறைவேற்றும் மையங்கள். பிரதேசத்தில் மேற்கொள்ளக் கூடிய அபிவிருத்திப் பணிகளை சுட்டிக்காட்டும் நிலையங்கள் சாதாரண மக்களுக்கும் அரசாங்க உயர்பீடத்திற்குமான பாலங்களாகும்."

"வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வைபவத்தின் காரணகர்த்தாக்கள் இங்கு கலந்து கொண்டிருப்பவர்கள் மற்றும் இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் ஒவ்வொருவருக்கும் என் வணக்கங்கள்."

## தமிழ் பிரிவில் சிங்கள கிராம சேவகர்?

மாத்தளை-களுதாவளைப் பகுதியில் கடமையாற்றிய கிராம சேவகர் காலமானதன் பின்னர் அப்பகுதிக்கு சிங்கள கிராம சேவகர் பதில் கடமையேற்றுள்ளார்.

இதனால் தமிழ் மொழி பேசும் மக்கள் மொழிப்பிரச்சனை காரணமாக தமது அலுவல்களை முடித்துக் கொள்ள இயலாத நிலையேற்பட்டுள்ளது.

இந்நிலைமையைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பகுதிக்கு உடனடியாக ஒரு தமிழ்க் கிராம சேவகரை நியமிக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

அவிசாவளைப் பகுதியில் உள்ள தமிழ்ப் பாடசாலை அப்பகுதியிலுள்ள சிங்களப் பாடசாலையின் கீழேயே இயங்கி வருகிறது. எனவே தமிழ் மாணவர்களின் நன்மை கருதி அப்பகுதிக்குத் தனியான தமிழ்ப்பாடசாலையை ஏற்படுத்தித் தருமாறு தோட்டத் தொழிலாள மக்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

இது ஒரு புறமிருக்க, அம்பாறையில் உள்ள தமிழ்ப் பாடசாலையொன்றில் கடந்த 20 வருடங்களாகத் தமிழர் ஒருவர் அதிபராக நியமிக்கப்படாதிருந்த குறை நிவர்த்திக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் திரு.குணசேகரம் சங்கர் எடுத்த முயற்சியின் பேரிலேயே இது சாத்தியமாகியுள்ளது.

மேலும் சம்மாந்துறைக் கல்வி வலயத்திலுள்ள சகல தமிழ்ப் பாடசாலைகளினதும் குறைகளை நிவர்த்திக்க அவர் நடவடிக்கை எடுத்து வருகிறார். இது விடயமாக அதிபர்கள் அதிகாரிகளுடனான கூட்டம் அண்மையில் நடந்தது. ■

## பனிபடர்ந்த பகல் பொழுது

### நாடு முழுவதும் பனிப் புகார்?

(நமது நிருபர்)

கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக நாடு பூராவும் கடுங்குளிரும், பனிமூட்டமும் நிலவுவதால் இயல்பு வாழ்க்கை ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக அடைமழையின் பின்னர் கடும் குளிரும் பனி மூட்டமும் நிறைந்த காலநிலை திடீரென மாற்றமடைந்துள்ளது.

மலையகத்தின் பல பகுதிகளிலும் மாலையாகியதும் படியத் தொடங்கும் மூடுபனியும் கடுங்குளிரும் பகல் பத்து மணிவரை காணப்படுகிறது. இதனால் பகலிலும் பனி மூட்டத்தின் மத்தியில் வாகனங்கள் முகப்பு வெளிச்சத்துடனே பயணம் செய்கின்றன. விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக மிகக் கவனமாக வாகனங்களைச் செலுத்துமாறு போக்குவரத்துப் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

நுவரெலியாவில் ஆகக் குறைந்த வெப்பநிலை 3 பாகையை எட்டியுள்ளது.

கடுங்குளிர்ப் பாதிப்பினால் பல வகையான உடற் பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன. குளிர் விறைப்புக் காரணமாக கைகால்கள், உதடுகள் வெடித்து இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளது. நோயாளிகளும், குழந்தைகளும் பலவீனமானோரும் பெரும் அவஸ்தைப் படுகிறார்கள்.

மலையகத்தில் தேயிலை உற்பத்தியும் மூடுபனிக் காலநிலையினால் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கு மாகாணத்திலும் பனிப்புகார் கடுங்குளிர் காரணமாக மக்கள் அவஸ்தைப் படுகிறார்கள். மூடுபனியினால் காலை 08-09 மணிவரை வாகனங்கள் முகப்பு வெளிச்சத்துடனேயே பயணம் செய்கின்றன.

## ஜனாதிபதியின் உத்தரவு உதாசீனம்!

### விவசாயிகள் ஆட்சேபம்!

அக்கரைப்பற்று விவசாயிகள் அங்குள்ள அரச வங்கிகளுடன் பிணக்குற்றுள்ளனர். தங்களுக்கு வழங்கிய விவசாயக் கடன்களை ரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தும் அதை வங்கிகள் கணக்கிலெடுக்காது தொடர்ந்து கடனை விவசாயிகளிடமிருந்து அறவிட்டு வருவதாலேயே இந்த முறுகல் நிலையேற்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு வழங்கிய கடன்களை ரத்துச் செய்து விடுமாறு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட உத்தரவு தமது வங்கிகளுக்குக் கிடைக்கவில்லை எனக் கூறியே கடன் அறவிடப்பட்டு வருகிறதாம்.

இந்த விடயம் குறித்து அக்கரைப்பற்று விவசாயிகள் மீண்டும் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவை 1994ம், 1996ம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கிய கடன் தொடர்பாகவே இந்த இழுபறி நிலையேற்பட்டுள்ளது.

## விசாரணையின்றி சிறையில் வாடுவோருக்கு விடிவு காலம்?

பயங்கரவாத தடைச் சட்டத்தின் அவசரகால நிலமையில் கைதாகி பல நூற்றுக் கணக்கானோர் விசாரணைகளின்றி பல வருடங்களாகத் தென்னிலங்கைச் சிறைகளில் வாடுகின்றனர்.

தென்னிலங்கைச் சிறைகளில் சுமார் இரண்டாயிரத்து இரு நூறு பேரளவில் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

எதுவிதமான விடுதலை அறிகுறிகளுமின்றியும் விசாரணையின்றியும் பல வருடங்களாக நம்பிக்கையிழந்து வாடும் கைதிகளுக்கு நம்பிக்கையூட்டும் அறிவித்தல் ஒன்றை உயர்நீதிமன்றம் விடுத்திருக்கிறது.

விசாரணைகளின்றிப் பல வருடங்களாகச் சிறையில் வாடுவோர் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறே உயர் நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த அறிவித்தல் கைதிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் மிகுந்த ஆறுதலளிக்கும் என்பது உறுதி. ■

## வீரச் சாவடைந்ததாகப் - புலிகள் அறிவிப்பு!

தற்செயலான வெடி விபத்துச் சம்பவத்திலும் இலங்கைப் படையினரின் தாக்குதல்களிலும் கடந்த சில நாட்களில் கொல்லப்பட்ட தமது உறுப்பினர்களின் விவரங்களைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

மன்னார் பரப்புக் கடத்தான் கடற்பரப்பில் இடம் பெற்ற தவறுதலான வெடி விபத்தில் நெடுங்கேணியைச் சேர்ந்த சு.சசிகுமார் (நித்தியன்), எழுது மட்டுவாளில் இடம்பெற்ற படையினரின் தாக்குதலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செ.மஞ்சுளா தேவி (எழில்) மற்றும் நா.யோகாம்பிகை (கீதா) ஆகியோரும் அங்கு நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அ.நகுலேஸ்வரி (அன்புமகள்) ஆகியோரும் கொல்லப்பட்டதாகப் புலிகள் அறிவித்துள்ளனர். ■

## புலிகளுக்கு செல்லிடத் தொலைபேசி வழங்கிய சமூகசேவை அலுவலர் கைது?

கல்முனை-தமிழ் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் ஒருவர் புலிகளுக்கு செல்லிடத் தொலைபேசி வழங்கியமையினால், விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.


இவர் மேலதிக விசாரணைக்காக அம்பாறை நாசத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். குறித்த நபரைக் கைது செய்தமை தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு விசேட அதிரடிப்படையினர் அறிவித்துள்ளனர்.

இவரது வங்கிக் கணக்கில் அதிக பணத் தொகையிருப்பதாகவும் படையினர் கூறுகின்றனர்.

ஏற்கெனவே கஞ்சி குடிச்ச ஆறு காட்டுப் பகுதியில் செல்லிடத் தொலைபேசியுடன் ஒரு புலி உறுப்பினர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதும் அவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கதிர்காமப் பகுதியிலுள்ள ஒரு தொலைத் தொடர்புக் கோபுரத்தின் மூலமாகவே புலிகள் கிழக்கு மாகாணத்தில் செல்டெல் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொள்ளும் தகவல் தமக்குக் கிட்டியிருப்பதாக படையினர் கூறுகின்றனர். ●

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



மாதவன் (நாதன்)-கதுசனன் | 2001.02.15

களுவாஞ்சிக்குடி 9ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜெயக்குமாரி-நாதன் தம்பதிகளின் செல்வப் புதல்வன் **கதுசனன்** தனது முதலாவது பிறந்தநாளை 2001.02.15 வியாழக்கிழமையன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை லண்டனில் வசிக்கும் அன்பு அப்பா நாதன், அம்மா, அக்கா மார்களான சுரேக்கா, மௌனிக்கா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா அத்தைமார், லண்டனில் வசிக்கும் சிறீ மாமா குடும்பம் மற்றும் சித்தப்பாமார், சித்திமார், மச்சாள்மார், அண்ணன்மார், அத்தான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் மதுரை மாரியம்மன் அருள் பெற்று, பல்கலையும் கற்று நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்கவென கதுசனனை வாழ்த்துகின்றனர்.

# மனோதத்துவ வைத்தியம்

**GENARAL PSYCHO THERAPHY**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் பெப்ரவரி 20 முதல் 25 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492

New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.

T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

**கல்முனையில் மார்ச் 03, 04 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் மார்ச் 10, 11 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019

DR.P.ARUMUGAM

NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

# உங்கள் பலன் எப்படி?

## ஏ.சுலேமான் - A. Suleman

உங்கள் சொந்தப் பலன் எப்படி? கைரேகை, நட்சத்திரம், பிறந்த நேரக் குறிப்பு பார்த்து, பலன்கள் சொல்வோம். காதல் கைகூட வைப்பது, வெளிநாட்டுப் பயணத்தடையை நீக்குவது, விரும்பியவரை மணமுடித்து வைப்பது, கணவன்-மனைவி பிரச்சனைகளைத் தீர்ப்பது.

- ★ நீண்ட காலமாக நீங்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள்
- ★ பரீட்சை பற்றிய பதட்டமா?
- ★ பிசாசு, சூனியம், சாபக்கேடு துர் அதிஷ்டங்களால் இடர்பட்டு அழுந்துகிறவர்களுக்கு ஒரே பார்வையில் ஆறுதல் கிடைக்கும்.

பிறந்த திகதி, பெயர்-மொழி-தமிழர்-சிங்களவர் எவராயினும் எல்லோர் பிரச்சனையையும் தீர்த்து வைப்பார். முன்னதாக (காலை 10.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை) நேரம் நிர்ணயிக்க வேண்டும். அல்லது எழுதலாம்.

**Mrs.Madiha, 78 Plashet Grove,**
**London. E 6 1AB.**
**T.P. 02085860922**

# 10ம் ஆண்டு நினைவு அஞ்சலி

மகிழ்வு ◎ 1981 ☼ 12 ☼ 18



நெகிழ்வு ◎ 1991 ☼ 02 ☼ 10

செல்வன் கந்தசாமி திவாகர் (திவாக்குட்டி)

| | |
|---|---|
| கண்ணின் இமையென நாம் | உனை நினைத்து |
| காத்திருந்த திவாக்குட்டியே | மனம் வெதும்புதே |
| துள்ளியோடும் பருவத்தில் | கண்ணீரால் உனை நாம் |
| உன்னை நாம் | பூஜிக்கின்றோம் திவாக்குட்டியே |
| எங்கோ தொலைத்தோமே! | அமைதியில் நீ வாழ |
| ஏங்குதே எம் அன்னை | உன்னில் நாம் வாழ... |
| தாங்குமோ எம் மனங்கள் | தகவல்: கமல் |
| வருடங்கள் பத்தும் | (சின்னண்ணா) |
| உருண்டோடி விட்டும் | தொலைபேசி: 501482 |

உலகப் புகழ்பெற்ற

# எக்ஸ் ஒயில்

- காய்ச்சல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

**SINGHA HOLDINGS (PVT) LTD**

**14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.**
**T.P : 888214 Fax : 682984**

# மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

Tel-466620, 466820 **தேவைகளுக்கு:-**

| உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி | கொழும்பில் | நுவரெலியாவில் |
|---|---|---|
| Dr.P.K.Saamy J.D.G.A. NL JP<br>Hon. Prof. (IUMA)<br>Sri Durgaadevi Manthirika<br>Uchchada Peedam. | No.162,<br>Kotahena Street,<br>Mayfield Road,<br>Colombo 13,<br>Sri Lanka. | 33, Daily Fair Complex,<br>Kandy Road,<br>Nuwara-Eliya.<br>052-22508, 052-35097. |

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka.com/drpksami.

# 13ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி.மரியதாஸ் பேனடேற் ராசாத்தி

மலர்வு ✧✧ 16.11.1944 ✱✱ உதிர்வு ✧✧ 07.02.1988 ✱✱ திதி ✧✧ 08.02.2001

அன்பின் திருவுருவே பண்பின் சிகரமே பாசத்தின் குலவிளக்கே உன் நலம் பேணாது எங்கள் நலம் காத்த திரு உயிரே எம்மை உயர் வழியில் உருவாக்கிய எங்கள் அன்புத் தெய்வமே, நீங்கள் மறைந்து ஆண்டுகள் 13ம் ஓடிவிட்டன ஆறவில்லை எம் துயரம் இன்னும், காயவில்லை எம் கண்ணீர் உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டு நீங்கா.

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்.

கணவன்: மரியதாஸ்

பிள்ளைகள்: சி.சுகந்தினி (France), எம்.கிளேறியன் டாஸ் (U.K), எஸ்.ஜேந்தினி (Germany), கே.சியாமினி (Germany), எம்.கொட்வின் (U.K), எம்.ஜெஸ்லின் (U.K), எம்.டொறின் டண்சினி (Colombo),

மருமக்கள்: கொண்சன், மோகன், கருணாகரன்.

மருமகள்: சி.ஷர்மிலி

பேரப்பிள்ளைகள்: சிரோமி, நிகோன், ரெனிசன், வினுஷா, மோனிஷா, டெனிசன், நிவேகா, சோபிகா.

மைத்துநர்கள், சகோதரர்கள்

தகவல்: வி.மரியதாஸ் (Colombo)

T.P: 527304
U.K T.P: 0044 2088104517
0044 7947793904

# கணினி வகுப்பு

பாலர் வகுப்பிலிருந்து தரம் மூன்று வரையான மாணவர்களுக்கு Pentium iii கணினியில் பயிற்சியளிக்கப்படும்.

வயதெல்லை : நான்கிலிருந்து எட்டு வரை

கட்டணம் : மணித்தியாலத்திற்கு ரூ 125/=

**TDM**

31A, Galpotha Street, Colombo 13. Sri Lanka
Tp. 074-613486, 078-686996

# தபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: **குமார் சிவப்பிரகாசம்**

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்

**P.T.C** 14, Covington Road, Batticaloa.

# ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,

Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON) நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக்குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

**காலம் : 21.02.2001-25.02.2001**

**இடம் : ஹோட்டல் கிறீன் லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.**

**தொலைபேசி : 585592, 581986.**

**HOTLINE : 077-602513.**

# வசிய வைத்தியம்

1945ம் ஆண்டு ஆரம்பித்த புனித சேவை (GOVT APPROVED) மட்டக்களப்பு-மலையாள-மாந்திரீக வசிய மருத்துவத்தினால், காதல் பிரச்சனைகளைத் தீர்த்து விரும்பியவர்களை சம்பந்தப்பட்டவர்களின் சம்மதத்துடன் திருமணம் செய்ய, கணவன்-மனைவி கருத்துவேறுபாடுகள் சந்தேகங்களை தீர்த்து பிரியாமலிருக்க, பிரிந்தவர்கள் வெறுப்பவர்கள், வேண்டியவர்கள் வந்து உறவாக, தகாத ஆண்-பெண் உறவை போதை வஸ்தை மறப்பிக்க, தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராதநோய், எதிரி தொல்லைகளிலிருந்து விடுபட-கண்ணூறு நாவூறு, சர்வதோஷ நிவர்த்தி சாந்தி பரிகாரங்கள் செய்ய, எத்துன்பங்களும் அணுகாமல் உடல் வீடு வளவு வியாபார இடங்களைக் காவல்செய்ய, திருமணம், கல்வி, தொழில், வியாபாரம், பொருளாதாரம், வெளிநாட்டுப்பிரயாணம் வேறுகாரிய வெற்றிக்கு "சகலகாரிய சித்தி இராயவசியங்கள்" செய்துகொள்ள தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகள், மனநோய், மருந்தீடு, பயம், பலவீனம், தாழ்வு மனப்பான்மை, கவலை, ரென்ஷன், இவைகளுக்கு சிறப்புச் சிகிச்சைபெற மட்டக்களப்பு கல்லடி குருசக்தி நிலையத்துக்கு (இந்தியன் வைத்தியசாலை) வரமுடியாதவர்கள் வெளிநாட்டவர்கள் தபால் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விஷேட தபாலில் எல்லா மதத்தினர்களுக்குமேற்ற தீங்கற்ற தெய்வீக புனித பரிகாரப்பொருட்களைப் பெற்று நியாயமான கோரிக்கைகளை உடன்நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

சுகாதார அமைச்சினால் பதிவுசெய்யப்பட்ட பதிவு இல: 061
ஹோமியோபதி, அக்குப்பங்சர், சித்த ஆயுர்வேத, மாந்திரீக, மனோவசிய, யோகசிகிச்சையாளர்

## டாக்டர்-"மந்திரயோகி"

R.P.H.M-D.Ac- (இலங்கை) P.I.S.M, (இந்தியா)

**GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)**

**KALLADY-BATTICALOA (P.O.) (SRILANKA)**

வெளிநாட்டு உள்நாட்டு தொ.பேசி: 065-24872



(YOGA) MY GURU

# திலகவதியார் மகளிர் இல்லம்

## THILAKAVADIYAR GIRLS HOME

(Kaluwanchikudi Branch)
Kaluwanchikudi, Batticaloa, Sri Lanka.
Phone No: 065-50189, Fax No: 065-50189.
E-mail: swo@ain lanka.com




அன்பான எம் இனிய தமிழ் உறவுகளே!

**வன்செயல் காரணமாக தாய் தந்தையை இழந்த ஆதரவற்ற குழந்தைகளை பராமரிக்க நிதி உதவி கோரல்**

மேற்படி இல்லமானது வடகிழக்கு மாகாணத்தில் வன்செயல் காரணமாக தாய் தந்தையை, தம் உறவுகளை இழந்த ஆதரவற்ற குழந்தைகளை அரவணைத்து அவர்களுக்கு கல்வி, உணவு, உடை, தங்குமிடம், சுகாதாரம் போன்ற அனைத்து வசதிகளையும் இலவசமாக வழங்கி பராமரித்து வருகின்றது.

2001 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. களுவாஞ்சிக்குடி கிளை இல்லம். ஆதலால் பொது மக்களினதும், நிறுவனங்களினதும் உதவிகள் மிகவும் அரிதாகவே உள்ளது. தற்போது இவ் இல்லத்தில் பல்வேறு இடங்களையும் சேர்ந்த 43 ஆதரவு இழந்த குழந்தைகள் தங்கியுள்ளனர். 100 ஆதரவு இழந்த குழந்தைகளுக்கு வாழ்வளிக்கும் நோக்கினிலே இத் திலகவதியார் மகளிர் இல்லக் களுவாஞ்சிக்குடி கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கின்ற எம் தமிழ் உறவுகள் இக் குழந்தைகளை தங்களது உடன் பிறப்புக்களாக நேசித்து அவர்களின் வளமான வாழ்விற்கு தங்களால் இயன்ற நிதி உதவியினை கீழ் உள்ள எமது வங்கிக் கணக்கிற்கு அனுப்பி மிகுந்த புண்ணியம் தரவல்ல புனித பணிக்கு உதவுமாறு தங்களை மிக்க தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இறந்த ஆத்மாக்களின் நினைவாக அல்லது தங்கள் பிள்ளைகளின் பிறந்த தின நினைவாக அல்லது வேறு ஏதும் நினைவாகவும் எமது பாதுகாப்பில் உள்ள குழந்தைகளுக்கு பணம் அனுப்பி ஒருநாள் உணவு வழங்கலாம்.

நன்றி

Social Welfare Organization,
A/C No: 20275
People's Bank,
Kaluwanchikudi. (E.P)

இவ்வண்ணம்,
நிருவாகிகள் சார்பாக,
இல்லத் தலைவர்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பேச்சுவார்த்தை மேசையில்



## ஆட்டத்துக்குத் தயாராகும் அரசியல் சதுரங்கம்

**நரன்**

இலங்கையின் இனப் பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியுமென்ற நம்பிக்கையின்றியே பேச்சுவார்த்தையென்பது ஏதோ ஒரு சம்பிரதாயக் கழிப்பினைபோல ஆரம்பிப்பதற்கான நிலைமைகள் தோன்றியுள்ளன. தோன்றியுள்ளன என்பதைவிட ஏற்படுத்தப் பட்டுள்ளன என்பதே சரி.

தோன்றுவதென்றால்கூட அதற்கான பக்குவமுற்ற சூழ்நிலையொன்றிலிருந்தே தோற்றம் பிறக்கும்.

பூ தோன்றினால்தான் காய் தோன்றும். காய் தோன்றினால்தான் பழம் தோன்றும். அதாவது ஒன்றுதான் இன்னொன்றாகும்.

ஒன்றுமில்லாததிலிருந்து ஒன்றும் உருவாகாது.

இந்தப் பேச்சுவார்த்தையும் அப்படித் தான்.

இரு தரப்பும் ஒன்றையொன்று வெறுக்கின்ற, ஒன்றையொன்று நம்பத் தயாரில்லாத நிலையில், பகைமையின் உச்சக்கட்டத்திலிருந்து கொண்டே பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க விழைகின்றன.

இருதரப்பும் ஒன்றையொன்று வீழ்த்திடக் கட்டிப்பிடித்துப் புரட்ட முயலும் 'சுமோ' மல்யுத்த வீரர்களைப்போல நின்றபடி சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது நம்பகமானதல்ல.

நாம் பேச்சுவார்த்தையை வரவேற்கலாம், தீர்வுகிட்ட வேண்டுமென்று விரும்பலாம்.

ஆனால் அந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்குமா என்பதற்கான அறிகுறிகள் எதையும் காணாமல் கண்மூடித்தனமாக இதனை நம்பியிருப்பது எம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்கே வழிசமைக்கும்.

எனவே இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு இருதரப்பையும் இட்டு வந்த காரணிகள் என்ன, இவ்விருதரப்புக்கும் இதில் உள்ள நோக்கங்கள், தேவைகள் என்ன, இவற்றுக்கு மத்தியில் இப்பேச்சுவார்த்தையில் ஈட்டக்கூடிய பெறுபேறுகள் என்ன என்பதை நாம் ஆழமாக அலசிப் பார்த்தால்தான், இதையிட்டு ஒரு நிதானமான மதிப்பீட்டை நாம் அடைய முடியும்.

இன்று பல்வேறு தரப்பினரும் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டுமென வலியுறுத்துவது உண்மையே.

அது ஒரு சமூக அக்கறை மிக்க முயற்சியென்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆனால், அது வெறும் பாமரத் தனமான நப்பாசையாக மட்டுமே கழிந்து விடக்கூடாது என்பதே இங்கு முக்கியமான விடயம்.

அதனால் பேச்சுவார்த்தை என்று மொட்டையாக குரலெழுப்புவதைவிட ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையாக அது அமைவதில் அக்கறை கொள்வதுதான் அவசியம்.

பேச்சுவார்த்தைகள் எமது வரலாற்றில் அண்மையிலும் சேய்மையிலும் பல நிகழ்ந்து கழிந்திருக்கின்றன.

ஆனால் அவை முறிவுகளையே சந்தித்தன.

அந்த முறிவுகளின்பின் ஒவ்வொரு தடவையும் யுத்தம் இன்னும் மூர்க்கமான கட்டத்துக்குச் சென்று அழிவுகள் இன்னும் பலமடங்கு அதிகரித்து, சமாதானத்துக்கான அறிகுறி இன்னும் நெடுந்தூரம் பின்தள்ளப் பட்டுப்போனதே வரலாறு.

பேச்சுவார்த்தை அவசியமே. ஆனால் அது முறியாதிருப்பது அதைவிட அவசியம்.

எனவேதான் நாம் இப்போதைய பேச்சுவார்த்தையின் கருவறையை சற்று ஆராய்ந்து பார்ப்பது அவசியம்.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் விரும்பி முன்வந்தனவா?

இல்லை.

இலங்கை அரசாங்கத்துக்கு விடுதலைப் புலிகளில் எந்த நம்பிக்கையும் இல்லை.

குறிப்பாக, விடுதலைப் புலிகளின் படுகொலை முயற்சியில் மயிரிழையில் உயிர்த்தப்பி தனது ஒன்றைக் கண்ணை இழந்த ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு புலிகளின்மீது வெறுப்புத்தான் அதிகமேயன்றி அவர்களில் எந்த மதிப்பும் இல்லை.

இதேபோல் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்தில் நம்பிக்கை இல்லை.

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையில், இதுவரை இருந்த அரசாங்கங்களில் மிக மோசமான அரசாங்கம் சந்திரிக்காவின் அரசாங்கமே யென்றும், இவ்வரசாங்கம் பேச்சுவார்த்தைகளுக்கு வந்து நியாயமான அரசியல் தீர்வை வழங்க முன்வருமென்பது சந்தேகமே யென்றும் கூறியிருந்தார்.

எனினும் இரு பகுதியும் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்பதை மட்டும் எப்போதும் கூறி வருகின்றனர்.

ஏன் அவ்வாறு கூறுகின்றனர் என்பது தான் முதற் கேள்வி.

ஏனெனில் இன்றைய உலகில் பேச்சுவார்த்தைகளுக்கூடாகவே இவ்வாறான இனப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்ற அபிப்பிராயம் மேலோங்கியுள்ளது.

யுத்தத்தை தீர்வுக்கான வழிமுறையாக சர்வதேச சமூகம் ஏற்கப்போவதில்லை.

இலங்கைப் பிரச்சனை குறித்து அபிப்பிராயம் கூறியுள்ள பல நாடுகளும் பேச்சுவார்த்தைக்கூடான ஓர் இணக்கத் தீர்வையே வலியுறுத்தி வருகின்றன.

எனவே அவற்றின் விருப்பத்துக்கு மாறான ஒரு போக்கை இலங்கை வெளிப்படுத்தினால் அதற்கு சர்வதேச ரீதியில் அவப்பெயர் ஏற்படுவதுடன் அதற்கு கிட்டும் பல வெளிநாடுகளின் உதவிகளும் குறைய நேரிடலாம்.

எனவே தான் எப்போதும் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகவும், எதிர்த்தரப்புத்தான் யுத்தத்துக்கான அவசியத்தை ஏற்படுத்துவதாகவும் தன்னை நியாயப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை அதற்கு உள்ளது.

இதேபோல்தான் விடுதலைப் புலிகள் பக்கத்திலும் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்ற கருத்தை வெளிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

பேச்சுவார்த்தையை மறுதலித்தால், உலகம் அவர்களை தீர்வுக்கு முன்வராத ஒரு வன்முறைக் குழுவாக இனங்காண விழைந்துவிடும் என்ற எச்சரிக்கை உணர்வு அவர்களுக்கு உள்ளது.

அத்தோடு புலிகளைப் பொறுத்தவரை இப் பிரச்சனைக்குத் தமிழீழம்தான் தீர்வு எனக் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை அது நியாயப்படுத்தக் கூறும் காரணம் தமிழீழத்தைக் கைவிடக்கூடிய மாற்றுத் தீர்வு ஒன்றை அரசாங்கம் முன்வைக்கத் தயாரில்லை என்பதே.

அவ்வாறான மாற்றுத் தீர்வொன்று முன்வைக்கப்பட்டால் தான் ஆராயத் தயார் என்று கூறும் புலிகள் அதையிட்டுப் பேசுவதற்கு முன்வரக்கூடியவர்களாகவே எப்போதும் தம்மை வெளிப்படுத்த வேண்டிய கடப்பாட்டுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

எனவே 'பேசத் தயார்' என்று கூறுவது ஒரு நாகரீகமாகவே ஆகிவிட்டது.

ஆனால் அது ஓர் உண்மையான உள்ளக்கிடையாக வெளிப்படுகின்ற நிலைமை இன்னும் ஏற்படவில்லை.

ஆனால் இரு தரப்புக்கும் பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டிய பல நிர்ப்பந்தங்கள் எழுந்துள்ளன.

அவை என்ன நிர்ப்பந்தங்கள் என்று நாம் பார்ப்போமேயானால்,

முதலாவதாக இலங்கையின் இனப்பிரச்சனை உள்நாட்டு விவகாரம் என்பதைக் கடந்து படிப்படியாக சர்வதேச விவகாரமாக உருவெடுத்து வருகின்றது.

இவ்வாறு சர்வதேச விவகாரமாக உருவெடுத்த பல உலக நாடுகளின் பிரச்சனைகள் தீர்க்கப்பட்ட, அல்லது முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட விதங்கள் பற்றிய கசப்பான சர்வதேச அனுபவங்களை இலங்கை அறிந்துள்ளது.

அத்தகைய ஒரு நிலைக்கு இப் பிரச்சனை சென்றுவிடுமேயானால் இலங்கையின் இறைமை பற்றிய இறுமாப்பெல்லாம் தவிடு பொடியாகி, வல்லமை கொண்ட வெளிநாடுகளின் தலையீடுகளுக்கு இலங்கை உள்ளாக வேண்டுமென்பதுடன், மறுபுறம் விடுதலைப் புலிகள் மீதும் நிர்ப்பந்தங்களும் அதிகாரங்களும் செலுத்தப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகிவிடும்.

இவ்வாறான ஓர் அனுபவம் ஏற்கெனவே இரு தரப்புக்கும் இந்தியத் தலையீடு மூலம் கிடைத்திருக்கிறது.

எனவே அத்தகைய ஒரு நிலைக்குச் செல்லாதிருப்பதற்கு இவர்கள் தாமாகவே ஒரு பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

அத்துடன், இவ்வாறு இருதரப்பும் ஒருவரையொருவர் கடுமையாக விரோதித்துக் கொண்டும் பலத்த சந்தேகங்களுடன் நோக்கிக் கொண்டும் ஒரு பேச்சுவார்த்தைக்கு வருவதில் உள்ள சிரமம் காரணமாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்று அவசியப்பட வேண்டியதாகிவிட்டது.

இலங்கை, நீண்ட காலமாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நிராகரித்தே வந்தது.

இது உள்நாட்டுப் பிரச்சனை, இதற்கு வெளிநாடுகளின் தலையீடு தேவையில்லை என்பதே அதன் நிலைப்பாடாக இருந்து வந்தது.

விடுதலைப் புலிகளும் இந்தியத் தலையீட்டின்போது இதையே தெரிவித்திருந்தனர்.

இரு சகோதரர்களுக்கு இடையிலான பிரச்சனை. இதில் வெளிநாட்டுத் தலையீடுகள் தேவையில்லை என்று கூறியே இந்திய அமைதிப்படையை வெளியேற நிர்ப்பந்தித்தனர்.

ஆனால் இன்று, இந்தியா வெளியேறிய பின், மீண்டும் இச் 'சகோதரர்கள்' ஒருவரையொருவர் நம்பத் தயாராக இல்லை.

எனவே தான் வெளிநாட்டு மத்தியஸ்தம் ஒன்று அவசியப்பட்டது.

அவ்வாறான மத்தியஸ்தராக நோர்வே நாடு முன்வந்தபோது, இரு தரப்பும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

இது இன்று கடுமையாக இல்லாவிட்டாலும் ஏதோ ஒரு வகையில் சர்வதேச சமூகத்தின் நிர்ப்பந்தத்துக்கு வழிகோலும் முதற் படியாக அமைந்துள்ளது.

இந்நிலையில் இலங்கைக்குத் தன்னை ஒரு ஜனநாயகப் பாரம்பரியம் கொண்ட நாடாக நிலைநிறுத்த வேண்டிய தேவையும், விடுதலைப் புலிகளுக்குத் தமது போராட்டத்தை சர்வ தேச சமூகத்துக்கு நியாயப்படுத்த வேண்டிய தேவையும் இப் பேச்சுவார்த்தைகளுக்கு மறுபக்கத்தில் அமைந்துள்ளது.

அத்தோடு இலங்கை பெருமளவு வெளிநாட்டு நிதி உதவிகளில் தங்கியிருக்கும் ஒரு நாடாக உள்ளதால், அத்தகைய நிதி உதவி வழங்கும் நாடுகளின் நம்பிக்கையைப் பெற வேண்டிய அவசியம் அதற்கு உள்ளது.

எனவே, பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணும்படி வலியுறுத்தும் இந் நாடுகளைத் திருப்திப்படுத்தும் அரசியல் நடவடிக்கையாகவும் அது பேச்சுவார்த்தைகளுக்கு முன்வர வேண்டியுள்ளது.

ஆனால் இப் பேச்சுவார்த்தைகளில் தீர்வு ஏற்படுவதற்கான எந்த அடிப்படைகளையும் காண முடியவில்லை.

ஏனெனில், அரசாங்கம் முன் வைக்கும் தீர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அதை அவர்கள் ஏற்கெனவே நிராகரித்து விட்டார்கள்.

அவர்கள் கடந்த பாராளுமன்றத்தின் இறுதியில் அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற முடியாது கைவிரித்த தீர்வுத் திட்டத்தை மட்டுமல்ல, அதற்கு முன்னர் 1997ல் வெளியிட்ட தீர்வுத்திட்டத்தையும் நிராகரித்து, அதற்கும் முன்னர் 1995ல் சந்திரிக்காவால் முதன் முதலாக வெளியிடப்பட்டு, தமிழர் விடுதலை கூட்டணியுட்பட சகல தமிழ்க் கட்சிகளாலும் தீர்வுக்கான அடிப்படையாக ஏற்றுக்கொள்ளக் கூடியதெனக் கருதப்பட்ட தீர்வுத் திட்டத்தையே நிராகரித்திருந்தார்கள்.

அப்படியிருக்க, அரசாங்கம் இப்போது பேச்சுவார்த்தைக்கான அடிப்படையாக முன்வைக்கின்ற அதன் இறுதித் தீர்வுத் திட்டத்தை அவர்கள் ஏறெடுத்தும் பார்க்கப் போவதில்லை.

இதேவேளை புலிகள் கோரக்கூடிய ஒரு தீர்வு வடிவத்தை இலங்கை அரசாங்கமும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

அப்படியான ஒன்று நிச்சயம் ஒற்றையாட்சிக்கு உட்பட்டதாக இருக்காது என்பதால் அதற்கான புதிய அரசியல் யாப்பை உருவாக்கி அமுலாக்கக்கூடிய மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் பாராளுமன்றத்தில் அரசாங்கத்திடம் இல்லை.

இப்போது பேச்சுவார்த்தையை வலியுறுத்தும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிகூட ஒற்றையாட்சியை மாற்றும் ஒரு தீர்வுக்கு உடன்படப் போவதுமில்லை.

இதேவேளை புலிகள் இதுவரை தனிநாட்டைத் தவிர எந்தவொரு மாற்றுத் தீர்வையும் தம்மால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வாக முன்வைத்ததில்லை.

புலிகளைப் பொறுத்தவரை 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்பதுதான் சத்திய வாக்கியம்.

தமிழீழ இலட்சியத்துக்காகத்தான் அவர்களின் எண்ணிறந்த போராளிகள் தமது உயிர்களை அர்ப்பணித்துள்ளனர்.

இதில் பலர் தற்கொலைப் போராளிகளாகவும் தம்மை மாய்த்துக்கொண்டுள்ளனர்.

தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்தை சுட்டபோதுகூட, "அவர் தமிழீழத்தைக் கைவிட்டுவிட்டதால்தான் அவருக்கு இத் தண்டனை, நாளை பிரபாகரன் தமிழீழத்தைக் கைவிட்டால் அவருக்கும் அதே தண்டனைதான்" என்று புலிகளின் தலைவர் பிரபாகரன் தெளிவாகக் கூறியிருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உட்பட தமிழீழத்தைக் கைவிட்ட ஏனைய இயக்கங்களையும் கட்சிகளையும் துரோகிகள் என்றே புலிகள் கூறி வருகிறார்கள்.

எனவே தமிழீழத்துக்கு மாறான ஒன்றை புலிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய மன நிலையில் மட்டுமன்றி அந்தளவு இராணுவ ரீதியான பலஹீனத்தை எய்திய நிலையிலும், இப்போது இல்லை.

இந்நிலையில் உண்மையில் புலிகளும் சரி அரசாங்கமும் சரி ஒரு தரப்பின் மீது மறுதரப்புக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் இப் பேச்சுவார்த்தையை தத்தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவே விழைகின்றன.

அரசாங்கமோ, தன்னை ஒரு சமாதான விரும்பியாகக் காட்டி வெளிநாடுகளைத் திருப்திப்படுத்துவது, வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ள வழிவகுப்பது, அத்தோடு புலிகளை இணைக்கத்துக்கு வரமுடியாதவர்களாக அம்பலப்படுத்தி யுத்தத்தை நியாயப் படுத்துவது என்பவற்றுக்கு இப்பேச்சு வார்த்தையைப் பயன்படுத்துவது எப்படி என்று திட்டமிடுகிறது.

அதேவேளை விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கத்தை எந்த ஒரு நியாயமான தீர்வையும் முன்வைக்க முடியாதவர்களாகக் காட்டுவதற்கு இப்பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்த முனைந்தாலும் அதைவிட வேறு சில அவசியமான உடனடி நோக்கங்களும் உண்டு.

அதில் மிக அவசரமான விடயம் பிரித்தானியா புலிகளைத் தடை செய்வதைத் தடுக்க இப் பேச்சுவார்த்தையைப் பயன்படுத்துவதாகும்.

பிரித்தானியா தம்மைத் தடை செய்தால் இப் பேச்சுவார்த்தைகள் குழம்புமெனவும், அதனால் இலங்கையின் இனப்பிரச்சனையில் தீர்வு ஏற்படுவதற்கு பிரிட்டன் ஒரு தடையாக ஆகிவிடுமெனவும், பிரித்தானியாவின் நட்பு நாடான நோர்வேயின் ஒரு நல்ல முயற்சிக்கு முட்டுக் கட்டையாகி விடுமெனவும் கூறி இப் பேச்சுவார்த்தையையே பிரித்தானியத்தடைக்கு ஒரு கேடயமாக மாற்ற முனைந்துள்ளனர்.

புலிகளைப் பொறுத்தவரையில் தமது சர்வதேசத் தளத்தைக் காப்பாற்றிக் கொள்வதே இன்று தலையாய விடயமாகவுள்ளது.

இதைவிட தற்போது வடக்கு, கிழக்கு புனர்வாழ்வுக்கும் தமிழர் விவகாரத்துக்கும் புதிய அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற தமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்தவும், இத்தகைய எத்தனங்களைப் பலஹீனப்படுத்தவும், தமக்கான அங்கீகாரத்தை அது நிலைநாட்ட வேண்டியுள்ளது.

அதனால் தன்னை தமிழ் மக்களின் பிரதிநிதியாக முன்நிறுத்தும் ஒரு வழிவகையாக இத்தகைய பேச்சுவார்த்தையை அது பயன்படுத்த விழைகிறது.

இதைவிட யாழ். குடாநாட்டில் இராணுவம் மேற்கொண்டுவரும் ஆனையிறவை நோக்கிய படை நகர்வைத் தற்காலிகமாகக் கைவிட வைக்க வேண்டிய தேவையும் அதற்கு உள்ளது.

ஆனையிறவைக் கைப்பற்றியபோது புலிகளின் பலம் பற்றியும், அவர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவார்கள் என்ற நம்பிக்கை பற்றியும் தமிழ் மக்களிடையே உணர்வலைகள் மங்கிப்போவதை அவர்கள் விரும்பவில்லை. தம்மை தயார்படுத்திக் கொள்ளும்வரை ஆனையிறவு நோக்கிய இராணுவத்தின் படை நகர்வைத் தாமதிக்க வைக்க இப் பேச்சுவார்த்தைகள் பயன்படுமாவெனவும் அவர்கள் முயல்கிறார்கள்.

இவ்வாறான விடயங்கள் உள்ளோடிக் கொண்டிருக்க, இப் பேச்சுவார்த்தையில் அரசியல் ரீதியான சதுரங்கத்துக்கும் புலிகள் தயாராகிவிட்டார்கள்.

அரசாங்கம் புலிகளை அன்றாடப் பிரச்சனைகளைக் கதைப்பதை விடுத்து அரசியல் பிரச்சனைகளைக் கதைக்க வேண்டுமெனச் சுட்டிக்காட்டி வருவதால் இம்முறை அவர்கள் அதற்கும் தம்மைத் தயாராக்கிக் கொண்டார்கள்.

அவர்கள் பேச்சுவார்த்தையின் அடிப்படையாக எந்தவொரு மாற்றுத் தீர்வையும் முன்வைக்கவில்லை. அப்படி வைத்தால் அது அவர்கள் தமிழீழத்தைக் கைவிட்டு விட்டதாக ஆகிவிடும்.

அதனால் அவர்கள் சில அடிப்படைக் கோட்பாடுகளை இப்போது விதித்துள்ளார்கள்.

அவை திம்புப் பேச்சுவார்த்தைகளில் தமிழ்த் தரப்பினரால் விதிக்கப்பட்ட நான்கு கோட்பாடுகளில் மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமை பற்றியவிடயத்தைத் தவிர்த்த மற்றைய மூன்றுமாகும்.

தமிழ்த் தாயகக் கோட்பாட்டையும் அதன் பிராந்திய இறைமையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்' தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமென்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்

அவர்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பனவே அந்த மூன்று கோட்பாடுகளுமாகும்.

ஆக, 15 வருடங்களின்பின் இக் கோட்பாடுகள் மீண்டும் ஒருமுறை பேச்சுவார்த்தை மேசைக்கு எடுத்துவரப்படவுள்ளன.

புலிகள் இந்த அரசியல் காய்களை நகர்த்துவார்களானால் அரசாங்கம் அதை எவ்வாறு முறியடிக்கப் போகிறது என்பது கேள்வியே.

ஏனெனில் இதை மிக நுட்பமாகக் கையாளக்கூடிய அரசியல் பக்குவம் அவர்களுக்கு உள்ளதா அல்லது அவசரப் புத்தியும் திமிரும் ஆத்திரக் குணமும் முன்னெழுந்து அவர்களை வீழ்த்திவிடப் போகிறதா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்று.

எவ்வாறாயினும் இந்த ஆட்டங்களெல்லாம் ஆரம்பமாவது, பிரித்தானியா புலிகளைத் தடை செய்யும் விவகாரம் எப்படித் தீரப் போகிறதென்பதிலேயே இப்போது தங்கியுள்ளது.

இதன் பாதகமான விளைவுகளால் ஒருவேளை ஆட்டம் ஆரம்பமாகாமலே, கலைந்து போகவும் கூடும்.

## செய்திச் சிதறல்

★ ஒரு கோடி ரூபாவுக்கதிகமான தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி கையாடப்பட்ட விவரம் வெளியாகியிருக்கிறது. இது விடயமாக 50க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்ததைக் கொண்டு பொலிஸ் மோசடித் தடுப்புப் பிரிவு மூவரைக் கைது செய்துள்ளது. இவர்களில் ஒருவர் ஊழியர் சேமலாப நிதி அலுவலக ஊழியராவார். மோசடியான வகையில் ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் போலி அடையாள அட்டைகளும், வேறுபல தஸ்தாவேஜிகளும் இவர்களால் தயாரிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகவும், தொடர்ந்து விசாரணைகள் இடம் பெறுவதாகவும் பொலிஸ் மோசடிக் குற்றத் தடுப்புப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ஜயரட்ண மனம்பேரி தெரிவித்தார்.

★ வடக்கு -கிழக்குப் போர் முனையில் கொல்லப்பட்ட படைவீரர்களின் ஞாபகார்த்தமாக தென்னிலங்கையில் பஸ் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமது அன்புக்குரியவர்களைப் போரில் பறிகொடுத்த அவர்களது உறவினர்கள் தமது பகுதிகளில் பஸ் தரிப்பிடங்களை அமைத்து மன ஆறுதலை தேடிக் கொண்டுள்ளனர். தென்னிலங்கையில் உள்ள சிங்கள ஊர்களுக்குள் நுழையும்போது ஆங்காங்கே இறந்த படைவீரர்களின் ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பஸ் தரிப்பிடங்களைக் காணமுடிகிறது. வடக்கு-கிழக்கில் கொல்லப்பட்ட புலிகளின் ஞாபகார்த்தமாக புலி இயக்கத்தினர் தமது உறுப்பினர்களை மாவீரர் துயிலும் இல்லங்களில் அடக்கம் செய்து வருகின்றனர். என்பதும் மாவீரர் துயிலும் இல்லங்களைப் புலிகள் மெருகூட்டிப் பாதுகாத்து வருகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

★ சுதந்திர தினமான பெப்ரவரி 4ம் திகதியன்று ஐக்கிய தேசியக் கட்சியினர் கண்டி மாநகரிலிருந்து கொழும்பு வரையிலான பாதயாத்திரை ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றினை நடத்தியது. இதில் பல்லாயிரக்கணக்கான அக்கட்சியின் ஆதரவாளர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர். நாட்டில் இன்று நிலவும் பொருளாதாரச் சீர்கேடு, விலைவாசி ஏற்றம் போன்றவற்றினால் மக்கள் படும் துயரத்தை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென சுட்டிக் காட்டியே இந்த ஊர்வலம் நடத்தப்பட்டதாக அக்கட்சியினர் தெரிவித்தனர். கடந்த 9ம் திகதி வெள்ளிக்கிழமையன்று கொழும்பு மாநகர முன்றலில் இவ்வூர்வலம் வந்தடைந்தபோது, கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஒரு பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

★ ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேறி பொ.ஐ.முன்னணிக்கு ஆதரவு தெரிவித்து வரும் குழுவினர் ஒன்று சேர்ந்து 'ஐக்கிய தேசிய மாற்றுக் குழு முன்னணி' என்ற பெயரில் ஒரு புது அரசியல் கட்சியை அமைத்துள்ளனர்.

★ பண்டாரவளை பிந்துனுவெவ தடுப்பு முகாமில் நடத்தப்பட்ட படுகொலைகள் தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த 19 பொலிஸாரில் நால்வர், பண்டாரவளை மஜஸ்டிரேட்டினால் கடந்த திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். இவர்களுக்கெதிராக எக்குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை என்பதினால இவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஏனையோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

★ சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பைச் சுற்றியுள்ள நீர் ஏரிகளிலும் பல தமிழர்கள் கொலை செய்யப்பட்டு சடலமாக மிதந்தனர். இதுதவிர; வந்தாறுமூலை அகதி முகாமிலிருந்து படையினரால் அழைத்து செல்லப்பட்ட நூற்றுக் கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டு அடையாளமே தெரியாத வகையில் அவர்களுடைய உடல்கள் தீயினால் சுட்டுப் பொசுக்கப்பட்டன. இச்சம்பவங்கள் தொடர்பாக சீருடையினர் பலர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு கைதானவர்கள் தற்போது எங்கிருக்கிறார்கள்; அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் என்னவாயின என்பதை பற்றியெல்லாம் எதுவுமே தெரியவில்லை. இவ்வாறு பிந்துனுவெவ சம்பவம் தொடர்பாக கைதானவர்கள் பற்றிய செய்தியை வாசித்த ஒருவர் வினா எழுப்பினார்.

# அண்டை மண்டலத்தில்....

**புலி** வருது, புலி வருது கதை இறுதியில் உண்மையாகி விட்டது. பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் அ.இ.அ.தி.மு.க. அணிக்குத் தாவிவிட்டார். சட்ட மன்றத் தேர்தல்களுக்கு இன்னமும் இரண்டு மாதங்களே இருக்கின்ற சூழலில் ராமதாசின் தடாலடி முடிவு தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., இரண்டு அணிகளிலும் ஏகப்பட்ட குழப்பத்தை உருவாக்கியிருக்கிறது.

இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் பாரதீய ஜனதா இடம்பெறும் அணியினை தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கில், எல்லாவற்றையும் ஜீரணித்துக் கொண்டு அ.இ.அ.தி.மு.க வுடனேயே இருந்து விடலாம் என்று முடிவு செய்துவிட்டன. ஆனால் காங்கிரஸிற்கும், த.மா.கவிற்கும் பல்வேறு பிரச்சனைகள். அவை என்ன செய்யப்போகின்றன என்பது தெளிவாகவில்லை.

பா.ம.க. இழப்பை எப்படி ஈடு செய்வதென்று தி.மு.க. அணியில் கலக்கமிருக்கிறது. ராமதாஸ் ஏன் தி.மு.க. அணியை விட்டு விலக வேண்டும்? மத்தியில் தனக்கிருந்த இரு அமைச்சர்களையும் ஏன் இழக்க வேண்டும்?

கருணாநிதி தன்னை அலட்சியப்படுத்துகிறார், தன் கட்சிக்காரர்களை ஒடுக்குகிறார், வாழப்பாடியை தன்மீது ஏவி விடுகிறார்-என்று தொடர்ந்து அவர் குற்றம்சாட்டி வந்தார். பா.ம.கவின் இரு மத்திய அமைச்சர்கள் இராஜினாமா செய்து, தேசீய ஜனநாயகக் கூட்டணியிலிருந்தும் பா.ம.க. விலகுகிறது என்ற அறிவிப்பு வந்த மறுநாள் சென்னையில் பத்திரிகையாளர்களை சந்தித்த டாக்டர் ராமதாஸ், அதே குற்றச்சாட்டுக்களைத்தான் மீண்டும் தொடுத்தார்.

தனது கட்சியைச் சேர்ந்த 21 பேர் தேசீய பாதுகாப்புச் சட்டத்தின் கீழும், மேலும் அறுவர் குண்டர்கள் சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், எத்தனையோ முறை வேண்டிக் கொண்டும், கருணாநிதி அவர்களை விடுதலை செய்ய மறுத்துவிட்டதாகவும் கூறினார் ராமதாஸ்.

கடந்த ஆண்டு திடீரென்று வாழப்பாடி ராமதாசை எதிர்த்து ஒரு பிரசாரத்தை துவக்கினார். அவர் மீது பல்வேறு புகார்களைச் சுமத்தி, அவற்றைத் தொகுத்து ஒரு புத்தகமாகவே வெளியிட்டார். வன்னியர் தலைவர்கள் சிலருடன் அணிசேர்ந்து, ஒரு புதிய இயக்கத்தை உருவாக்கப்போவதாக அறிவித்தார். வன்னியர்களை ராமதாசிடமிருந்து காக்கப்போவதாக பிரகடனமும் செய்தார்.

ஒன்றும் எடுபடவில்லை. ஓரிரு நிகழ்ச்சிகளுக்குப் பிறகு கடையை மூடிவிட்டார்கள். தான் ராமதாசின் காலைச் சுற்றிய பாம்பு, கடிக்காமல் விடமாட்டேன் என்று முழங்கிய வாழப்பாடி தனது பிரசாரத்தையும் நிறுத்திக் கொண்டார்.

தி.மு.கவின் ஆசியோடுதான் வாழப்பாடி செயல்பட்டார் என்றே எல்லோரும் நம்பினார்கள். ராமதாஸ் கருணாநிதியிடமும், பிரதமர் வாஜ்பேயியிடமும் வாழப்பாடியை கூட்டணியிலிருந்து விலக்கவேண்டும் என்று மறுபடி கேட்டுக் கொண்டும், அவர்கள் மசிவதாகத் தெரியவில்லை.

மேடைமொழியில் கூறுவதானால், வாழப்பாடிக்குப் பின்னால் அவரது நிழல்கூட வராது, அப்படியிருக்கையில் வன்னியர்களிடையே நல்ல செல்வாக்கு பெற்றிருக்கும் ராமதாசை பகைத்துக் கொண்டு, வாழப்பாடியை ஏன் அரவணைக்கவேண்டும்? கருணாநிதியின் வற்புறுத்தலின்பேரிலேயே வாஜ்பேயி அப்படி நடந்து கொண்டதாக கூறப்பட்டது. ராமதாசை கருணாநிதி ஏன் அந்த அளவு மட்டம்தட்ட நினைக்கிறார் என்றால், அதில் ஒரு சூச்சுமம் இருக்கிறது.

தி.மு.க. தென்மாவட்டங்களில் வேகமாகக் கரைந்து கொண்டிருக்கிறது. தேவர்கள் அ.இ.அ.தி.மு.க. பின்னால், ஒரு சிலர் பா.ஜ.கவுடன். நாடார்கள் த.மா.காவின் பின்னால். மரமேறும் தொழிலாளர்கள் புதிய தமிழகத்துடன். இப்படி முக்கிய சாதிகளில் பெரும்பாலானோர் வெவ்வேறு கட்சிகளை ஆதரிக்கின்றனர். பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து, இடைநிலைச் சாதியினரை ஓரணியில் திரட்டிய தி.மு.க., ஒவ்வொரு சாதியும் தன்தன் வழியே சென்று கொண்டிருப்பதைப் பார்த்து திகைத்து நிற்கிறது.

இந்நிலையில் வடமாவட்டங்களில்தான் தி.மு.க. தன் செல்வாக்கினை தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. அதாவது வன்னியர்கள் மற்றும் வேறு சில சாதியினரின் ஆதரவு தி.மு.கவிற்கு தொடர்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியோ தன்னை வன்னியர்களின் ஒரே பிரதிநிதி என்று கூறிக்கொள்கிறது. அப்படிப்பட்டதொரு கட்சி வளர்வது தி.மு.கவிற்கு பிடிக்காது தானே? எனவே முடிந்தவரை பா.ம.க. வளர்ச்சியினை தடுத்து நிறுத்தும் முயற்சி.

1991ல் பெருந்தோல்வியை எதிர்நோக்கியிருந்த வேளையிலும் கருணாநிதி பா.ம.கவை தன் அணியில் சேர்த்துக் கொள்ள முன்வரவில்லை. உங்கள் அணிதான் சற்று பலவீனமாக இருப்பது போன்று தெரிகிறதே. நீங்கள் ஏன் பா.ம.கவை சேர்த்துக்கொள்ளக் கூடாது, ராமதாஸ் தயாராக இருக்கிறார் என்று கூறியபோது, அவர் 'அதெப்படி முடியும் அவர் 40, 45 இடங்களையல்லவா கேட்பார்' என்றார் கலைஞர்.

ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் இடைத்தேர்தல்கள் வந்தபோது மறுபடியும் தி.மு.கவை பா.ம.க தானாகவே ஆதரிக்க முன் வந்தது. "எங்களை ஆதரியுங்கள்" என்று கலைஞர் கேட்டுக்கொண்டால் போதும், "எங்களுக்கு இடம் ஏதும் வேண்டாம்" என்று தூது அனுப்பினார் ராமதாஸ். கலைஞரோ "இப்போதுதான் ம.தி.மு.க. பிரிந்து சென்றிருக்கிறது, இந்த நேரம் பா.ம.க. ஆதரவினைக் கோரினால் நான் பலவீனப்பட்டிருக்கிறேன் என்று நானே ஒத்துக் கொள்வதாகும், எனவே இப்பேது பா.ம.க. ஆதரவைக் கோர மாட்டேன்" என்றார்.

91ம் ஆண்டு தேர்தல்களிலும் தோற்றார், பின்னர் இடைத்தேர்தல்களிலும் தோற்றார், ஆனாலும் அதைப்பற்றி கலைஞர் அதிகம் கவலைப்படவில்லை. பா.ம.க. வளர்ந்துவிடக் கூடாது என்பதே அவரது கவலையாக இருந்தது.

அதே போல் 96ம் ஆண்டு தேர்தல்கள் போது, தா.ம.கா. உருவாகி கூட்டணிவைக்க முன்வந்தது, கருணாநிதியும்அதுவரை தன்னுடனிருந்த பா.ம.கவை கழற்றிவிட்டார். கடந்த நாடாளுமன்றத் தேர்தல்களின்போது பா.ம.கவுடன் கைகோர்த்தாலும், இரு கட்சிகளுக்கும் சுமுகமான உறவில்லை. தி.மு.கவை விஞ்சவேண்டுமென்று இவரும், பா.ம.கவை ஒடுக்கவேண்டுமென்று அவரும் முயற்சி செய்ய, நிழல் யுத்தம் தொடர்ந்தது. ராமதாசின் கோரிக்கைகள் எதையும் கருணாநிதி கவனிப்பதே இல்லை, ராமதாஸ் தனக்கு நெருங்கியவர்களுடன் இதுபற்றி கூறி வேதனைப்பட்டிருக்கிறார்.

இந்த சூழலில்தான் பாண்டிச்சேரியில் எதிர்வரும் தேர்தல்களுக்குப்பின் தேசீய ஜனநாயகக் கூட்டணிக்குப் பெரும்பான்மை கிடைத்தால், ஆட்சி அமைக்க பா.ம.கவிற்கு வாய்ப்பளிக்கவேண்டுமென்று ராமதாஸ் கூறத்துவங்கினார். அத்தகைய ஏற்பாட்டிற்கு ஒத்துக்கொள்கின்றவர்களுடனேயே கூட்டணி என்றார் அவர்.

பாண்டிச்சேரி மிகச் சிறிய பிரதேசம், ஒரு மாநகராட்சி அளவில் மக்கள் தொகை. ஆனாலும் தனி அரசாயிற்றே. அங்கு ஆட்சி நடத்தி, நல்ல பெயரெடுத்து, பின்னர் தமிழகத்தை ஆள முடியும் என்று மக்களை நம்ப வைக்க நல்லதருணம்தானே இது!

கருணாநிதி மௌனம் சாதித்தார். பாண்டிச்சேரியிலும் தி.மு.க. தலைமையிலான அரசு தான். விரும்பினால் பா.ம.க. தேசீய ஜனநாயகக் கூட்டணியில் இருக்கலாம் அல்லது வெளியேறலாம் என பாரதீய ஜனதாவினர் கூறினர். பா.ஜ.க ஆளே இல்லாத கட்சி. வாஜ்பேயி நிழலில் சற்று குளிர் காய்கிறார்கள். அவர்கள் பா.ம.க போன்ற ஒரு கட்சியினரோடு மோத கருணாநிதிதான் தூண்டிவிட்டிருப்பார் என்றே கருதப்பட்டது.

சென்னை பத்திரிகையாளர் சந்திப்பில் பாண்டிச்சேரி பற்றி ராமதாஸ் வாய்த்திறக்கவில்லை. எல்லாம் அம்மா, அன்புச் சகோதரி முடிவு செய்வார் என்றார்.

"பாண்டிச்சேரி என்ன; தமிழகத்தில் எத்தனை இடங்கள், யார் யார் கூட்டணியில் இடம் பெறுவது, அனைத்து முடிவுகளையும் சகோதரியே எடுப்பார், அவருக்கு நாங்கள் கட்டுப்படுவோம். அவர் மீது முழு நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது" என்றார்.

காங்கிரஸ், தமிழ் மாநில காங்கிரஸ், இதுகாறும் தன்னை கொலை செய்ய முயற்சிக்கிறார்கள் என்று அவர் குற்றஞ்சாட்டி வந்த விடுதலைச் சிறுத்தைகள், "யார் வேண்டுமானாலும் அ.இ.அ.தி.மு.க. அணியில் இருக்கட்டும் எனக்கு அதுபற்றிக் கவலையில்லை, இறுதி முடிவு ஜெயலலிதாவுடையதுதான்" என்றார்.

ஏதோ அவர் ஜெயலலிதாவிடம் சரணாகதி அடைந்துவிட்டது போன்று தோன்றினாலும், உண்மையில் அவர்களுக்குள் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டதைப் போன்றே இருக்கிறது. பாண்டிச்சேரியை விட்டுத்தர அவர் சம்மதித்திருப்பார். இவர் பங்கிற்கு தமிழ்நாட்டில் 20, 25 இடங்களுக்கு அதிகமாக கேட்கமாட்டார்.

மேலோட்டமாகப் பார்க்கிறபோது, ஜெயலலிதாவின் கரங்கள் வலுப்பட்டிருப்பது போன்றே தோன்றுகிறது. தென் மாவட்டங்களில் தேவரின வாக்கு வங்கி ஏறத்தாழ அப்படியே அ.இ.அ.தி.மு.கவுக்கே போய்ச் சேரும் என்று நம்பப்படுகிறது. இப்போது வட மாவட்டங்களில் வன்னியர்களின் ஆதரவும் பா.ம.க மூலமாக பெறப்பட்டுவிட்டால் அ.இ.அ.தி.மு.க.. வெற்றி உறுதி. அதுவும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆதரவு வேறு இருக்கிறது. பொதுவாக தி.மு.க. அரசு மீதான அதிருப்தியும் பரவலாகவே இருக்கிறது. இப்படியெல்லாம் சிலர் கணக்குப் போடுகிறார்கள்.

ஆனால் த.மா.காவும், காங்கிரசும் திண்டாடிப்போயிருக்கின்றன. பா.ம.க விடுதலைப்புலிகள் ஆதரிக்கும் கட்சி. ஜெயின் கமிஷன் சில சந்தேகங்களைக் கிளப்பியதாலேயே, தி.மு.க. அங்கம் வகித்த ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்த்தது காங்கிரஸ். இப்போது 'பிரபாகரன் வாழ்க' என்று மேடைக்கு மேடை முழங்கும் ராமதாசுடன் கூட்டு வைப்பது எங்ஙனம்?

த.மா.காவும் தன்னை ஒரு காங்கிரஸ் கட்சியாகவே காட்டிக் கொள்கிறது. அதற்கும் அதே சிக்கல் இருக்கிறது. மேலும் தற்போது அ.இ.அ.தி.மு.க. அணியில் இரண்டாவது பெரிய கட்சியாக கருதப்படும் அதற்கு, பா.ம.க. வரவிற்குப்பின் அதே முக்கியத்துவம் கொடுக்கப்படுமா, கடந்த தேர்தல்களில் போட்டியிட்ட அதே அளவு இடங்களை அ.இ.அ.தி.மு.க. விட்டுக் கொடுக்குமா என்ற கவலை அதற்கு.

பாண்டிச்சேரியில் தற்போது காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு இருக்கிறது. அதையும் பா.ம.கவிற்கு தாரைவார்த்துக் கொடுக்க அக்கட்சி தயாராக இல்லை.

கடந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல்கள் போது மூன்றாவது அணி அமைக்கலாம் என மூப்பனார் மன்றாடினார். சோனியா ஒத்துக் கொள்ளவில்லை. இப்போதைய தர்ம சங்கடத்திலிருந்து தப்பிக்க வேண்டி மூன்றாவது அணி அமைக்கலாம் என காங்கிரஸ் மூப்பனாரை அழைக்கிறது. அவர் ஒத்துக் கொள்வாரா என்று தெரியவில்லை.

"அதிக இடங்களைத் தருகிறோம், எங்கள் அணிக்கு வந்துவிடுங்கள்" என்று தி.மு.க அழைப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனால் பழுத்த காங்கிரஸ்காரரான மூப்பனாருக்கு பாரதீய ஜனதாவுடன் கூட்டணி அமைக்க தயக்கம்.

கடைசியாகக் கிடைத்த தகவல்கள்படி காங்கிரஸ், த.மா.கா. இரண்டுமே அ.இ.அ.தி.மு.க. அணியில் இருந்துவிடக்கூடும். இதுவரை த.மா.க.வின் உற்ற தோழனாக இருந்த விடுதலைச் சிறுத்தைகள் தான் தி.மு.க. அணிக்கு தாவிவிடும். ஏனெனில் பா.ம.கவை எதிர்த்தே அரசியல் செய்து வரும் அவர்களுக்கு அக்கட்சியுடன் சமரசம் செய்து கொள்ள விரும்பமில்லை.

ஒதுக்கப்பட்டுள்ள புதிய தமிழகமும் தி.மு.க. அணிக்குத்தான்போகப் போகிறது.

முதலியாரினத்தவரை முன்னிறுத்தி துவங்கப்பட்டுள்ள புதிய நீதிக்கட்சி, மற்றும் யாதவர்களின் கட்சியாகக் கருதப்படும் மக்கள் தமிழ் தேசம் போன்றவை தி.மு.க. அணியில் இணையலாம்.

ஆயினும் காங்கிரஸ், த.மா.கா., அ.இ.அ.தி.மு.கவுடன் இருப்பதென்று முடிவு செய்துவிட்டால் அந்த அணிக்கே அதிக வெற்றி வாய்ப்பு.

"அ.இ.அ.தி.மு.க. மாநிலத்தை சூறையாடியது. நாங்கள் காப்பாற்ற வந்தோம். இப்போது மீண்டும் பாழுங்கிணற்றில் விழ சிலர் முன் வருகிறார்கள். நஷ்டம் எங்களுக்கல்ல, மக்களுக்குத்தான்!" என்கிறார் கலைஞர்.


அ.இ.அ.தி.மு.க. ஆட்சியை விட ஓரளவு நல்லாட்சிதான் தமிழகத்தில் தற்போது. ஆயினும் விலைவாசி உயர்வு, தி.மு.க. நிர்வாகிகளின் அத்து மீறல், இலஞ்சம் இவற்றால் ஏழை மக்களிடையே கடும் அதிருப்தி.

மீண்டும் ஜெயலலிதா ஆட்சி அமைந்தால் நஷ்டம் மக்களுக்கு என்பது உண்மைதான். தலைவிரித்தாடுவார். தவிரவும் கலைஞர் குடும்பத்தையே ஒரு வழி செய்துவிடுவார். கண்ணியமான ஆட்சி இங்கே உருவாகாது.

ஆனால் இப்படி ஒரு நிலை உருவாக கருணாநிதியும்தான் ஒரு காரணம். அவர் செய்த தவறுகளுக்கு அவருடன் சேர்ந்து நாட்டு மக்களும் அனுபவிக்கப் போகின்றனர்.

## அன்புச் சகோதரியே சரணம்





**கானகன்**

---

# பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

"**க**ற்றாரை கற்றார் காமுறுவர் என்ற வாக்கு பொய்யாமொழி" தான்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்களுக்கு அண்மையில் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட 'திரு.வி.க விருது' கிடைத்ததற்கான பாராட்டு விழா பார்த்தேன். புல்லரித்துப் போனேன்.

வாழும் போதே வாழ்த்துப்படல் என்பது எத்தனை பெரும் பேறு என புரித்துப் போனேன்.

தமிழ் அறிந்த, தமிழ் ஆய்ந்த, பெரியோர் நிறைந்த அந்த சபையில் சிங்கள மொழிப் பேராசிரியர் பேசியவை என் காதில் இன்னமும் ஒலிக்கின்றன.

ஆரம்பத்திலேயே ஓர் அசத்தல் அசத்திவிட்டார் அவர். 'வடமராட்சி கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்பு கிளை' என தமிழில் எழுதப்பட்டிருந்ததை மிக அழகாக சரியான உச்சரிப்புடன் வாசித்து சபையோரின் கரகோஷத்தைப் பெற்றார்.

உண்மையில் இப்படியாக பலர் அரசியல் காரணங்களுக்காக மட்டும் சில விடயங்களை கொச்சைத் தமிழில் பேசி எம்மை முட்டாள்களாக்குவது போல் அல்லாது அவரது செயல் மிகுந்த உள்ளார்த்தமான- உணர்வு பூர்வமானதாகவே இருந்தது உண்மை. அந்தப் பெருமகன் கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் J.B.திசநாயக்கா அவர்களே.

சிவகுருநாதன் ஐயா குறிப்பிட்டது போல் விபுலாநந்தருக்கும் ஆறுமுக நாவலருக்கும் பின்னதாக இப்போதுதான் இலங்கையர் ஒருவருக்கு இந்தியாவின் அதுவும் தமிழ்நாடு அரசின் பாராட்டும் பரிசும் கிடைத்திருப்பது ஒரு பெரு விடயம்தான். பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தமிழியலுக்கு செய்த பங்களிப்பிற்காக தமிழ்நாடு அரசு 2000ம் ஆண்டிற்கான திரு.வி.க விருதினை வழங்கி கௌரவித்தமை ஈழத் தமிழர் அனைவரும் பெருமை கொள்ளக் கூடிய பெரும் பேறுதான்.

ஆறுமுக நாவலரும் விபுலாநந்தரும் வாழ்ந்த காலத்தைப் பற்றி அவர்கள் இன்பத் தமிழுக்கு செய்த பங்களிப்பைப் பற்றி வரலாற்றுப் பாடத்தில் படித்த நாம்; நாம் வாழும் காலத்திலேயே எம்மோடு வாழ்பவர் வாழ்த்தப்படுவதை வாழ்த்தி வரவேற்க வேண்டுமல்லவா?

அந்த நற்பணியைத்தான் கரவெட்டி விக்னேஸ்வரா பழைய மாணவர் ஏற்பாடு செய்ய அதற்கு மகுடம் வைத்தாற்போல் அமைந்தது; இன்றைய அரசியல் சூழ்நிலைகளுக்கப்பால், காழ்ப்புணர்ச்சிகளுக்கப்பால், இன முரண்பாடுகளுக்கப்பால், தமிழர்களை தமிழ்மொழியை இரண்டாம் தர நிலையில் எண்ணும் நிலைப்பாட்டிற்கப்பால், தமிழாய்ந்த தமிழனை வாழ்த்த- அவன் புகழ் கூற புறப்பட்டு வந்த சிங்களப் பேராசிரியர் செயல்.

இவர் போல் பலர் இருந்திருந்தால் இனங்களுக்கிடையேயான முரண்படு நிலையே ஏற்பட்டிருக்காது என பேராசிரியர் J.B. திசநாயக்கா பேசும்போது சிவத்தம்பி அவர்களை சிலாகித்துப் பேசினார்.

உண்மையில் அவர் வாயால் பேசவில்லை. தன் இதயத்தால் பேசினார். தமிழர்களின் பிரச்சனைகள் தொடர்பாக தன்போன்ற சிங்கள மக்களுக்கு புரிந்துணர்வு ஏற்படுவதற்கு காரணமாயிருந்தவர் பேராசிரியர் சிவத்தம்பி என குறிப்பிட்ட அவர், தமிழ் மக்களுக்கு என பிரச்சனைகள் இருப்பதை அவரைப்பற்றி படித்த பின்னரே நான் புரிந்து கொண்டேன். அவரைப்போல் பலர் இருந்திருப்பின் நாடு இன்றைய நிலையை நோக்கி தள்ளப்பட்டிராது என நான் நம்புகிறேன் என உணர்வு பூர்வமாக குறிப்பிட்டார். உண்மை நிலையும் அதுதான். ஏனென்றால் தமிழர் பிரச்சனையின் உண்மையான தாற்பரியம் பலருக்குத் தெரியாததால் புரியவைக்கப் படாமையினால் பிரச்சனையின் மறுபக்கமான பயங்கரவாதம் தான் பலருக்கு தெரிந்திருக்கின்றது.

அதனால் தான் 'இந்த நாட்டில் இனப்பிரச்சனை இல்லை பயங்கரவாத புலிப்பிரச்சனைதான் உண்டு' என்று பறை அடிப்பை நம்புகின்றனர்.

பிரிவினை என்பது எம் மக்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றல்ல என்பதை பேராசிரியர் சிவத்தம்பி மிகத் தெளிவாக குறிப்பிட்டது போல் "தமிழன் என்ற எனது அடிப்படை அடையாளத்திற்கு எந்தவித ஊறும்வராத இலங்கையனாக இருக்க விரும்புகிறேன். அதாவது ஒரே நேரத்தில் நான் தமிழனாகவும் இலங்கையனாகவும் இருக்க விரும்புகிறேன்" தெட்டத் தெளிவாக்குகின்றது.

**~குத்தியன்~**

எத்தனையோ பேருக்கு ஆசானாக இருந்த அவர் தான் பெரும் சபையில் முந்தி இருக்க தனக்கு ஆசானாக இருந்த எஸ்.எம்.கமால்தீன் அவர்கள் இருந்த இடம் நோக்கி தன் பெரு உடலை அசைத்துச் சென்று அவரை ஆரத் தழுவி தன் நன்றிக்கடனை கரவையூற்று மலரின் முதல் பிரதியை வழங்கியதன் மூலம் செலுத்திய செயலைக் காண கண்கோடி வேண்டும்.

இந்த இடத்தில் காலமாற்றத்தின் கோலத்தை கோடிட்டுக் காட்டத்தான் வேண்டும்.

விடுதலைப் போர் என்ற பெயரில் எத்தனை நற்பண்புகள் நம் தமிழ் சமூகத்திடமிருந்து நழுவிப் போய்விட்டது. படித்தவரை மதிக்கின்ற, பெரியோரை போற்றுகின்ற, பேணுகின்ற நற்குணங்களெல்லாம் இன்று நலிந்து போய்விட்டன:

தன்னை அவையத்து முந்தி இருக்கச் செய்த ஆசானை, ஏற்றிய ஏணிகள் ஏறுவதில்லை என்றாலும் அதில் ஏறிப்பலன் பெற்றவர் போற்றும் அந்த நிகழ்ச்சி இன்றைய சூழலில் மிகப்பெரும் செயல்தான். நிறை குடம் தளம்பாத நிலைதான். ஏனென்றால் அன்று மாணவன் ஒருவன் தனக்கு படிப்பித்த மாஸ்டரைக் கண்டதும் தான் ஓட்டிவந்த சைக்கிளால் கீழ் இறங்கி எதிரில் வருபவரிடம் "வணக்கம் சேர்" என பவ்வியமாக கூறும் நிலை மாறி, இன்று ஆசிரியர்கள் எதிரில் AK 47 உடன் வரும் தன்னிடம் முன்பு கற்ற மாணவனைக் கண்டு ஓட்டி வந்த சைக்கிளால் இடறுப் பட்டு இறங்கி "எப்பிடித்தம்பி" என பயத்தில் கேட்டு வழிவிட்டு வேலிக்குள் ஒதுங்குவதும் காலத்தின் மாற்றமா இல்லை தம்பிமாரின் கையில் இருக்கும் இரும்பு செய்த மாற்றமா? என்ன இருந்தாலும் ஓல்ட் இஸ் கோல்ட் (OLD 'S GOLD) தான் ■

அலசுவது - இராஜதந்திரி

# புதிய சமரச முயற்சிகளை பிரிட்டன் முளையிலேயே கிள்ளி எறியலாகாது!

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புத் தொடர்பாக பிரிட்டன் எத்தகைய முடிவை எடுக்கப் போகின்றதென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

பிரிட்டனில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டாமென ஒருபுறமும், தடைசெய்ய வேண்டுமென மறுபுறமுமாக இலங்கையில் கோரிக்கைகள் வலுவடைந்திருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

சர்வதேச பயங்கரவாத நடவடிக்கைகளின் ஒரு களமாக பிரிட்டன் ஒருபோதும் இருக்கலாகாது என்பதிலேயே பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ஆர்வங்காட்டி வருகின்றனர்.

இதன் காரணமாகவே பயங்கரவாத நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவை என்று கருதப்படும் அமைப்புக்களைப் பிரிட்டனில் தடை செய்யும் சட்டத்தைக் கொண்டுவர பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் உத்தேசித்துள்ளனர்.

கடந்த நூற்றாண்டுகளில் உலகின் பெரும்பாலான நாடுகளை பிரிட்டன் தனது ஆளுமைக்குட்படுத்தி வைத்திருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

அப்போது பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகப் போராடி, தத்தமது நாடுகளின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர்களை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் துரோகிகள், பயங்கரவாதிகள் என்றே தூக்கிலிட்டும், சிறையிலடைத்தும் தண்டித்திருந்தனர்.

மகாத்மாகாந்தியடிகள், ஜவஹர்லால்நேரு ஆகியோருங்கூட இந்தியா பிரிட்டிஷாரால் ஆளப்பட்டபோது தேசத்துரோகிகளாகவே கருதப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.

இவர்கள் மட்டுமல்ல. தமிழகத்தில் கூட, வீரபாண்டிய கட்டபொம்மன், மற்றும் ஆஷ்துரை என்றழைக்கப்பட்ட பிரிட்டிஷ் நிர்வாகியைச் சுட்டுக் கொன்ற வாஞ்சிநாதன் என்ற விடுதலைப் போராட்ட வீரனையும் பிரிட்டிஷார் தூக்கிலிட்டனர்.

கப்பல் ஒட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார்கூட பிரிட்டிஷ் ஆட்சியில் ஒரு பயங்கரவாதியாகவே கருதப்பட்டார். மகாகவி சுப்பிரமணிய பாராதியார் விடுதலை உணர்வுமிக்க பாடல்களைப்பாடி பிரிட்டிஷாருக்கெதிராக குரல் கொடுத்தமையால், பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பாரதியாரைக்கூட ஒரு தேசத்துரோகியாகவே கண்டிருந்தனர்.

பிரிட்டிஷாரால் தாம் கைது செய்யப்படுவதைத் தவிர்க்கும் விதத்தில் தமிழகத்திலிருந்தும் தப்பியோடி பிரெஞ்சுக் காலனித்துவப் பிரதேசமாக இருந்த பாண்டிச்சேரியில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அடைக்கலம் தேடியிருந்தார்.

எனவே பிரிட்டிஷ் ஆட்சியில் கடந்த நூற்றாண்டுகளில் துரோகிகளாகக் கருதப்பட்டவர்கள், இன்று உலகம் போன்றும் உன்னத புருஷர்களாக மதிக்கப்படுகின்றனர்.

இந்தியாவில் மட்டுமல்ல, இலங்கையில்கூட பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள் தேசத்துரோகிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிரிட்டிஷ் ஆட்சி இலங்கையில் நிலவிய காலகட்டத்தில் கலவரங்களைத் தூண்டிய காரணத்துக்காக சிங்கள இனத்தைச் சேர்ந்த தலைவர்கள் சிலர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியாக இருந்த அமரர்

## பிரிட்டிஷாரிடமிருந்து சிங்கள அரசியல்வாதிகளை சிறை மீட்டவர் சேர். பொன் இராமநாதன்!

டி.எஸ்.சேனநாயக்காவின் சகோதரர் எவ்.ஆர்.சேனநாயக்காவும் வேறு சிங்களத்தலைவர்களும் அன்று பிரிட்டிஷாரால் தண்டிக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

அச்சமயம் பிரிட்டிஷாரின் நன்மதிப்பைப் பெற்றிருந்த இலங்கையின் தமிழ்ப்பெருமகனான சேர். பொன்னம்பலம் இராமநாதன் வெளிப்படுத்திய பெருந்தன்மையான போக்குக் காரணமாகவே சிறையிலடைக்கப்பட்ட சிங்களத்தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

முதலாவது உலக யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் யுத்தக் கப்பல்களின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அன்று சிறைவைக்கப்பட்ட சிங்களத் தலைவர்களுக்காக பிரிட்டனுக்குக் கடல் பயணம் மேற்கொண்டிருந்தார்.

பிரிட்டனில் சேர்.பொன். இராமநாதன் இலங்கையில் சிறை வைக்கப்பட்ட சிங்களத்தலைவர்களுக்காக அன்று வாதாடினார். அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டுமென வலியுறுத்திக் கேட்டிருந்தார்.

இறுதியாக சேர்.பொன்னம்பலம் இராமநாதன் மீது கொண்டிருந்த நன்மதிப்புக் காரணமாகவே அன்று பிரிட்டிஷார் இலங்கையில் தாம் சிறைவைத்திருந்த சிங்களத் தலைவர்களை விடுதலை செய்திருந்தனர்.

சிங்களத் தலைவர்களை சிறை மீட்ட பின்னர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் பிரிட்டனிலிருந்து கப்பல் மார்க்கமாகக் கொழும்பு திரும்பியிருந்தார்.

அச்சமயம் கொழும்புத் துறை முகத்தில் அவருக்கு அமோக வரவேற்பு வழங்கப்பட்டிருந்தது. சேர்.பொன் இராமநாதனை வீட்டுக்கு அழைத்துச் செல்ல அவரது பிரத்தியேக குதிரை வண்டி துறை முகத்துக்கு வந்திருந்தது.

ஆனால் அக்குதிரை வண்டியில் கட்டப்பட்டிருந்த குதிரைகளை அவிழ்த்துவிட்ட பின்னர் சேர்.பி.இராமநாதன் அமர்ந்திருந்த வண்டியைத் தமது கரங்களினாலேயே சிறையிலிருந்து விடுதலையான சிங்களத் தலைவர்கள் இழுத்துச் சென்றனர்.

அன்று சேர்.பொன்.இராமநாதன் பிரிட்டன் சென்று மேற்கொண்ட அந்த நடவடிக்கை இலங்கையை அனைத்து இன மக்களினதும் ஒரு தாயகமாக அப்பெருந்தகை கருதியிருந்ததையே புலப்படுத்தியிருந்தது.

குறுகிய இன, மத, வேறுபாடுகளுக்கு அவர் அன்று இடந்தரவில்லை. காலப்போக்கில் இலங்கையின் சுதந்திரத்துக்குக்கூட சேர்.பொன்.இராமநாதனும், அவரது குடும்பத்தவர்களும் அயராது உழைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே பிரிட்டனின் காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட நாடுகள் இன்று சுதந்திரம் பெற்றவையாக இருக்கின்ற போதிலும், அந்நாடுகள் பலவற்றில் வாழ்ந்து வருகின்ற சிறுபான்மை இன மக்களினது தனித்துவங்கள், அரசியல்



உரிமைகள் என்பவை உரிய வகையில் நிர்ணயஞ் செய்யப்படாதவையாகவே இருக்கின்றன.

இந்நிலையில் பிரிட்டிஷார் ஆட்சியாளர்கள் காலனித்துவ ஆட்சிக் காலத்தின்போது தமது சுயநலத்தையே முதன்மைப்படுத்திக் கையாண்ட அரசியல் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளாதிருக்க வேண்டியதே அவசியமானதாகின்றது.

இலங்கையில் இன்று ஒரு மோசமான உள்நாட்டு யுத்தம் வெடித்திருக்கக் காணப்படுகின்றது. பிரிட்டிஷார் இலங்கையை விட்டு வெளியேறியதும் இலங்கையிலிருந்த சிறுபான்மை இன மக்களின் அரசியல் உரிமைகள் தகுந்த விதத்தில் அங்கீகரிக்கப்பட்டு அவர்களது தனித்துவம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் இலங்கையில் இன்று இரத்த ஆறு பெருக்கெடுத்துப் பாய்வதைத் தடுத்திருக்க முடியும்.

ஆனால் இலங்கை சுதந்திரம் பெற்ற நாள்முதல் இன்றுவரை இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதியில் வாழ்ந்து வருகின்ற தமிழ்மக்களது உரிமைகள் மட்டுமல்ல; மலையகத்தில் பிரிட்டிஷாரால் குடியேற்றப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் உரிமைகள்கூட தகுந்த விதத்தில் வழங்கப்படாமலேயே இருக்கின்றன.

இந்நிலையில் பிரிட்டிஷ் அரசு இலங்கையில் நிலவுகின்ற இனப்பிரச்சனை தொடர்பாக அவசரப் படாத, நிதானமான அணுகுமுறைகளையே கையாள வேண்டியது அவசியமானதாகின்றது.

பிரிட்டிஷ் அரசு தனது நாட்டின் பாதுகாப்புக்கருதியும், சர்வதேச பாதுகாப்பு நிலவரங்களைக் கருத்திற் கொண்டும் சட்டதிட்டங்களைக் கொண்டு வருவதற்கு பூரண உரித்துடையதாக இருக்கின்றது.

ஆனால் இலங்கைப் பிரச்சனையைப் பொறுத்தவரை அப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் பிரிட்டனின் பங்களிப்பையே இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் பெரிதும் எதிர்பார்த்தவர்களாக இருக்கின்றனர்.

ஏனெனில் இலங்கை இனப்பிரச்சனையினால் ஏற்பட்ட தாக்கத்தைப் பெரிதும் அனுபவித்து வருபவர்களாகவே அம்மக்கள் காணப்படுகின்றனர்.

பிரிட்டனிலும், அந்நாட்டின் நேச நாடுகளாக இருக்கும், ஏனைய மேற்குலக நாடுகளிலும் கூட இனப்பிரச்சனையின் கொடூரத்தைத் தாங்கமுடியாது இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழர்கள் பாதுகாப்புத் தேடிப் புலம் பெயர்ந்துள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சனை வரலாற்றை எடுத்து நோக்கும் பட்சத்தில் இலங்கைத் தமிழர்கள் தமது தனித்துவத்தை நிலைநாட்டக்கூடிய அரசியல் உரிமைகளுக்காக ஜனநாயக வழிநின்றே குரல் கொடுத்து வந்திருந்தனர். ஆனால் சாத்வீக வழி நின்று அவர்கள் விடுத்து வந்த கோரிக்கைகள் இலங்கையில் ஆட்சியதிகாரங்களில் இருந்தோரால் தட்டிக்கழிக்கப்பட்டே வந்தன.

நாளடைவில் இலங்கைத் தமிழர்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளுக்கு காடைத்தனங்கள், அடாவடித்தனங்கள் என்பவற்றின் வாயிலாகவே பதிலளிக்கப்பட்டும் வந்தது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கில் இடம்பெற்று வருகின்ற ஆயுதப் போராட்டமென்பது அடாவடித்தனங்களுக்குள்ளான தமிழ் மக்களின் உணர்ச்சி வெளிப்படாகவே இருந்து வருகின்றது.

கடந்த இரு தசாப்தங்களாகவே இலங்கையில் வடக்கு-கிழக்கு யுத்தம் இடம்பெற்று வருகின்றது.

இந்த யுத்தம் குறித்து பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நன்கறிந்தே இருக்கின்றனர். இது தவிர கடந்த காலங்களில் இலங்கைக்கு விஜயம் செய்த பிரிட்டனின் முக்கிய அரசியல் வாதிகள், இராஜதந்திரிகள் என்போர் மிக நிதானமாகவும், பாரபட்சமற்ற முறையிலுமே இலங்கை இனப்பிரச்சனை குறித்து தமது கருத்துக் கண்ணோட்டங்களை வெளியிட்டு வந்தனர்.

இந்நிலையில் பிரிட்டன் தொடர்ந்தும் நிதானமாகவும், பாரபட்சமற்ற முறையிலுமே இலங்கை இனப்பிரச்சனையைக் கையாள வேண்டியது அவசியமானதாகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புத் தொடர்பாக பிரிட்டன் எடுக்கக்கூடிய தீர்மானங்கள்கூட இலங்கை இனப் பிரச்சனைத் தீர்வு விடயத்தில் குந்தகத்தை ஏற்படுத்தாததாகவே இருக்க வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சனை குறித்த அரசியல் நடவடிக்கைகள் தற்போது ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றவையாகவே இருக்கின்றன.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான சமரச முயற்சிகளுக்கு இலங்கை அரசு மட்டுமல்ல; தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கூட ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளது.

இந்நிலையில் அத்தகைய ஒத்துழைப்புக்கு மேலும் உர மூட்டுவதாகவே பிரிட்டனின் நடவடிக்கைகள் இருக்க வேண்டியதாகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள்மீது பாதகமான நடவடிக்கை எதனையும் பிரிட்டன் எடுக்க முன்வரும் பட்சத்தில் இலங்கையில் உள்ள பேரினவாத சக்திகளே அதனால் உஷாரடைவர்.


தமிழீழ விடுதலைப்புலிகள் மூலமாக வெளிப்பட்டு நிற்பது இலங்கையின் இனப்பிரச்சனை என்பதையே பிரிட்டனின் ஆட்சியாளர்கள் உணர வேண்டியவர்களாகின்றனர்.

எனவே இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாக இருப்பதை அரசியல் முதிர்ச்சி பெற்ற நாடான பிரிட்டன் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானதாகின்றது.

புதிய சமரச முயற்சிகள் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் துளிர்விட ஆரம்பித்திருக்கின்றது.

எனவே பிரிட்டன் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக எடுக்கும் முடிவுகள், இலங்கை இனப்பிரச்சனை தொடர்பான புதிய சமரச முயற்சிகளை முளையிலேயே கிள்ளி எறிவதாக இருக்கலாகாது.

## அதிரடி அய்யாத்துரை



**யாழ்ப்பாண** மாநகரசபை நாட்டிலுள்ள ஏனைய மாநகர சபைகளுக்கு முன்னுதாரணமாம். இது ஆனந்தமான சங்கதியாம். முதல்வர்களைத் துரோகிகளாக தீர்ப்பு எழுதி தண்டனை வழங்கியது முதல், சொந்தப் பிரதேசத்தில் தங்கி நின்று செயல்படாமல் தலைநகரிலிருந்து தொலைபேசி ஊடாக நிர்வாகம் செய்வதுவரை பல சாதனைகள் படைத்து வருகிறது யாழ் மாநகர சபை நிர்வாகம். எனவே இப் பாராட்டுப் பொருந்தும் தான் என்கிறார் ஸ்ரீமான் பொதுசனம்.

**"அகிம்சாவாதிகள்** இரத்தக் கறை படியாத கரங்களுக்கு சொந்தக்காரர்கள். காய்கறி நறுக்குவதற்குக்கூட கத்தி எடுக்காதவர்கள்." இப்படியெல்லாம் சொல்லிக்கொண்ட குறுந்தாடி முதல்வர் இப்போது இடுப்பில் இரும்புத் துண்டையும் சுமக்கிறாராம். என்ன இது? என்று கேட்டால், "சும்மா ஒரு தற்பாதுகாப்புக்குத்தான். அரசாங்கம் தந்ததை சட்டப்படி வைச்சிருக்கிறம்!" என்று சமாளிக்கிறாராம்.

**இராஜதந்திர வட்டாரங்களுக்கு** தூதுபோன சட்டத்தரணிகளான தமிழ்க் கட்சிகள் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் இருக்கின்றனவாம். Do you know what they think about you? என்று இராஜதந்திர மட்டங்கள் வினவும்போது பதில் சொல்ல முடியாமல் திண்டாடுகின்றனவாம்.

**தமிழர்களின் அபிலாசை** சுய நிர்ணயம், என்று உரத்துக் குரல் கொடுப்பவர்களை ஆதரிப்பதாகக்கூறும் கூத்தணியினர், நீலக் கட்சியின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு ஜனநாயகத் தடை போடுவதாக குற்றம் சுமத்துகின்றனர். நீலக் கட்சியின் முன்னாள் முதல்வரை துரோகியாக சுட்டிக்காட்டியவர்கள் இப்போது நீலக் கட்சியின் செயற்பாட்டிற்கு முட்டுக்கட்டை போடுவதாகக் கூறுவதை 'ஆடு நனைகிறது என ஓநாய் அழுதது போல'த்தான் என்பது தங்கமான வார்த்தை தான்.

**"பச்சை அணியினரின்** பாத யாத்திரை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" "யானையும், புலியும் சேர்ந்து கதிரைப பிடிக்க போட்டிருக்கின்ற இரகசியத் திட்டத்தின் வெளிப்பாடு" என்றார் அரசியல் ஆய்வாளர் ஒருவர்.

**சூரியன் உதிக்கிற திசைக்குப்போன,** சூர்யன் மறையாத முன்னாள் சாம்ராச்சியத்தின் ராஜதந்திரியைச் சந்திக்க பலர் படாதபாடு பட்டினமாம். ஒருத்தரையும் சந்திக்க இயலாது என்று காட்டமாகப் பதில் சொன்ன அந்த அம்மையார் சீருடையினர் முகாம்களுக்கு சென்று சரணடைந்தவர்களைப் பேட்டி கண்டுள்ளார். இதனால் கடுப்புற்றவர்கள் கடிதங்களாக எழுதித் தள்ளுகினமாம்.

**அதி உயர் சபையில்** ஆரவாரமாகப் பேசிக் கொண்டிருந்த அந்த விநாயகனைப் பார்த்து "ஐயா சாமி நேரமாகிவிட்டதே!" என்றார் சபையின் நாயகர். "இன்னும் சில நிமிடங்கள் தாருங்கள்" என்று இரந்தார் மூத்த கட்சியின் முன்னாள் தலைவரான அந்த விநாயகன். சபையின் நாயகர் சடாரெனக் கூறினார்: "எழுதித் தானே வாசிக்கிறீர்கள்? பரவாயில்லை அப்படியே தாருங்கள்; சபைக் குறிப்பில் சேர்க்கப்பட்டு விடும்" என்றபோது அந்த விநாயகன் ஆடித்தான் போனாராம்.



## திகில் தொடர்

அழகிகள் போட்டியில் முதலாவதாக தேர்வு செய்யப்பட்ட அழகி போல் குளிர் புன்னகையுடனும், மலர்ச்சி பார்வையுடனும் தெரிந்தாள்.

சுகமான மருக்கொழுந்தின் ரம்மியமான வாசனை அவள் பக்கமாக இருந்து வந்தது.

“பாடல் கேசட் இருக்கிறதல்லவா டிரைவர்?” என்று யோகேஷ் பேச்சுக் கொடுத்தான்.

“கேசட் கொண்டு வந்திருக்கேன் சார். போடுகிறேன் கேளுங்க.”

சொன்ன காரோட்டி, கார் டேப் ரிக்கார்டரிலேயே கேசட்டை கொடுத்து, இயக்கினான்.

ஏராளமான இசைக்கருவிகளின் பின்னணி இசையில் ஆண், பெண் பாடும் குரல் மெலிதாக ஒலித்தது.

அதே பாடல் தான்!

கவிஞர் குருமுத்து எழுத, முன்னணி பாடகனும், பாடகியும் பாடியது.



“ரத்னா.”

“ம்.”

“பாட்டை நன்றாக கவனி. முதல் நாள் ஷூட்டிங்கில் நாம் நடிக்கப் போகும் பாட்டு இது தான்!”

சொன்ன யோகேஷ் அவளுடைய முகத்தில் வித்தியாசமான சலனங்கள் தென்படுகிறதா என்று சுறு சுறுப்பான உணர்வுடன் கவனித்தான்.

அப்படி எந்த விபரீதமும் இல்லை. இயல்பான பளிங்குப் பதுமை முகத்துடன் பாடலை ரசித்து முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

கேசட் ஓடி முடிந்து பாடல் நின்ற போது, ஏரிக்கரை அருகிலுள்ள செம்மண் சாலையில் கார் ஓசையின்றி வந்து கொண்டிருந்தது.

“டிரைவர்... காரை இங்கே நிறுத்துங்க... நாங்க இறங்கி போய் சீன்கள் எடுக்க பொருத்தமான இடங்களை பார்த்துவிட்டு வருகிறோம்.”

யோகேஷ் சொல்ல, சொல்ல காரோட்டி பயந்து விட்டான். ரத்னாவால் முந்தைய கதாநாயகன் பலியானது போல் இவனுடைய உயிருக்கும் ஆபத்து ஏற்படப் போகிறது என்று எண்ணினான்.

அவர்கள் இறங்கியதும், “ஹீரோ சார், இந்த ஏரியாவிலே மலைப்பாம்பு உண்டு. பார்த்து, கவனமாகப் போங்க,” என்றான்.

யோகேஷ் அலட்சியமான ஒரு புன்னகையை கொடுத்துவிட்டு, ரத்னாவின் தோளோடு உராயும்படியாக இணையாக நடந்து போனான்.

குளிர்த்தென்றல் இருவரையும் வருடியது.

“ரத்னா... அதோ அந்த ஏரிக்கரையில் தான் முன்பு ஷூட்டிங் நடந்தது இல்லையா?”

“ம்”

ரத்னாவின் குண்டு மல்லிகை முகம் இயல்பாகவே இருந்தது.

அதை அவன் கவனித்துக் கொண்டே தண்ணீர் பாயும் வாய்க்கால் கரையோரம் நடந்து இருபக்க நெற்பயிர்களை பார்த்தான். பச்சைப் பசேலென்ற வளர்ச்சி.. கதிர்வரும் பருவம்.

வாய்க்காலை கடந்து ஏரிக்கரையோரம் மேடேறியதும் யோகேஷ் முட்கள் அடர்ந்த குத்துச் செடியைப் பார்த்தான்.

நெஞ்சுக்குள் ஒரு ‘திடுக்’ இங்கே தானே முன்பு கருப்புப் பூனை வெட்டிப் பலியிடப்பட்டிருந்தது. மஞ்சள் பூசி ஆங்காங்கே குங்குமப்பொட்டு வைக்கப்பட்ட எட்டு செங்கற்கள்

### திகில் கதை மன்னன்

### பி.டி.சாமி

தோண்டப்பட்ட பள்ளத்தைச் சுற்றி வைக்கப் பட்டிருந்தன.

ரத்னா அவற்றை பார்த்ததும் திடீரென்று ஓங்காரமாகச் சிரித்து திகில் மூட்டினாள்.

ரத்னா சிரித்ததோ, விபரீதமாக மாறியதோ யோகேஷுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தவில்லை.

இது, அவன் எதிர்பார்த்த ஒன்றுதான்!

இங்கே தான் ஏவல்பூஜை உதயமானது. அங்கே காத்துக் கொண்டிருந்த துஷ்ட ஆவி அவளை பிடித்துக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமேயில்லை.

அவன் கண்களை மூடியபடி தன்இஷ்ட தெய்வமான மகா பத்திரகாளியை தியானித்தான். காக்கும் மந்திரங்களை மவுனமாக ஜெபித்தான். திரிசூலத்தை நினைத்தான். வேண்டினான்.

மனக்கண்ணில் ரத்னா உடம்பில் ஒட்டிக் கொண்டு வந்திருப்பது யார் என்பது தெரிந்தது.

அழகி ரத்னாவின் புன்னகை... அந்தோ பயங்கரம்! அதிகாலை மலர்ந்த பூ போன்ற முகம் கொஞ்சம் கொஞ்சமாக விகாரமாக மாறிக்கொண்டே வந்து, சதை வழிந்து வெள்ளையான எலும்புடன் மண்டை ஒடு தெரிந்தது.

அந்த மண்டை ஓட்டில் கத்தாழை நார்களை போல் தலைமுடிகள் வெள்ளையாக நரைத்து, பரட்டையாக ஒட்டிக் கொண்டிருந்தது.

மண்டை ஓட்டு நெற்றியில்பெரிதாக ஒரு கருப்பு நிற சாந்துப் பொட்டு ஒட்டி கொண்டிருந்தது.

அது மிகவும் குள்ளமாக செவ்வாடை உடுத்திய உயிரோடு நடைபோடும் மண்டை ஓட்டுப்பொம்மை போல் தெரிந்தது.

அகோரமாக தெரிந்த அது எலும்புத் தாடை அசைய, பற்களின் நடுவே ஒரு மனித கையைக் கொடுத்து ஆசை ஆசையாக கடித்துச் சுவைத்துக் கொண்டிருந்தது.

வியர்த்து யோசித்த போது திடீரென்று சுய சிந்தனையில் ஒரு மின்பொறி தட்டியது.

அது யட்சிணி என்னும் துஷ்டமான தேவதை அல்லவா? அபாரமான சித்த வேலைகளை செய்து உருமாறும் மாயா சக்தி அல்லவா?

மாந்திரீகர்களின் ஏவல்படி அவர்களுடைய ஆணைப்படி இயங்கக் கூடியது. எதுவும் செய்யும். எத்தனை உயிர்களையும் குடிக்கும்.

தன் அருகில் நிற்பவள் ஒரு துஷ்ட யட்சிணி தேவதை தான் என்பதை தெரிந்து கொண்டதும், அவன் திடுக்கிடலாய் அதிர்ந்து கண்களை திறந்தான்.

இதய படபடப்போடு அதன் அதிகப்படியான துள்ளலோடு பார்த்தான். ஏகப்பட்ட வியர்வை வழிந்தது.

அ... அது ரத்னாவே தான்!

யட்சிணி தேவதையின் பஞ்சட்டைத் தலையுடன் கூடிய மண்டை ஓட்டு எலும்பு முகம் துளி கூடத் தெரியவில்லை. அது எப்படி மாயமாக மறைந்தது?

ரத்னா, ஒரு புல்லை பற்களுக்கிடையே கொடுத்துக் கடித்துக் கொண்டிருந்தாள். கிறங்க வைக்கும் புன்னகையும், கண்களின் காந்த பார்வையும் முகத்தில் ஒட்டிக் கொண்டிருந்தன.

‘என்னை என்ன நினைத்துக் கொண்டாய்?’ என்பது போல் இருந்தது அவளது பார்வையின் போக்கு. சில வினாடிகள் வரையில் என்ன செய்ய வேண்டும் என்றே அவனுக்கு தெரியவில்லை. தான், கண்களாலேயே நேருக்கு நேராக பார்த்தது பொய்யா?

தன் இஷ்ட தெய்வமான மகா பத்திரகாளி அபாரமான சக்தி படைத்தவள். முழு நம்பிக்கைக்கும் உரியவள். தன்னை மனம் உருகி ஆராதிப்பவர்களை ஏமாற்றவே மாட்டாள். நல்ல தாயான அவள் நிச்சயம் தன் பிள்ளைகளை காப்பாள்.

தன் ஞானக் கண்களில் ரத்னா உடம்பில் தற்போது வாசம் செய்வது துஷ்ட தேவதையான யட்சிணி தான் என்று அடையாளம் காட்டி விட்டாள். அந்த தேவதையை வசியப்படுத்தி ஏவிய மாந்திரீகள் யார்? யார் ஆதாயம் பெற இப்படியோர் ஏவல் விடப்பட்டது?

மாந்திரீகப்பணியில் அமர்த்திய துன்மார்க்கன் யார், யோசித்த போதிலும், விடை காணும் மனநிலையில் இப்போது இல்லை. முதலில் யட்சிணி தேவதையின் பிடியிலிருந்து ரத்னாவை பத்திரமாக மீட்க வேண்டும். தன்னையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

ரத்னாவுடன் இணையாக நடித்த நடிகன் சிவப்பிரகாஷ், அவளால் தான் ஏரியில் மூழ்கடித்துக் கொல்லப்பட்டான். அப்படியொரு பயங்கரம் மீண்டும் நடந்து விடாமல் ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ள வேண்டும்.

சிவப்பிரகாஷை கொல்ல, ஏரி வெள்ளத்தைப் பயன்படுத்தினாள். ஆனால், இப்பொழுது அவள் வேறு முறையைக் கையாண்டு பலி வாங்கலாம். துஷ்ட ஏவல் காரணமாக எத்தகைய ஆபத்தும் நேரலாம்.

காக்கும் வழி...?

அவனுக்கு தெரிந்த ஒரே வழி மகா பத்திரகாளியம்மன் தான்! அம்மன் உபாசகனான அவனை எந்த தீயசக்திகளாலும் தீண்ட முடியாது.

“யோகேஷ்,” நாணக் குழைவுடன் நெளிந்து, உதடுகளை சுழித்து பம்பர கண்களில் ஒரு சுழற்றிக் காட்டி ஒய்யாரமாக, அழைத்தாள் ரத்னா.

யோகேஷின் நெஞ்செலும்பு சில்லிட்டது. நடிகையான அவளிடம் இப்படியொரு திடீர் பாசம் எங்கிருந்து வந்தது?

(திகில் தொடரும்)

## வசுந்த்ராவின் இசை அல்பம்



தனக்கென்று ஒரு தனி இசை அல்பம் வெளியிடுவதுதான் பாடக, பாடகிகளின் கனவு. இந்தியாவில் பல பிரபல பாடக பாடகர்கள் இசை அல்பங்களை வெளியிட்டுள்ளார்.

இந்த வரிசையில் ‘ஹேராம்’ நாயகி வசுந்த்ரா தாஸும் இணைந்திருக்கிறார். ‘ஹேராம்’ படத்தில் நாயகியாக நடிப்பதற்கு முன்னரே வசுந்த்ரா தாஸ் ‘முதல்வன்’ படத்தில் பாடிய ‘ஷக்கலக்க பேபி..’ பாடல் படு பிரபலம்.

நடிப்பதை விடப்பாடுவது தான் தனக்குப் பிடித்தமானது என்று வசுந்த்ரா கூறிவந்தது, வாய்ப்புக்கள் இல்லாத படியால் தான் ‘இந்தப் பழம் புளிக்கும்’ என்ற தோரணையில் பேசுவதாகப் பலர் நினைத்ததுண்டு.

ஆனால் நடிப்பை விட பாடுவது பிடிக்கும் என்ற வசுந்த்ராவின் கூற்று அண்மையில் நிரூபணமாகியிருக்கிறது.

‘மேரி ஜான்’ என்ற பெயரில் இசை அல்பம் உருவாக்கும் வேலையில் வசுந்த்ரா இருந்தபோது, இந்திப் படவாய்ப்பு ஒன்று அவரைத் தேடி வந்தது. மறுத்துவிட்டார்.

அப்பட வாய்ப்பு ஒன்றும் சாமானியமான வாய்ப்பல்ல. தற்போது இந்தியில் முன்னணி இளம் நாயகனான ஹ்ரித்திக் ரோஷனுக்குப் போட்டியாக இருக்கும் அபிஷேக் (அமிதாப்பின் மகன்)கிற்கு ஜோடியாக ‘தேரா ஜாது சல் கஜா’ என்ற படத்தில் நடிக்கும் வாய்ப்பு.

இப்போது ‘மேரி ஜான்’ இசை அல்பம் முடிவுறும் நிலையில் உள்ளது. இதில் வசுந்த்ரா பாடிய 9 பாடல்களும் சூப்பர் ஹிட்டாகும் எனப் பலரும் அடித்துக் கூறுகிறார்கள்.

## கோப்பி குடித்தால்.... கர்ப்பம் தரிக்கமுடியாது?

தண்ணீர் குடிப்பது போல் கோப்பி குடிப்பவரா நீங்கள்? அப்படியாயின் உங்களுக்கு இது அதிர்ச்சி தரும் தகவல்.

இன்டர்நெட்டில் உள்ள ‘டட்கா டொட் கொம்’ என்ற வெப்தளத்தில் கோப்பியின் 5 கெட்ட குணங்கள் என்று ஒரு கட்டுரை வெளியாகி இருக்கிறது.


முதலாவதாக கோப்பி, கல்சியத்தின் எதிரியாம். ஒரு கப் கோப்பி குடிக்க வேண்டுமென்றால், கூடுதலாக 40 மில்லி கிராம் கல்சியத்தை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டுமாம்.

அடுத்ததாக கருத்தரித்தலை கோப்பி கஷ்டமாக்கக்கூடும் என்கிறது. சிசுக்களின் திடீர் மரணம், குறைப்பிரசவம், பிறவிக் கோளாறுகள் போன்றவற்றுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துகிறதாம்.

தவிர தூக்கத்தையும் கெடுக்கிறது கோப்பி என்று வேறு ஒரு குற்றச்சாட்டு. இரத்த அழுத்தத்தை அதிகரித்து இதயத்துக்கு ஆபத்தைக் கொண்டு வருகிறது. கோப்பியில் உள்ள சில இரசாயனங்களாலும் தொல்லைகள் என்பவை இதர குற்றச்சாட்டுக்கள்.

எனவே மொடாக் (கோப்பி) குடியர்களே கொஞ்சம் கவனம் தேவை.

## கார் கொடுத்த கலியுக பாரி



அன்று முல்லைக்கொடி படர தனது தேரையே கொடுத்தான் கடையெழு வள்ளல்களில் ஒருவனான பாரி மன்னன். இன்று ஒரு சோடி கொக்குகள் கூடுகள் கட்டுவதற்குத் தனது காரையே ஒருவர் கொடுத்திருக்கிறார்.

மிருகக்காட்சிச்சாலையில் வேலை செய்யும் ஃபிரெஞ்சுக்காரர் ஒருவர், தனது காரை வழக்கம் போல் தான் வேலைபார்க்கும் இடத்தில் உள்ள கார் நிறுத்துமிடத்தில் நிறுத்தி விட்டுத் தன் அன்றாட வேலைகளைப் பார்க்கச் சென்று விட்டார்.

அன்று மாலை கார் எடுக்க வந்தவருக்குப் பெரும் அதிர்ச்சி. காரணம், மிருகக் காட்சிச் சாலையில் இருந்த ஒரு ஜோடி கொக்குகள் அவருடையகார் மீது தங்கள் கூட்டைக் கட்டியிருந்தன.

கொக்குகள் மீது கருணை கொண்டு, தனது காரைக் கொக்குகளுக்காக அர்ப்பணித்துவிட்டு, இப்போது பஸ் பிடித்து வேலைக்குப் போய் வருகிறார் அவர்.

## தூங்கும்போது என்ன மாதிரியான கனவு காண்கிறீர்கள் நீங்கள்?

தூங்கும்போது ‘அந்த’ மாதிரியான கனவு காண்போர் உலகில் மூன்றில் ஒரு பகுதிப்பேர் என்று காதல் கதைகளை வெளியிடும் ஒரு பாரிஸ் பதிப்பக நிறுவனம் நடத்திய ஆராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளது.

தூங்கும்போது ‘அந்த’மாதிரியான கனவு காண்பவர்கள் பட்டியலில் ஆர்ஜென்டினா நாடு முதலிடம் வகிக்கிறது. அங்கு 95 சதவீதம் பேர் இப்படியான கனவு காண்கிறார்களாம்.

உலக அளவில் இப்படியான கனவு காண்பவர்களில் 45 சதவீதம் பேர் அந்தக் கனவை நனவாக்குகிறார்களாம்.

டென்மார்க் நாட்டுப் பெண்களுக்கு இந்த விடயத்தில் மிக நல்ல பெயர் கிடைத்துள்ளதாம். அவர்களில் 58 சதவீதத்தினரது கனவுகளில் தங்கள் கணவரைத் தவிர வேறு ஆடவர்கள் வருவதில்லையாம்.

ஆர்ஜென்டினா நாட்டுக்காரர்கள்தான் அந்நியர்களோடு ‘உறவு’ வைத்துக்கொள்வதுபோல் கனவு காண்பதில் முதலிடம் வகிக்கிறார்கள். கிரேக்க நாட்டுக்காரர்கள் 28 சதவீதம் பேர் தாங்கள் வேலை செய்பவர்களோடு ‘உறவு’ வைத்துக் கொள்வது போல் கனவு காண்கிறார்கள்.

உலக சனத் தொகையில் நான்கில் ஒருவர் நடிக-நடிகைகளை வைத்தும் பாடகர்கள், விளையாட்டு வீரர்களை நினைத்தும் கனவு காண்கின்றனர்.

இந்த முடிவுகள் கடந்த வருடம் ஜூலை மாதம் எடுத்த ஆய்வுகளில் எடுக்கப்பட்டவையாகும்.

## மனிதருக்கு வழிகாட்டும் மட்டக் குதிரைகள்



விழிப்புலனற்ற மனிதர்கள் வெள்ளைப்பிரம்பின் உதவியுடன் வீதிகளில் நடப்பதைப் பார்த்திருப்பீர்கள்.கனடா நாட்டில் விழிப்புலனற்றவர்கள் மட்டக்குதிரையின் உதவியுடன் நடந்து செல்கிறார்கள்.

2 அடி உயரமுள்ள இந்தக் குதிரைகள் வீதிச் சமிக்ஞைகளை உடனே புரிந்து கொள்ளும் தன்மை அதிகம் உடையவையாம். அத்துடன் பக்கவாட்டில் நடக்கும் விஷயங்களையும் அவற்றால் பார்க்க முடிகிறதாம்.

எனவே பார்வையற்றவர்களுக்கு உதவ இந்தக் குதிரைகளுக்குப் பயிற்சி அளிப்பதாக கனடாவைச் சேர்ந்த குதிரைப் பயிற்சியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தக் குதிரைகளை வழிகாட்டியாக அழைத்துச் செல்லும்போது, இவைகளால் யாருக்கும் எந்தத் தொந்தரவுகளும் ஏற்படுவதில்லையாம்.

பஸ்களிலோ, ஹொட்டல்களுக்கோ இவைகளைக் கூட்டிச் சென்றால், ‘நல்ல பிள்’ளைகளைப் போல் இருக்கைகளுக்கு அடியே போல் படுத்துக் கொள்ளுமாம்.



# கண் (கவர்) காட்சி

← ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் சில மாதங்களுக்கு முன் நகை விற்பனைக் கண்காட்சி ஒன்று நடந்தது-அதில் 3 கிலோ 200 கிராம் நிறைகொண்ட தங்கத்தினாலான கழுகு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அந்தத் தங்கக் கழுகு வாயில் கவ்வியிருப்பது ஒரு விலையுயர்ந்த வைரம். இந்த வைரம் 101.31 காரட் ஆகும்.

இந்த விலையுயர்ந்த தங்கம் மற்றும் வைரத்திற்கு அருகில் நிற்கும் அழகி அமெரிக்காவைச் சேர்ந்தவர். பெயர் பிரையன் கமரோன். இவரது கழுத்து மற்றும் காதுகளில் தொங்கும் வைரநகைகள் கூட விலை மதிப்பற்றவைதான். ஹொலிவூட்டின் முன்னாள் கவர்ச்சிக் கன்னி மர்லின் மன்ட்டுரோவின் நகைகள் தான் இவை.

நகை விற்பனைக் கண்காட்சியில் பலரது கண்களால் கவரப்பட்டவை இவை தான்.

# அபூர்வ உயிரினம்

↓ கைவிரலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, அச்சப் பார்வை பார்க்கும் இந்தச் சின்னஞ்சிறு பிராணியின் பெயர் 'காலிக்ஸ்ட்ரிக் ஜக்கஸ்' என்பதாகும்.

அழியும் அபாயத்தில் இருக்கும் இந்த அபூர்வ உயிரினத்தைப் பாதுகாத்து, செயற்கைக் கருத்தரிப்பு முறையைக் கையாண்டு இவற்றின் பெருக்கத்தை அதிகரிக்க முடிவு செய்துள்ளனர், விலங்கியல் ஆய்வாளர்கள்.

கடந்த வருடம் ஸ்பெயின் நாட்டுத் தலைநகரில் மட்றிட்டில் இருக்கும் விலங்கியல் பூங்காவில் செயற்கைக் கருத்தரிப்பால் 3 குட்டிகள் பிறந்தன. அவற்றில் ஒரு குட்டிதான் இது.

# தகவல் பெட்டி


# சாய்ந்த (மனிதக்) கோபுரம்

↓ ஸ்பெயின் நாட்டில் நடைபெறும் விழாக்கள் மற்றும் கொண்டாட்டங்களின்போது பலர் வட்டமாக நிற்க, அவர்கள் மேல் வட்டம் வட்டமாக உயர ஏறி நின்று மனிதக் கோபுரம் அமைத்து மகிழ்வார்கள்.

மனிதக் கோபுரம் அமைத்து (அதாவது மிக உயரமான மனிதக் கோபுரம்) உலக சாதனை புரிந்திருப்பவர்களும் ஸ்பெயின் நாட்டவர்கள்தான்.

கடந்த வருடம் ஸ்பெயின் நாட்டின் வட-கிழக்கு நகரான விலாஃபிராங்கா நகரில் நடைபெற்ற புனிதர் தினக் கொண்டாட்டத்தின் போது, தமது நாட்டு சாதனையை முறியடிக்க ஒன்பது அடுக்கு மனிதக் கோபுரத்தை அமைத்தனர்.

ஆனால் இந்த மனிதக் கோபுரம் நிலைத்து நிற்காமல், சாய்ந்து விட்டதால் பழைய சாதனை முறியடிக்கப்படவில்லை.







# வாயுள்ள (பெண்) பிள்ளை

↑ 'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்' என்பது முதுமொழி. அந்த முதுமொழியைச் செயலாக்கிக் கொண்டிருக்கிறார் இந்தப் பெண் பிள்ளை.

யெகத்ரீனா துரந்த்சேவா என்ற 15 வயதான இந்தப் பெண் ரஷ்யாவின் ஸெலஸ்னோஸ் கோர்க்கைச் சேர்ந்தவள். இவரது கழுத்திற்குக் கீழே, உடலின் செயற்பாடுகள் அற்றுப்போய் விட்டன.

இருந்தாலென்ன? அதற்காகக் கொஞ்சங்கூட மனச்சோர்வு அடையாது, பல்லிடுக்கில் தூரிகைகளைப் பிடித்துக் கொண்டு படம் வரைகிறார். ஓவியக் கல்லூரியில் பயிலும் இந்த மாணவி ஓவியம் வரைவதை தொழில் முறையாகச் செய்யவிருக்கிறாராம்.

# கமல்-மணிரத்னம்-அரவிந்தசாமிக்கு மிரட்டல்கள்

'பம்பாய்' படத்தை இயக்கிய மணிரத்னத்திற்கு போனில் மிரட்டல்கள் வந்தன. அதையடுத்து அவர் வீட்டிற்குக் குண்டொன்றும் வீசப்பட்டது. அதிர்ஷ்டவசமாக எவருக்கும் உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை.

சில வருடங்களுக்குப் பின் மீண்டும் மிரட்டல்கள் மணிரத்னத்திற்கு வரத் தொடங்கியுள்ளன. 'பம்பாய்' படத்தில் நடித்த அரவிந்தசாமிக்கும் மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

சில முஸ்லிம் தீவிரவாதிகளே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் மணிரத்னத்தின் வீட்டிற்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அரவிந்தசாமிக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அத்துடன் 'ஹேராம்' படத்தின் சில காட்சிகளும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறி கமலுக்கும் தொலைபேசி வழியாக மிரட்டல்கள். இதனால் 'ஆளவந்தான்' படப்பிடிப்பிற்காக புதுடில்லியில் இருந்த கமலுக்கும் பலத்த பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருந்தது.

# புதுமுகங்கள் நடிக்கும் 'லவ் சேனல்'

ஜெயவிலாஸ் என்ற புதிய பட நிறுவனம் தயாரிக்கும் படம் 'லவ் சேனல்'. இதில் நாயகன்-நாயகியாக நடிப்பவர்கள் புதுமுகங்கள். நாயகன்-சஞ்வர். நாயகி-மோனிஷா. 'இந்திரா' படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்த மோனிஷா இப்படத்தில் முதன் முதலாக நாயகியாக அறிமுகமாகிறார்.

இவர்களுடன் பொன்னம்பலம், ஆர்.சுந்தர்ராஜன், பாத்திமா பாபு, இந்து, சபிதா ஆனந்த் உட்பட பலர் நடிக்கிறார்கள்.

ராஜராஜன் ஒளிப்பதிவு செய்யும் இப்படத்திற்கு தேவா இசையமைக்க குமரேசன் என்ற புதியவர் கதை-திரைக்கதை-வசனம் எழுதி இயக்குகிறார். இவர் கே.எஸ்.ரவிக்குமாரிடம் 'புரியாத புதிர்' படத்தில் இருந்து 'படையப்பா' படம் வரை அனைத்துப் படங்களிலும் இணை இயக்குநராகப் பணியாற்றியவர்.

இவர் தான் சரத்குமார் நடித்த 'ஊர் மரியாதை' படத்திற்குக் கதை-வசனம் எழுதியவர்.

முழுக்க முழுக்க பொழுது போக்கு அம்சங்களுடன் குரு கே.எஸ்.ரவிக்குமாரின் படம் போல் நகைச்சுவை-சென்டிமெண்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்குகிறார் குமரேசன்.

# கதிர் தயாரித்து இயக்கும்

# 'காதல் வைரஸ்'

'இதயம்', 'உழவன்' 'காதல் தேசம்', 'காதலர் தினம்' ஆகிய படங்களை இயக்கிய கதிர், அடுத்து இயக்கும் படத்திற்கு 'காதல் வைரஸ்' என்று பெயரிட்டுள்ளார்.

அத்துடன் இப்படத்தின் மூலம் தயாரிப்பாளராகவும் அடியெடுத்து வைக்கிறார் கதிர். தனது படநிறுவனத்திற்கு சவுண்ட் அண்ட் லைட் ஸ்டுடியோஸ் என்று பெயர் வைத்துள்ளார் இவர்.

இப்படத்தில் கதாநாயகன்-கதாநாயகியாகப் புதுமுகங்கள் அறிமுகமாகிறார்கள். இவர்களுடன் ரகுவரன், எஸ்.பி.பாலசுப்ரமணியம், விவேக், ஜனகராஜ், மனோரமா, ஸ்ரீவித்யா நடிக்க, 'காதல் தேசம்' படத்தில் கதிரால் அறிமுகப்படுத்தப்பட்ட அப்பாஸும் இப்படத்தில் முக்கிய வேடமொன்றில் தோன்றவுள்ளார்.

பி.சி.ஸ்ரீராம் மற்றும் அவரது சீடர் ஜீவா ஆகியோரிடம் உதவியாளராகப் பணிபுரிந்த அர்ஜுன் ஜெனா இப்படத்தின் மூலம் ஒளிப்பதிவாளராக அறிமுகமாகிறார்.

கவி மார்க்கண்டேயர் வாலியின் பாடல்களுக்கு இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதித் தயாரித்து இயக்குகிறார் கதிர்.

# மி னி சி னி

✲ கமல் இரட்டை வேடங்களில் நடிக்கும் 'ஆளவந்தான்' படத்தை இயக்கி வரும் சுரேஷ் கிருஷ்ணா, அடுத்து அஜித் கதாநாயகனாக நடிக்கும் படம் ஒன்றை இயக்கவிருக்கிறார்.

✲ 'சொல்லாமலே' படத்தை இயக்கிய சசி அடுத்து பிரபுதேவா-ஜோதிகா ஜோடியாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்தை ஆஸ்கார் ஃபிலிம்ஸ் படநிறுவனம் தயாரிக்கவுள்ளது.

✲ இயக்குநர் ஷங்கரிடம் உதவியாளராகப் பணிபுரிந்த செல்வன் என்பவர் தனியாக வந்து 'ஆரி' என்ற பெயரில் படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்தில் விக்னேஷ் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

✲ சரத்குமார்-ரம்பா ஜோடியாக நடிக்க, மு.களஞ்சியம் இயக்கத்தில் உருவாகி, பாதியில் நின்று போயிருக்கும் 'கேசவன்' படத்தை எடுத்து தூசி தட்டி, மறுபடி தொடங்கவிருக்கிறார்கள்.

✲ மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் பல வருடங்களுக்கு முன்பு 'ரசித்தேன் இசைத்தேன்' என்ற இசை அல்பத்தை வெளியிட்டிருந்தார். இப்போது 'சங்கீதம் சந்தோஷம்' என்ற இசை அல்பத்தை வெளியிடவுள்ளார்.

✲ மம்முட்டி-நெப்போலியன் இணைந்து நடித்த 'எதிரும் புதிரும்' படத்தை இயக்கிய வி.சி.ரமணி, நீண்ட இடைவெளிக்கு பின் இயக்கும் புதிய படத்தில் விக்ரம்-லைலா ஜோடியாக நடிக்கவுள்ளார்கள்.

✲ ஆர்.பி.சௌத்ரி தயாரித்த மொழிமாற்றுப்படமான 'பாப்பா'வில் தெய்வசக்தி மிக்க 'பாப்பா'வாக நடித்திருக்கும் பாப்பாவின் பெயர் ஷொரி. இந்தக் குட்டி நட்சத்திரம் கல்கத்தாவின் இறக்குமதியாகும்.

✲ சூர்யா-ஜோதிகா ஜோடியாக நடித்த 'உயிரிலே கலந்தது' படத்தை இயக்கிய கே.ஆர்.ஜெயா இப்போது மலையாளப்படம் ஒன்றை இயக்கி வருகிறார்.



# அத்தையான மாமி

நல்ல 'சதை'யம்சத்தோடு 'என் மடிசார் மாமி' என்ற பெயரில் தமிழில் தயாரிக்கப்பட்ட மொழிமாற்றுப் படத்தின் பெயரிற்குக் கடும் எதிர்ப்பு.

'அந்த' மாதிரியான படத்திற்கு எப்படி பிராமணப் பெயர் வைக்கலாம் என்று போர்க்கொடி உயர்த்தியது பிராமணர் சங்கம்.

அவர்களின் எதிர்ப்புச் சரியே எனப்பட இப்போது படத்தலைப்பு 'என் அத்தை' என்று மாற்றப்பட்டுவிட்டது.




# ராவுத்தர் தயாரிப்பில் 5 படங்கள்

'சிம்மாசனம்' படத்தைத் தொடர்ந்து, அப்படத்தின் தயாரிப்பாளரும் விஜயகாந்தின் நண்பருமான இப்ராஹிம் ராவுத்தர் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

பல கோடிகள் பட்ஜெட் போட்டுப் படமெடுப்பதைச் சில காலம் நிறுத்தி வைத்துவிட்டு, குறைந்த செலவில் படமெடுக்கத் திட்டமிட்டுள்ளார் இவர்.

இதன் முதற்கட்டமாக ஒரே நேரத்தில் 5 படங்களைத் தயாரிக்கவுள்ளார். ஒவ்வொரு படத்தையும் 40 இலட்ச ரூபாய்க்குள் முடித்து விடத் தீர்மானித்துள்ளார். இப்படங்களை மனோபாலா, செந்தில்நாதன், அரவிந்தராஜ், பன்னீர், ரமேஷ்போன்ற இயக்குநர்கள் இயக்கவுள்ளார்கள்.

# போட்டியோ போட்டி

மும்தாஜிற்கும் ராதிகா சௌத்ரிக்குமிடையே கடும்போட்டி ஏற்பட்டுள்ளது. ஒருவரது வாய்ப்பை இன்னொருவர் பறித்துக் கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் வேறு.

சத்யராஜின் 'ஞாட்டி'யில் மும்தாஜ் ஒரு கலக்குக் கலக்கியதை அடுத்து, சத்யராஜின் 'குங்குமப் பொட்டுக் கவுண்டர்' படத்தில் ராதிகா சௌத்ரி மும்தாஜை விட ஒரு படி மேலே போய்விட்டார்.

போட்டி போடுங்கள். உங்களது போட்டியால் ரசிகமகா ஜொள்ளர்களுக்குக் கொண்டாட்டம்தான்.

# எபி குஞ்சுமோ

'சூரியன்', 'ஜென்டி... போன்ற பிரமாண்ட... தயாரித்த கே.டி.குஞ்சு... புதிய படம் ஒன்றை...

# முகா...

# முரளி-பிர...

# படம்: 10...



# சூர்யாவின் 'கிஸ்'

'வாலி', 'குஷி' ஆகிய இரண்டெழுத்து வெற்றிப்படங்களை இயக்கிய சூர்யா அடுத்து அஜித்குமாரை வைத்து இயக்கும் படத்திற்கும் இரண்டெழுத்தில் வரும்படி 'நியூ' என்று பெயரிட்டுள்ளார்.

இதையடுத்து 'கிஸ்' என்று இன்னொரு படத்திற்கு பெயர் வைத்திருக்கிறார் சூர்யா. அப்படத்தை 'நியூ' படத்திற்குப் பின்னர் இயக்குவதால் இந்தக் 'கிக்'கான படப் பெயரை யாரும் 'சுட்டு'விடக்கூடாது என்பதற்காக படங்களின் பெயர்களைப் பதிவு செய்யும் ஃபிலிம் சேம்பரில் பதிவும் செய்துவிட்டார்.



எபி-பிரியங்கா திரிவேதி
படம்: சுவாசம்

திரையுலக மறுபக்கம் (187)

# வீட்டுச் சிறையில் கவர்ச்சி நடிகை

சுசீந்திராட்டிலிருந்து மயன்

ஜொலித்த நட்சத்திரமாக 'சிகர' இயக்குநர் படத்தில் நடிக்க ஆரம்பித்தவர் அந்தக் கவர்ச்சி நடிகை. குமரியானதும் ஓரிரு தமிழ்ப் படங்களில் தலையைக் காட்டினார். இருப்பினும் தமிழில் அவரால் பிரகாசிக்க முடியவில்லை.

தமிழில் கவர்ச்சி வேடத்தில் கூட வாய்ப்பு வராததால் தெலுங்குப் படங்களில் திறமை காட்ட ஆந்திராவுக்குச் சென்றார் நடிகை. தெலுங்குப் படங்களில் துண்டு துக்கடா வேடங்களில் தலை காட்டிய நடிகை, 'உச்ச நட்சத்திரத்தின்' நண்பரான தெலுங்கு நடிகரின் கண்ணில் பட்டார். படவுலகில் நல்லதொரு நிலைக்கு வரவேண்டுமானால் பிரமுகர் ஒருவரது தயவு அவசியம் தேவை என்பதை உணர்ந்த நடிகை அந்த நடிகரது கண்டிஷன்களுக்குக் கட்டுப்பட்டு, அவரது கட்டுப்பாட்டில் இருந்தார்.

தெலுங்கு நடிகரது அன்புக்குப் பாத்திரமாகி, அவரது அரவணைப்பில் இருந்தபோதே நடிகையும் சில படவாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டார். நடிகரது வீட்டிற்கு ஒருமுறை 'உச்சநட்சத்திர' நடிகர் சென்ற போது, கவர்ச்சி நடிகைக்கு சிபார்சு செய்தார் நடிகர்.

திரையுலகில் நுழைவதற்காக இந்த நடிகர்கள் இருவரும் பட்ட கஷ்டங்களை இன்றும் கூட மறக்காதவர்கள். அத்துடன் இருவரும் நல்ல நண்பர்களும் கூட.

நண்பரின் சிபார்சை தட்டிக் கழிக்காது, தான் அப்போது நடித்துக் கொண்டிருந்த 'முஸ்லிம் பொருடைய' மூன்றெழுத்துப் படத்தில் இடம்பெற்ற பாடல் காட்சியில் ஆடவைத்தார் 'உச்சநட்சத்திர' நடிகர்.

அப்பாடல் பிரபலமாகியதை அடுத்து அந்த கவர்ச்சி நடிகைக்குத் தமிழில் பல படவாய்ப்புக்கள் வரத் தொடங்கின.

இரவு-பகல் பாராது படங்களில் நடிப்பதும், சிலருக்கு அனுசரணையாக நடந்து கொள்வதும், நடிகைக்கு ஒரு கட்டத்தில் வெறுத்துவிட்டது.

இந்நேரத்தில் நடிகையுடன் நடித்த துணை நடிகர் ஒருவருடன் நடிகைக்கு நட்பு ஏற்பட்டது. தன்னையும் ஒருவர் நேசிக்க மாட்டாரா? என்று ஏங்கிய நடிகையின் மனநிலையை புரிந்து கொண்ட அந்த நடிகர் நடிகையை ஆறுதல்படுத்தி வந்தார்.

நண்பர்களாக ஒன்று சேர்ந்த இருவரும் பின் காதலர்களாகி திருமணத்தில் இணைய முடிவு செய்தனர். தனக்கு நல்லதொரு வாழ்க்கை கிடைத்து விட்டது என்ற நடிகையின் நம்பிக்கையில் மண்விழுந்து விட்டது.

எப்படி?

நடிகை ஒரு பணங்காய்ச்சி மரம் அவரைத் திருமணம் செய்ய விட்டு விட்டால் இனிமேல் பணத்திற்கு என்ன செய்வது? என்று நினைத்து, நடிகையின் பெற்றோர்கள், இருவரையும் ஒன்றுசேரவிடாமல் பிரித்து விட்டனர்.

அதுமட்டுமன்றி மலையாள மந்திரவாதி என்று ஒருவரை அழைத்துவந்து, நடிகையின் மனதை மாற்றுகிறோம் என்று கூறி சில பூஜைகள், மந்திரங்கள் என்று செய்தார்கள்.

மந்திரவாதியின் ஆலோசனைப்படி நடிகையின் தலையை மொட்டையடித்து, வீட்டுச் சிறையில் வைத்துள்ளனர்.

# காதோடு சொல்லுகிறோம்

ஒரு காலத்தில் தனது கவர்ச்சி நடிப்பால் கொடி கட்டிப் பறந்த மூன்றெழுத்து 'மா'நடிகை, அண்மையில் தனது தங்கை தயவால் இரண்டெழுத்துப் படமொன்றில் ஒரு பாடலுக்கு ஆட்டம் போட்டுள்ளார். எப்படியாவது, யாரையாவது பிடித்து முன்னுக்கு வரவேண்டும் என்ற கொள்கையில் இருக்கும் அந்த நடிகை, தனக்கு வாய்ப்புக் கொடுத்த 'ஆசை' நாயகனை வளைத்துப்போடும் எண்ணத்தில் விடாது துரத்தி வருகிறாராம்.

கடந்த வருடக் கடைசியில் வெளியான 'மனுநீதம்' படத்தின் நாயகியான 'பிரதி' நடிகை தெலுங்கு தேசத்தைச் சேர்ந்தவராம். இவருக்கு ஏற்கனவே திருமணமாகி விவாகரத்தும் ஆகிவிட்டதாம். இவர் ஜோடி சேர்ந்திருக்கும் படநாயகனான கறுப்பு நடிகருடன் நெருக்கமாகியதால், நடிகர் வீட்டில் பெருங்குழப்பமாம். ஒரேயொரு படம் வெளிவந்த நிலையில், இவரைப்பற்றி இப்படியான செய்திகள் வெளிவர ஆரம்பித்து விட்டன.

'ஆஜலாம்பாள்' நடிகையைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் 'கிராம' நடிகர் இப்போது அந்த நடிகை மேல் கடும் கோபத்தில் இருக்கிறாராம். இவர்கள் இருவரும் நடிக்கும் படத்தில் சிறிய வேடமொன்றில் நடிக்கும் அறிமுக இளம் நடிகருடன் நடிகை, எல்லை மீறிப்பழக ஆரம்பித்திருப்பது தான் நடிகரது கடுங் கோபத்திற்குக் காரணமாம்.

'உ_யர' நடிகருக்கு ஜோடியாக நடிக்க 'தேவ' நடிகையைத் தேடிப் புதிய படவாய்ப்பொன்று சென்றதாம். இப்படத்தில் நடிப்பது பற்றிய பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்தபோது, அப்படத்தில் 'தொடையழகி' நடிகை நடிப்பதாக அறிவிப்பு வெளியாகி விட்டதாம். தனக்கு வரவேண்டிய வாய்ப்பை 'தொடையழகி' நடிகை தட்டிப் பறித்து விட்டார் என்று புலம்பித் தள்ளுகிறாராம் 'தேவ' நடிகை.

# கே. பாலச்சந்தரின் 100வது படம் 'பார்த்தாலே பரவசம்'

'நீர்க்குமிழி' படம் மூலம் இயக்குநராக அறிமுகமான இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தர் 100வது படமாக இயக்கும் படத்தை அவரது 'கவிதாலயா' படநிறுவனமே தயாரிக்கிறது.

நீண்ட இடைவெளிக்குப் பின் பாலச்சந்தர் இயக்கும் இப்படத்திற்கு 'பார்த்தாலே பரவசம்' என்று பெயர் வைத்துள்ளார்.

இதில் மாதவன் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடிகளாக சிம்ரான்-ஸ்நேகா நடிக்கிறார்கள். நடன இயக்குநர் லாரன்ஸ் முக்கிய வேடத்தில் தோன்றுகிறார்.


இவர்களுடன், மணிவண்ணன் (பாலச்சந்தர் இயக்கத்தில் இவர் நடிக்கும் முதல் படம் இது), 'விவேக், தாமு, சார்லி, எஸ்.பி.பாலசுப்ரமணியம், 'தலைவாசல்' விஜய், 'நிழல்கள்'ரவி, வடிவுக்கரசி ஆகியோரும் நடிக்கிறார்கள்.

ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்க, வைரமுத்து பாடல்களைப் புனைகிறார். கோபு-பாபு வசனம் எழுத, கதை-திரைக்கதை அமைத்து இயக்கித் தயாரிக்கிறார் கே.பாலச்சந்தர்.

# மறுத்தார் மும்தாஜ்

'களவும் கற்றுமற' படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடனமாட மும்தாஜை அணுகியிருக்கிறார்கள். உடனடியாக மறுத்து விட்டார் மும்தாஜ்.

படத்தில் நடனமாடுவதுடன் சில காட்சிகளில் நடிப்பதாகவும் இருந்தால் தான் நடிப்பாராம். இல்லாவிட்டால் இப்போதைக்கு 'நோ'வாம்.



பிரசாந்த்-மும்தாஜ்
படம்: ஸ்டார்

# ...ன் தயாரித்து நடிக்கும் 'சுவாசம்'

...மன்', ரட்சகன்' ...ான படங்களைத் ...னின் மகன் எபி ... தயாரித்து நடிக்கிறார். இப்படத்திற்கு 'சுவாசம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே தந்தை தயாரிப்பில் எபி நடித்த 'கோடீஸ்வரன்' படம் இன்னமும் வெளிவராத நிலையில் இருக்கிறது.

புதியவரான சி.பாலாஜி திரைக்கதை அமைத்து இயக்கும் இப்படத்தின் நாயகியாக கல்கத்தா இறக்குமதியான பிரியங்கா திரிவேதி நடிக்கிறார்.

வைரமுத்துவின் பாடல்களுக்கு ஆகோஷ் இசையமைக்கிறார்.

# ...ப்பில்

# ...திியுஷா

# ...னுநீதி




ரம்பா

# சந்தோஷத்தில் இசைக் குடும்பம்

பொங்கலுக்கு வெளியாகி வெற்றிநடைபோட்டுக் கொண்டிருக்கும் 'வாஞ்சிநாதன்', 'ப்ரெண்ட்ஸ்', 'தீனா' படங்களின் தயாரிப்பாளர்கள் இயக்குநர்கள், நடிகை நடிகையரை விட சந்தோஷத்தில் இருப்பவர்கள் யார் தெரியுமா?

இசைஞானி இளையராஜா குடும்பத்தினர். காரணம் அப்பா இளையராஜா 'ப்ரெண்ட்ஸ்' படத்திற்கும் மூத்தமகன் கார்த்திக்ராஜா 'வாஞ்சிநாதன்' படத்திற்கும் இளையமகன் யுவன் சங்கர் ராஜா 'தீனா' படத்திற்கும் இசையமைத்துள்ளனர்.

மூன்று படங்களின் வெற்றிக்கு பாடல்கள் 'ஹிட்'டாகியிருப்பதும் ஒரு காரணம் என்பதால்தான் இசைக்குடும்பத்தில் இந்த மகிழ்ச்சி.

# விஜய்யின் நிபந்தனை

சமீப காலமாக விஜய்யிடம் எந்த இயக்குநர் கதை சொல்லச் சென்றாலும் பிறமொழிகளில் வெற்றிபெற்ற கதையாக இருந்தால் சொல்லும் படி கேட்கிறார்.

'நினைத்தேன் வந்தாய்' (பெல்லி சந்தடி), 'காதலுக்கு மரியாதை' (அனியத்தி புறாவு), 'ப்ரெண்ட்ஸ்' (ப்ரெண்ட்ஸ்) ஆகிய படங்களின் வெற்றி தான், விஜய்யை பிறமொழிக் கதையைக் கேட்கத் தூண்டுகிறதாம்.

# உலகப் புகழ் பெற்ற படம்

ரோமியோ-ஜூலியட், லைலா-மஜ்னு, அம்பிகாபதி-அமராவதிபோல் சோக முடிவுடன் கூடிய காதல் சில வருடங்களுக்கு முன் நடந்தது.

யூகோஸ்லாவியக் குடியரசு பல துண்டங்களாப் பிரிந்தபோது, அதிலிருந்து பிரிந்த பொஸ்னியாவில் நடந்த சம்பவம் இது:

பொஸ்கோ பிரசிக், சேர்பிய இன இளைஞன், அட்மிரா இஸ்மிக் ஒரு முஸ்லிம் யுவதி. பொஸ்னியா பிளவுபடுவதற்கு முன்னர் இந்த இருவரும் ஒருவரையொருவர் மனப்பூர்வமாகக் காதலித்தனர்.

பொஸ்னியா தனியாகப் பிரிந்தபோது, அங்கு சேர்பியர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் இனமோதல்கள் வெடித்தன. இந்த மோதலால் சேர்பியாவுக்குத் தப்பியோட முயன்றனர் காதலர்கள்.

யுத்த சூனியப் பிரதேசத்தினூடாக இவர்கள் இருவரும் தப்பிப்போகும்போது





வந்த, துப்பாக்கி ரவைகள் காதலர்கள் உடம்பில் சல்லடை போட்டன. ஒருவரையொருவர் கட்டியணைத்தபடி இருவரது உடல்களும் பல நாட்கள் அப்படியே கிடந்தன.

இறுதியில் சேர்பியத் துருப்புக்கள் இருவரது சடலங்களையும் எடுத்துச் சென்று, கிரெபெவிக்கா என்ற கிராமத்தில் ஒன்றாக அடக்கம் செய்தனர்.

வாழ்வில் ஒன்று சேர முடியாத காதலர்கள் இருவரும் சாவில் ஒன்று சேர்ந்த இந்த உலகப் புகழ்பெற்ற படம் 'காதலர் தின' சிறப்பிதழில் இடம்பெறுவது சாலப் பொருத்தமாகும்.

## காதலிப்போம் வா..

கண்ணே...!
காலநதி எமக்காக ஓடும்
சரித்திரம் நாளை...எமை
முன்னோடிகள் எனப் போற்றும்
காதலிப்போம் வா...!
**
காற்றில்லாமல்...
மூச்சுவிடலாம்.
வார்த்தையில்லாமல்...!
பேசலாம்;
காதலிப்போம் வா...
**
நீரை வெறுக்கும் மீன்
சிறகை வெறுக்கும் பறவை
இவையெல்லாம் நிதர்சனமாகலாம்.
'நானில்லா நீ' என்பது மட்டும்..
கனவாயும் நினைக்க இயலாது.
காதலிப்போம் வா...!
**
யதார்த்தங்களை மறந்து
கற்பனை சிறகடிக்க...
கனவுக்குள் இறங்கி...
புதுயுகம் தேடலாம்.
காதலிப்போம் வா...
**
தனிமையை வேண்டி..
எனை மட்டும் அணைத்து,
கடமையை மறந்து
காதலிப்போம் வா...!
**
மாலையில்நாம் பேச...
மறைவான் சூரியன்
எம் லீலைகள் கண்டு...
வெட்கித்துச் சிரிக்கும்.
நிலவு கூட...
காதலிப்போம் வா...!
**
வானம் இடிந்து விழுந்தாலும்...
பூமி புதைந்து போனாலும்..
நீயும் நானும் இணைந்து.
புதுக் காதல் உலகில் சஞ்சரிக்கலாம்.
காதலிப்போம் வா...!
**

சங்கம ஹிஸாம்,
திருகோணமலை.

## பருவக் காதலின் பரிதாப நிலை

இளமைப் பருவத்தில்
எல்லோர்க்கும் வந்துவிடும்
பொல்லாத தொற்று நோய்தான்
முன்றெழுத்தில் அமைந்த காதல்;
எப்போது வந்ததென்றும்
எதற்காக வந்தென்றும்
எவருக்கும் தெரியாமல்
எம்மை வந்து தொற்றிவிடும்!
•••
காதல் நோய் வந்துவிட்டால்
கண்ணுறக்கம் மறந்துவிடும்;
பகல் முழுக்க பட்டினியால்
பரிதவித்து வாடினாலும்
பசி என்னும் உணர்வது
ஒருபோதும் வருவதில்லை!
•••
படிக்கவும் மனதில்லை
பாடத்திலும் கவனமில்லை
வீட்டுக் கஷ்டங்கள்
மனதுக்கு வருவதில்லை;
புத்தகத்தை மூடி வைத்து
கனவுலகில் தான்மிதப்பர்!
பிச்சுக்கும் பார்க்கிறக்கும்
விருப்பமாய் சென்றிடுவர்.
•••
அடிக்கடி தலையை வாரி
அலங்காரம் செய்திடுவர்!
அழகாக இருப்பது போல்
கற்பனை பண்ணிடுவர்!
ஆழமாகச் சிந்திக்காமல்
அவசர முடிவெடுத்து
யாருக்கு தெரிந்திடாமல்
ஊரை விட்டு ஓடிடுவர்!
•••
ஆரம்ப மண வாழ்க்கை
அமர்க்களமாயிருக்கும்
போகப் போகத்தான்
புளுத்துப் போய்விடும்
அவசர காதலதன்
ஆரம்ப முடிவினால்
அடிபிடி விவாகரத்து
பிரிவிலே போய்முடியும்!

மாணிக்கன்-இளங்கோ,
முன்னம்போடி வெட்டை.



## காதலர் தினம்

வெந்தபுண்ணில்
வேல் அவள் விழிகள்.
o–o
வெண்கட்டி
எழுத்து
அவள் பற்கள்!
o–o
பிஞ்சுப்
பயத்தங்காய்
அவள் விரல்கள்!
o–o
வைகறை
சூரியன்
அவள் வதனம்!
o–o
இளைஞர்களை
வாவா சொல்லும்
அவள் தாவணி!
o–o
இட்ட அடி
நோக
கொலுசு சத்தம்.
o–o
கண்ணில் விழுந்த
தூசு
அவள் இடை!
o–o
துகில்
உரியும்
மேற்கு வானம்.
o–o
பிள்ளையார் கோயில்
மணி
அவள் சிரிப்பொலி.
o–o
பாத்திரம் அறிந்தும்
பிச்சை போடாத
அவள் மனசு!
o–o
கேக்காமலே
பல இதயங்களை
திருடிக்கொள்ளும்
கள்ளத் தனம்.
o–o
இனி என்ன
அவள் வாய் திறந்தால்
காதலர் தினம்
பிறக்கும்!
o–o

இணுவில், உத்திரன்.

## காதலுக்கு மரணமே இல்லை!!!

காதலென்பது
அறிவையும், அழகையும்
பார்த்து வருவதில்லை!
அது உருவமில்லாத
உதிரம் போல்
அனைத்து ஜீவன்களிலும்
உள்ளது...!
இதை சில பேர் வெறுக்கிறார்கள்,
பல பேர் ஆதரிக்கிறார்கள்,
காதலை, காதலால்
காதலிப்பவர்களுக்கு
இனிக்கிறது.
மறுப்போருக்கு
கசக்கிறது!
காதல் பகலை
வெறுக்கிறது.
இரவை அணைக்கிறது.
காதல், காமத்துக்கும்கூட
இடம் கொடுக்கிறது.
காதல் ஒரு காலமும்
அழிவதில்லை.
காதலர்கள்தான்
அழிவது!
எனவே;
காதலுக்கு என்றுமே;
மரணம் இல்லை!

தொகுப்பு:
க.அஜந்தகுமார்,
அக்கரைப்பற்று-07.

## முதல் வாழ்த்து அட்டை

காதலர் தினமான 'வலன்ரைன்ஸ் டே' அன்று காதலர்களுக்கிடையே பரிமாறப்படும் வாழ்த்து அட்டைகள் முதன் முதலில் எப்போது அறிமுகப்படுத்தப் பட்டது தெரியுமா?

1415ம் ஆண்டுதான். இங்கிலாந்து நாட்டின் 'டியூக் ஒ.ப் ஓர்லின்ஸ்' மன்னர், பிரான்ஸ் நாட்டிலிருந்து தன் மனைவிக்கு தானே வாழ்த்து அட்டையைத் தயார் செய்து, அதில் ஒரு கவிதையையும் எழுதி அனுப்பினார். இது தான் முதல் காதலர் தின வாழ்த்து அட்டை ஆகும்.

## காதலர்களே....!

நெஞ்சை நிமிர்த்துங்கள்
காதலர்களே-இனி
நேருக்கு நேர் நின்று
அன்புக்குப் போர்ப்படை
சேர்ப்போம்...!
இரங்கும் நெஞ்சங்கள்
இதயத்தில் பஞ்சமாவதால்.
பட்டினிக் காதலை
மாய்ப்போம்....!
நெஞ்சின் பாரத்தை
வேருடன் சாய்ப்போம்!
சேரும் காதலுக்குள்
கண்ணீர் துளிகள்
வாட்டி வதைப்பதைமாற்றி-அதை
பன்னீர் மஞ்சத்தில் ஏற்றி கதறும் காதலை
காப்பாற்றுவோம் என...!

ஜே.லக்கி,
பெரியகல்லாறு.

## நில் கவனி காதலி

காதல் இளம் உள்ளங்களைத் துரத்தி விளையாட வைக்கும் கேளிக்கை. காதல் கொண்ட மனதின் விசித்திரங்களை விளக்க வைக்க முடியாது.

துள்ளாத மனங்களையும் துள்ள வைக்கும் காதலில் வெற்றி பெற இந்த காதல் சாஸ்திரங்களைக் கடைப்பிடியுங்கள்:



♥ பெப்ரவரி 14ம் திகதி 'காதலர் தினம்'. அன்று முதன் முதலில் காதலைத் தெரிவித்தால், காதல் வெற்றி பெறும். அன்று காதலுடன் பரிசுப் பொருட்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். (இந்த வருடம் தவற விட்டவர்கள் அடுத்த வருடம் வரை காத்திருங்கள்)

♥ முதன் முதலில் வெள்ளிக்கிழமையன்று சந்தித்து ஆரம்பமாகும் காதல் யாராலும் அசைக்க முடியாத ஆலமரம் போன்றதாக இருக்கும்.

♥ தமிழ் மாதங்களில் வைகாசி, ஐப்பசி, பங்குனி ஆகிய மூன்று மாதங்களும் காதலைத் தொடங்க மிகவும் ராசியான மாதங்களாகும்.

♥ ஆங்கிலத் திகதிகளில் கூட்டெண் 3,5,6 வரக்கூடிய (3,5,6,12,15, 21,23,24 ஆகிய திகதிகளில் காதலை ஆரம்பித்தால், காதல் வாழ்க்கை சிறப்பாக அமையும்.

♥ முதன் முதலில் நீர் உள்ள பகுதிகளிலும், பூக்கள் நிறைந்த பகுதிகளிலும் அரும்புகின்ற காதல் அசைக்க முடியாத காதலாக இருக்கும்.

♥ காதலைத் தெரிவிக்க சிவப்பு ஒற்றை ரோஜாவைக் கொடுக்க வேண்டும்.

♥ காதல் பரிசாக முதலில் மங்களப் பொருட்களையோ, வாசனைத் திரவியங்களையோ, வெள்ளிப் பொருட்களையோ கொடுத்தால், காதல் கிடுகிடுவென வளரும். எக்காரணத்தைக் கொண்டும் பேனாவைக் கொடுத்துவிடாதீர்கள்!

## காதல் மொழிகள்

கற்பனை உலகத்தில் ஓர் அற்புத உண்மை காதல்.

-பெரிகோர்-

சூரியன் உலகிற்கு எப்படியோ, காதலும் அப்படியே வாழ்க்கைக்கு.

-டிபோல் ஸாக்-

காதலுக்கு மருந்தும் இல்லை; மருத்துவனும் கிடையாது.

-பேர்ன்ஸ்-

காதல் என்பது மலர். அது திருமணத்தில் கனியாகும்.

-சாசர்-

காதலர் கோபம்தான் காதலுக்குப் புத்துயிர்.

-ரேஜர்ஸ்-

காதலைக் காதலால்தான் குணப்படுத்த முடியும்.

-ஜோன் போர்ட்-


தடைகள்தான் காதலுக்கு அதிக மதிப்பைக் கொடுக்கிறது.

-வோகல்-

வாழ்க்கை என்னும் மலரில் காதல்தான் தேன்.

-விக்டர் ஹியூகோ-

## பேனா நண்பர்கள்



பெயர்: ரி.தீபன்
வயது: 20
முகவரி: இல. 66, சிதம்பரபுரம், வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு.



பெயர்: ரி.கார்த்திகா
வயது: 19
முகவரி: பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
பொழுது போக்கு: வழமையானவை.

## இந்தவாரம் உங்கள் பலன்

18.02.2001 முதல் 24.02.2001வரை

ஜோதிடர் 'கௌரி'

**மேடம்:**
கல்வியில் உயர்முன்னேற்றமும் தொழிலில் மேன்மையும் காணப்படும். தடைகள் நிவர்த்தியாகும். நோய் துன்பம் நீங்கும். ஆலய தரிசனமுண்டு. முக்கிய திட்டங்கள் நிறைவேறும். அச்சுவினி நட்சத்திரகாரருக்கு மகிழ்ச்சியான காலம். நிலை தென்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 18, 23.

**இடபம்:**
நோய் துன்பம் அதிகரிக்கும். வேதனை காணப்படும். எதிலும் கவனம் அவசியம். சனி, வியாழ பார்வை நன்றாக இல்லாததால், எதிலும் அவதானமாகச் செயற்படவும். றோகினி நட்சத்திரகாரருக்கு பண வரவுண்டு.
அதிஷ்ட நாட்கள்: புதன், சனி.
அதிஷ்ட நிறம்: இளம் சிவப்பு; எண்: 02.
அதிஷ்ட திகதிகள்: 20, 22.

**மிதுனம்:**
எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். திருமண சுபகரும பேச்சுக்கள் தொடரும். தொழில், பணவசதி சீராக அமையும். உதவிகள் தானாக வந்து சேரும். தூர இடத்து உறவினர்கள் வருகை நன்மை தரும். திருவாதிரை நட்சத்திரகாரர் பயனடைவர்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளம் பச்சை; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 22, 24.

**கடகம்:**
எதிர்பார்த்த விடயம் கைகூடும். வெளியார் ஆதரவு பலன்தரும். தொழிலில் திருப்தியான நிலையடையும். மாறுதல்களும் காணப்படும். பூச நட்சத்திரக் குடும்பப் பெண்களிற்கு நல் உயர்வைக் கொடுக்கலாம்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 21, 24.

**சிம்மம்:**
மனக் கவலை நிவர்த்தியாகும். எதிர்பார்த்த பணவரவு வரும். தொழில் விடயங்கள் சமபலன் தரும். குடும்பப் பிரச்சனைகள் நிவர்த்தியாகும். திருமண காரியங்கள் இடம்பெரும். விருட்சிக இராசிக்காரர்களால் நன்மைகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 19, 23.

**கன்னி:**
சகோதரர்களின் உதவி கிட்டும். நல்ல முடிவுகள் காலப்பிற்பகுதியில் அமையும். செலவுகள் கூடுவதுடன் அலைச்சல் தென்படும். தொழில் கருமங்கள் கைகூடும். உத்தர நட்சத்திரக்காரர் செலவுகளைத் தவிர்க்கவும்.
அதிஷ்ட நாட்கள்: சனி, திங்கள்.
அதிஷ்ட நிறம்: இள நீலம்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள்: 22, 23.

**துலாம்:**
தடைப்பட்ட காரியங்கள் சீரடையும். பணவருவாயுண்டு. காதல் சம்மந்தப்பட்ட விடயங்களில் சிக்கல் தீரும். தூர இடத்து உறவினர்களின் மகிழ்ச்சிக்குரிய செய்திகள் கிட்டும். விசாக, சுவாதி நட்சத்திரகாரர்களுக்கு மாற்றங்கள் ஏற்படலாம்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி.
அதிஷ்ட மரூண் வர்ணம்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 18, 21.

**விருட்சிகம்:**
தடைப்பட்ட பிரயாணம் வெற்றியாகும். தொழிலில் உயர்வு தென்படும். முக்கிய முடிவுகளில் சில மாறுதல்களும் அலைச்சலான நிலையும் தென்படும். அனுஷ நட்சத்திரகாரருக்கு நல்ல மாற்றங்கள் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம்: மண்நிறம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 18, 19.

**தனுசு:**
மனதில் குழப்பநிலை காணப்படும். பிரயாண அலைச்சல்களும் செலவுகளும் அதிகமாகும். நாட்பட்ட நோய் துன்பம் விலகும். முல நட்சத்திரப் பெண்கள், குடும்பஸ்தர் வருமான வசதியைப் பெறுவர்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 08.
அதிஷ்ட திகதகிள்: 20, 23.

**மகரம்:**
உறவினர்களின் உதவி தொடரும். எதிர்பார்த்த தொழில் அனுகூலமாகும். மிக முக்கிய நபர்களைச் சந்திப்பர். பிள்ளைகளின் சுபகரும முடிவுகள் இடம்பெறும். பிரயாண அமைப்பு இருப்பிட மாற்றத்துக்கு இடமுண்டு.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம்: ஊதா; எண்: 04.
அதிஷ்ட திகதிகள்: 22, 24.

**கும்பம்:**
கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சனைகள் தோன்றும். நோய் துன்பம் தலையெடுக்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். எதிலும் ஓர் இழுபறியான நிலை தென்படும். பிள்ளைகளால் வாரப் பிற்பகுதியில் நல்ல பயன்கள் ஏற்படும்.
அதிஷ்டநாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: ஒரேஞ்சு; எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 21, 24

**மீனம்:**
உடல் உறுதியாகக் காணப்படும், நீண்ட நாள் கனவு பலிக்கும். செலவுகள் அதிகரித் தாலும் வருமானங்கள் கூடும். புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். வாகனத் தொழில் செய் வோர் கூடிய வருமானம் பெறுவர். ஆலய தரிசன மும் உத்திரட்டாதி நட்சத்திரக்காரருக்கு ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: சனி, புதன்.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 25, 24.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## பேன்களை ஒழிப்பது எப்படி?



தலைமுடி அதிகமாக இருந்தாலும், தலைமுடியை சுத்தமாக பராமரிக்காவிட்டாலும் தலையில் பேன்கள் ஏற்படும். பேன் தொல்லை பெரும் தொல்லை. பாடசாலை மாணவிகளுக்கு தலையில் பேன் இருந்தால், அவர்கள் அடிக்கடி தலையை சொரிந்து கொண்டே இருப்பர். இதன் காரணமாக அவர்களுக்கு எரிச்சல், அழுகை, படிப்பில் கவனமின்மை போன்றவை ஏற்படும். பெற்றோர்தான் மிகவும் கண்ணும் கருத்துமாக பள்ளி செல்லும் குழந்தைகளின் தலையை அடிக்கடி வாரி பேன்களை எடுத்து விட வேண்டும்.

இப்போது பேன்களை ஒழிக்க பேன் மருந்து போன்றவை வந்துள்ளன. இருந்தாலும் பேன்களை பேன் சீப்பு கொண்டு வாரி எடுப்பதுதான் சிறந்தது என்று இது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட ஐரோப்பிய விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

❋ அதுவும் தலைக்கு குளித்ததும், ஈரத் தலையில் பேன்களை வாரி எடுக்கலாம். அல்லது எண்ணெய் தேய்த்து குளிக்கும்போது, எண்ணையை தலையில் நன்றாக தேய்த்து விட்டு, வாரினால் பேன்கள் அனைத்தும் எளிதாக வந்துவிடும்.

❋ பேன் சீப்பை கொண்டு ரத்தம் வரும் அளவிற்கு அழுத்தமாக வார வேண்டும் என்பதில்லை. பதமாக மேல் புறதலை, பக்க வாட்டு பகுதிகள், காதுப்பகுதி, பிடரிப்பகுதி என்று மாற்றி மாற்றி வாரவேண்டும். இப்படி பேன் வாரும்போது தலையில் சிக்கு சிறிதும் இருக்கக்கூடாது. சிக்கை நீக்கி விட்டு தான் பேன் வார வேண்டும்.

❋ வாரம் ஒரு முறையாவது தலைக்கு குளிக்க வேண்டும். தலையில் அழுக்கு சேர்ந்தாலும் பேன் வரும். தேங்காய் எண்ணையில் கற்பூரத்தை போட்டு லேசாக சூடாக்க வேண்டும். அப்போது கற்பூரம் நன்கு இளகி எண்ணையுடன் கலந்துவிடும்.

❋ இந்த எண்ணையுடன் எலுமிச்சை சாறு சிறிதளவு கலந்து முடியின் வேர்க்காலில் நன்கு மசாஜ் செய்வது போல தேய்க்க வேண்டும். இப்படிச்செய்து சிறிது நேரம் சென்று ஷாம்பூவோ, சீயக்காயோ தேய்த்து குளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் பேன், பொடுகு தொல்லை இருக்காது.

❋ அடிக்கடி ஷாம்பூ போடுவது, மருதோன்றி தடவுவது, எலுமிச்சை சாறு அதிகம் தலையில் தடவுவது போன்றவற்றாலும் தலைமுடி உலர்ந்து துவண்டு வறட்சியாக காணப்படும். தலைக்கு எண்ணெய் தடவி, தயிர், முட்டை அரைத்த வெந்தயம் போன்றவற்றை தேய்த்தால் தலைமுடி வறட்சி நீங்கும்.

❋ கூடுமானவரை ரசாயன ஷாம்பூக்களை தவிர்த்து மூலிகை ஷாம்பூக்களை உபயோகிப்பது நல்லது. வில்வப்பழம், நெல்லிக்காய் பவுடர், சீயக்காய் தூள், செம்பருத்தி இலை போன்றவற்றை தலையில் தேய்த்து குளிக்க உப யோகிப்பது நல்ல.

❋ தலையில் லேசாக விளக்கெண்ணெய் தடவி வந்தாலும் தலைமுடி கருகருவென்று வளரும்.

❋ தேனீர், கோப்பி அதிகம் குடிப்பதை தவிர்க்க வேண்டும், வறுத்த, பொரித்த பண்டங்களை அதிகம் சாப்பிடக்கூடாது. இவ்வாறு செய்வதால் தலைமுடி அதிக அளவில் உதிர்வதைத் தவிர்க்கலாம். ■

## அதிகாலையில் எழுந்திருக்கச் செய்யுங்கள்

இரவில் விரைவாகத் தூங்கி, அதிகாலையில் எழுந்திருக்கும் மாணவ, மாணவிகளே பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதாக பிரிட்டனின் பேர்மிங்காம் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வுகளில் தெரிய வருகிறது.

இதற்காகப் பல மாணவ, மாணவிகளின் உணவுப்பழக்கங்கள், வாழ்க்கை நடைமுறைகள் போன்றவை ஆய்வு செய்யப்பட்டன.

இரவில் அதிக நேரம் விழித்திருந்து தொலைக்காட்சி பார்ப்பது, நண்பர்களுடன் ஊர் சுற்றுவது என்று நேரத்தைச் செலவிட்டு விட்டு நடுநிசிக்குப்பின் தூங்கும் 13 வயதிற்கு மேற்பட்ட மாணவ மாணவிகளும் சரி, சிறு வயது மாணவ, மாணவியரும் சரி பரீட்சைகளில் சராசரியான பெறுபேறுகளைத்தான் பெறுகின்றனர்.

மாலையில் விரைவாக வீடு திரும்பி, அன்றைய பாடங்களைப் படித்து விட்டு, இரவு உணவை முடித்துக் கொண்டு சிறிது நேரம் மட்டுமே தொலைக்காட்சி பார்த்து விட்டுத் தூங்கும் பழக்கமுள்ள மாணவ, மாணவிகள் காலையில் விரைவாக எழுந்து விடுகின்றனர். அதனால் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கின்றனர்.

இவர்கள் தங்களது காலை உணவை நிதானமாக, இரசித்துச் சாப்பிட நேரம் உள்ளது. அதனால் காலை உணவில் சத்துள்ள அனைத்தும் குறைவின்றி இவர்களுக்குக் கிடைத்துப் புத்துணர்வு அதிகமாகிறது.

அதனால் இவர்கள் நன்றாகப் படிக்கின்றனர். இவர்களது மூளை நன்கு வேலை செய்கின்றது, என்று இந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

'நேரத்துடனேயே தூங்கப்போக வேண்டும். விரைவாக அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். இவ்வாறு செய்பவர்கள் உடல் நலத்துடனும், பண பலத்துடனும் வாழ்வார்கள்' என்று குறிப்பிடும் ஆங்கிலப் பாடல் போல் சிறு வயது முதலே உங்கள் குழந்தைகளுக்கு இப்பழக்கத்தைக் கற்றுக் கொடுங்கள்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** JC

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 24-02-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# மோனிக்கா என் மோனிக்கா

வழங்குவது 75 புவனா

மோனிக்கா லிண்டாவுடனான உரையாடலைத் தொடர்கிறாள்.

"ஒருமுறை மெக்சிகோ அதிபர் கிளின்ரனுடன் வெள்ளை மாளிகையில் முக்கிய பேச்சு நடத்தினார். அப்போது பேச்சுவார்த்தை முடிந்து கிளின்ரன் நேராக என்னிடம் வந்து அவரது இச்சையைத் தணித்துக்கொண்டார்."

இப்படி ஏராளமான பல தகவல்களை கொட்டித் தீர்த்த மோனிக்கா, தன்னை பொய் சாட்சி சொல்ல கிளின்ரன் வற்புறுத்தினார் என்று கூறிய குற்றச்சாட்டு நீதித்துறையின் கவனத்தை பெரிதும் ஈர்த்தது. அமெரிக்க நீதித்துறை இதை பெரிய குற்றச்சாட்டாக கருதுகிறது.

பொய்ச்சாட்சி சொல்ல மோனிக்காவை கிளின்ரன் வற்புறுத்தினார் என்பதற்கு தேவையான ஆதாரங்கள், லிண்டா கொடுத்து இருக்கும் 'டேப்'பில் உள்ளன. அதில் மோனிக்கா வெளியிட்டுள்ள இரகசியங்கள் இவைதான்:

"பவுலா ஜோன்ஸ் வழக்கில் கிளின்ரனுக்கு எதிராக சாட்சி சொல்வதற்காக எனக்கு சம்மன் அனுப்பப்பட இருக்கிறது என்பது தெரிந்ததும், கிளின்ரன் என்னை அழைத்துப் பேசினார், தன்னுடன் பாலியலுறவு வைத்துக் கொள்ளவில்லை என்று சாட்சி கூறினால் எனக்கு நியூயார்க் நகரில் நல்ல வேலை வாங்கித் தருவதாக கூறினார். அதன்பிறகு அவரது நண்பர் ஜோர்டன் நிர்வாகியாக இருக்கும் ரெவ்லான் சென்ட் நிறுவனத்தில் எனக்கு வேலை கிடைத்தது. இதையடுத்து கிளின்ரனுடன் பாலியல் உறவு வைத்துக் கொள்ளவில்லை என்று பொய் சாட்சி கூறினேன். "இந்த விஷயத்தில் நீ எனக்கு உதவி செய்தால் ஏராளமாக பணம் தருகிறேன். அவுஸ்திரேலியாவில் இருக்கும் எனது பண்ணையில் ஒரு பகுதியை உன்பேருக்கு எழுதித் தருகிறேன்"



இவ்வாறு லிண்டா பதிவு செய்துள்ள ஒலிநாடா கூறும் தகவல்கள் கிளின்ரன் கழுத்தை இறுக்கிக் கொண்டு இருக்கின்றன.

இந்த விவரங்கள் எல்லாம் கிடைத்த பிறகு வக்கீல் கென்னத் ஸ்டார் கோர்ட் அனுமதியுடன் மோனிக்கா தங்கி இருந்த வீட்டை சோதனை போட்டார்.

அப்போதுதான் 'கறை' படிந்த கருநீல ஆடை சிக்கியது. கிளின்ரனின் உயிர் அணு சிந்தி இருக்கும் இந்த ஆடையை சலவைக்குக்கூடப்போடாமல் போற்றிப் பாதுகாத்து வைத்து இருந்ததாக மோனிக்கா கூறி இருந்தார்.

இதுதவிர மோனிக்காவின் கம்ப்யூட்டர் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

காதல் பரிசாக மோனிக்காவுக்கு கிளின்ரன் வழங்கியதாக கூறப்படும் தங்கக் காப்பு ஒன்று, தொப்பி, தலைமுடிக்கான பின், சிகரெட் வைக்கும் கிண்ணம், காதல் கவிதைப் புத்தகம் ஆகியவையும் மோனிக்காவின் வீட்டில் கிடைத்துள்ளன.

இந்த கவிதைப் புத்தகம் கிளின்ரன் தனது மனைவியுடன் மசாச்சுசெட்ஸ் நகருக்கு உல்லாசப்பயணம் சென்று இருந்தபோது அங்குள்ள பிளாக் டாக் புத்தகக் கடையில் வாங்கியது என்பது வரை எதிர்தரப்பு வக்கீல்கள் கண்டுபிடித்துள்ளனர்.

தோண்டத் தோண்ட புதையல் கிடைத்த கதையாக கிளின்டனின் 'பாலியல்'விவகாரங்களைக் கிளறியபோது, இப்போது மற்றொரு புதிய செய்தி ஒன்றும் பூதாகரமாக வெளிப்பட்டது.

கிளின்ரன் 'பாலியல்'உறவுக்கு அடிமையான அவரது முன்னாள் காதலி டாலி கிலே பிரவுனிங். தற்போது இவருக்கு 51 வயது ஆகிறது. கிளின்ரனை விட ஒரு வயது இளையவர்.

வக்கீலுக்கு படித்துள்ள பிரவுனிங் 2 முறை திருமணமாகி குடும்ப வாழ்க்கையில் தோல்வி கண்டவர். கிளின்ரனைப்போல இவரும் பாலியலுக்கு அடிமையானவர். கிளின்ரன் மீது பவுலா ஜோன்ஸ் தொடர்ந்த பாலியல் புகார் வழக்கில் இவரும் ஒரு சாட்சி.

கிளின்ரனுடன் தனக்கிருந்த 40 ஆண்டு கால 'பாலியல்' உறவை நினைவுப்படுத்தி இவர் பின்வருமாறு விவரிக்கிறார்:

"கிளின்ரனுக்கும் எனக்கும் இடையேயான உறவு சாதாரண பாலியல் உறவு மட்டும் அல்ல. நாங்கள் அதற்கு அப்பாலும் மிகவும் நெருக்கமாகப் பழகினோம்.

அர்கன்சாஸ் மாநிலத்தில் தான் 1959ம் ஆண்டு நான் முதன் முதலாக கிளின்ரனை சந்தித்தேன். அப்போது எனக்கு 11 வயது. கிளின்ரன் என்னைவிட ஒரு வயது மூத்தவர். ஒரு 'கோல்ப்' மைதானத்தில் எங்களுடைய இந்த முதல் சந்திப்பு நடந்தது. அப்போது எங்கள் இருவருடைய மனதிலும் மின்னல் வெட்டுவது போன்ற விவரிக்க முடியாத ஓர் உணர்வு தோன்றியது. அவர்மீது எனக்குமிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது.

## கிளின்ரனின் பாலியல் தாகம்

அதன்பிறகு நாங்கள் இருவரும் ஒன்றாக பல இடங்களில் காரில் சுற்றி திரிந்தோம். பல நாட்களில் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டு இருந்திருக்கிறோம்.

ஒரு சமயம் ஹொட்டல் அறை ஒன்றில் தங்கி இருந்தபோது, நானும் கிளின்ரனும் பாலியல் உறவு கொண்டோம். பாலியலில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. இதே போல் கிளின்ரனும் பாலியலுக்கு அடிமையானவர்.

நான் அர்கன்சாஸ் மாநிலத்தில் இருந்து டெக்சாசுக்கு சென்ற பிறகும் எங்கள் தொடர்புகள் நீடித்தன.

கிளின்ரனை செல்லமாக 'பில்லி' என்று தான் நான் அழைப்பேன்.

1988ம் ஆண்டு ஒரு முறை நானும் அவரும் பேசிக் கொண்டு இருந்தபோது, தான் பாலியலுக்கு மிகவும் அடிமையாகிவிட்டதாகவும், இதனால் பெரும்பிரச்சனை இருப்பதாகவும் கிளின்ரன் கண் கலங்க என்னிடம் கூறினார். உடனே நான், "குறுகிய கால இடைவெளிக்குள் மீண்டும் மீண்டும் பாலியல் உறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு உங்களுக்கு ஏற்படுகிறதா?" என்று கேட்டேன்.

அதற்கு அவர் "இதில் இருந்து நான் மீள முயற்சிக்கிறேன். ஆனால் எல்லா இடங்களிலும் பெண்கள் கிடைப்பதால் என்னால் தவிர்க்க முடியவில்லை" என்று மனந்திறந்து வெளிப்படையாக சொல்ல அவர் கூச்சப்படவில்லை. 1994க்கு பிறகு கிளின்ரனை நான் சந்திக்கவில்லை.

பாலியலுறவில் உணர்வுகளுக்கு அடிமையாகிவிட்ட கிளின்ரன் அதில் இருந்து மீள வேண்டும். இதற்காக அவர் அவசியம் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். மிக உயர்ந்த பதவியில் அவர் இருப்பதால் தனிப்பட்ட முறையில் சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம். அதுதான் அவருக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது" என்று பிரவுனிங் கிளின்ரன் மீது இரக்கப்படுகிறார்.

இப்படி கிளின்ரன் மீது பல பெண்கள் சுமத்தி இருக்கும் ஆபாசப் புகார்கள், அமெரிக்க வெள்ளை மாளிகையை மட்டுமல்ல, அமெரிக்கா முழுவதையுமே அதிர்ச்சியுற வைத்து இருக்கின்றன. இன்று அமெரிக்காவில் கிளின்ரன் காதல் விவகாரம் தவிர வேறு பிரச்சனையே இல்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

அமெரிக்க பத்திரிகைகளை எந்தப்பக்கம் திருப்பினாலும், கிளின்ரன் எந்த எந்த பெண்களுடன் எப்படி எப்படி தொடர்பு வைத்து இருந்தார் என்பது பற்றிய பேட்டிகளும், கட்டுரைகளும் தான் புற்றீசல் போல வந்து கொண்டே இருக்கின்றன.

கிளின்ரன் மீது புகார்கள் வந்த போதெல்லாம் அவரது மனைவி ஹிலாரி தான் கண்ணை இமை காப்பது போல கிளின்ரனை காத்து, வழக்குகளில் இருந்து மீட்டு இருக்கிறார். ஹிலாரி வக்கீலுக்கு படித்தவர். சட்ட நுணுக்கங்களை நன்கு கற்று உணர்ந்தவர். ஆகவே கணவர் கிளின்ரனுக்கு நெருக்கடி ஏற்பட்ட பேதெல்லாம் அவரை காப்பாற்ற ஹிலாரி தவறியதே இல்லை.

ஏற்கனவே, தனது கணவரை ஆபத்துகளில் இருந்து இரண்டு முறை மீட்டு வந்தது போல இப்போதும் கணவரை காப்பாற்றி விடலாம் என்று கிளின்ரனின் மனைவி ஹிலாரி கணக்குப் போடுகிறார்.

ஆனால் கிளின்ரன் மீது புகார்கள் நிரூபிக்கப்படுமா? இதன் மூலம் அவர் பதவியில் இருந்து தூக்கி வீசப்படுவாரா? புதிய ஜனாதிபதியாக தற்போதைய உதவி ஜனாதிபதி அல்கோர் பதவி ஏற்பாரா என்பவை விலை மதிக்க முடியாத வினாக்களாக நிற்கின்றன.

இந்த கேள்விகளுக்கான விடைகள் உடனே கிடைக்காமல் போகலாம். தீர்ப்புகள் கோர்ட்டின் நீண்ட படிக்கட்டுகளில் ஏறிவர காலதாமதம் ஆகலாம். ஆனால் அதற்குள் கிளின்ரனின் புகழ் மகுடம் சுக்குநூறாக சிதறிவிடும் அபாயம், அவரது தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக அவரை பயமுறுத்திக் கொண்டு இருக்கிறது.

கிளின்ரன் முற்றும் துறந்த முனிவர் அல்ல என்பது அமெரிக்காவில் ஐந்து வயது குழந்தைகளுக்குக்கூட அப்பட்டமாக தெரிந்த உண்மைதான்.

பொதுவாக அமெரிக்காவில் ஜனாதிபதி பதவிக்கு ஒருவர் போட்டியிடுகிறார் என்றால், அவரை எதிர்த்து நிற்கும் வேட்பாளர் முதலில் கையில் ஏந்தும் ஆயுதம் கடப்பாரையும், மண்வெட்டியும்தான். ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுபவர் இதற்கு முன்பு என்ன என்ன லீலைகளில் ஈடுபட்டார் என்பதை தோண்டிப்பார்ப்பது தான் அவரது எதிரியின் முதல் வேலையாக இருக்கும்.

பில் கிளின்ரன் சில ஆண்டுகளில் பருவ வயதில் இருக்கும் தனது ஒரே மகளுக்கு மாப்பிள்ளை தேட வேண்டியவர்.

ஆனால் படுக்கை அறையில் முறையற்ற உல்லாசத்துக்கு பெண்களை வேட்டையாடிய காரணங்களுக்காக அவர் மீதான குற்றச்சாட்டுகள் அவரது ஜனாதிபதி பதவிக்கு வேட்டு வைக்க வீட்டு வாசல் வரை வந்து எட்டிப் பார்த்து கொண்டு இருக்கின்றன.

கம்பீரமான வெள்ளை மாளிகை இன்று ஆபாசக் குற்றச்சாட்டுகளால் கறைபடிந்த கட்டடமாக காட்சி அளிக்கிறது.

ஆட்டிப் படைக்கும் அதிகாரங்களைக் கொண்ட அமெரிக்க ஜனாதிபதி இப்போது கூனிக்குறுகிப் போய் முகம் கறுத்து குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு இருக்கிறார்.

இந்தப் பரிதாப நிலைக்கு காரணம், அரசியல் சறுக்கல், உள்நாட்டு பொருளாதார வீழ்ச்சி போர் களத்தில் தோல்வி அல்லது இது போன்ற காரணங்களில் ஏதாவது ஒன்று என்றால்கூட ஏற்றுக்கொண்டு இருக்கலாம் ஆனால் சர்வவல்லமை படைத்த அமெரிக்க ஜனாதிபதியை சாட்சிக் கூண்டில் ஏற வைத்து இருப்பது அந்தரபுர ஆபாச குற்றச்சாட்டுகள் என்பதுதான் அதிர்ச்சி அடைய வைக்கிறது.

எதிரிகளின் இந்த வலையில் பில் கிளின்ரன் இப்போது வசமாக மாட்டிக் கொண்டு முழிபிதுங்க நிற்கிறார். இதில் இருந்து தப்பிக்க கிளின்ரன் ஓர் உபாயத்தை கையாண்டார்.

*(வருவாள்)*


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | ஏ.எஸ்.நிர்பானா பாபு<br>இல. 56, லவ்லேன், திருகோணமலை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பாப்பா முரசு சிறுகதை

# "என்னுடைய மோதிரம்"


ஒருமுறை முல்லாவுக்கு அழகிய மோதிரம் ஒன்று கிடைத்தது. அதன் அழகில் மயங்கிய முல்லா, அதை தானே எடுத்துக்கொள்ள நினைத்தார். ஆனால், முல்லா தங்கியிருந்த ஊரின் சட்டம் என்ன தெரியுமா?

யாராவது கீழே இருந்து, ஒரு பொருளை கண்டு எடுத்தால் அதை எடுத்து வந்து ஊர்ச்சந்தையில் நின்று கொண்டு மூன்று முறை சப்தமாகச் சொல்ல வேண்டும்.

யாரும் பொருளுக்கு உரிமைப் பாராட்ட வரவில்லை என்றால் தான் தானே எடுத்துக் கொள்ள வேண்டும்.

அப்படிச் செய்யாமல் இருப்பது சட்டப்படி குற்றம்.

எனவே முல்லாவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அப்படிச் சொன்ன பிறகு யாராவது மோதிரத்தை உரிமை பாராட்டினால், என்ன செய்வது? என்று நினைத்தார். அதற்காக ஒரு திட்டமும் போட்டார்.




மறுநாள் காலை யாரும் எழுந்திருப்பதற்கு முன்பாக விடியற்காலையில் சந்தைக்கு ஓடினார். சந்தையில் அப்போது யாருமே இல்லை.

"நான் ஒரு மோதிரத்தை கண்டெடுத்தேன்!" என்று இரண்டு முறை கூறினார். மூன்றாவது முறை சொல்வதற்காக வாயைத் திறந்தார். அதற்குள் சிலர் சந்தைக்குள் வந்தனர். திடுக்கிட்டார் முல்லா. 'அய்யோ! நாம் சென்ன விஷயம் இவர்கள் காதில் விழுந்திருக்குமோ. இவர்கள் மோதிரத்தைக் கேட்டால் என்ன செய்வது?' என்று யோசித்தார் முல்லா.


அப்போது அவர்கள் முல்லாவிடம் வந்து. "முல்லா! நீர் என்ன சொன்னீர் என்பது எங்கள் காதுகளில் விழவில்லை. திரும்பச் சொல்லும்!" என்றனர்.

'அப்பாடா...' என நிம்மதியடைந்த முல்லா, "நம் நாட்டுச் சட்டப்படி மூன்று முறைதான் சொல்ல வேண்டும். நான்காம் முறை சொல்வது சட்டப்படி குற்றம். இப்போது சொல்கிறேன் கேளுங்கள் "இந்த மோதிரம் என்னுடையது" என்றார் கூலாக.


அதைக் கேட்டதும், முல்லாவின் திருட்டுத்தனம் அவர்களுக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. இருந்தாலும் என்ன செய்வது? ஒன்றும் பேச முடியாமல் முல்லா செல்வதையே பார்த்துக் கொண்டு நின்றனர்.



இரைதேட, பொந்தை விட்டு வெளியே வந்த முயலார், மறுபடி பொந்துக்குள் செல்ல, மலைப்பாம்பு குறுக்கே கிடக்கிறது. மலைப்பாம்பிடம் மாட்டிக் கொள்ளாமல், பொந்துக்குப் போகும் வழியை முயலுக்குக் காட்டுங்கள் பார்ப்போம்.



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **24.02.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **383**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 380

பரிசுக்குரியவர்:
ஆர்.செந்தூர்வாணி,
திம்புல்ல த/வி, பத்தனை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| வா.கோகுலன், சைவப் பிரகாச மகளிர் கனிஷ்ட பாடசாலை, வவுனியா. | சி.தேவப்பிரியன், விபுலாநந்தா மத்திய கல்லூரி, காரைதீவு. |
| சு.சத்தியதர்ஷன், சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை. | ஏ.எ.ஃப்.அன்வர், அல் ஹிரா வீதி, கொட்டாரமுல்ல. |
| எம்.இளையராஜ், கொட்டகலை த.ம.வி, நுவரெலியா.. | எஸ்.ரோஷான் முஹுசீன், வாரன வீதி, திஹாரிய. |
| உ.சசிசுதாஜினி, புனித பிரான்சிஸ் ச.ம.வி, திருகோணமலை. | த.நிரஞ்சன், அரசடித் தீவு, கொக்கட்டிச்சோலை. |
| ஏ.சசிகலா, சரஸ்வதி மஹா வித்தியாலயம், புசல்லாவ. | ஜி.குகன், த.மகா வித்தியாலயம், இறக்குவானை. |

## உலகில் நடந்த முக்கிய போர்களும் அவை நடைபெற்ற ஆண்டுகளும்

1. நூற்றாண்டு போர்-(1338-1453)
2. இங்கிலாந்து போர்- 1588
3. ஸ்பானிஷ் போர்- (1702 மற்றும் 1713)
4. ஏழாண்டு போர் - (1756-1763)
5. அமெரிக்க சுதந்திர போர்- (1776-1783)
6. நைல்நதிப்போர்-1798,
7. வாட்டர் லூபோர்-1815,
8. முதல் இந்திய சுதந்திர போர்- 1857
9. சீனா-ஜப்பானியபோர்- (1894-1895)
10. முதல் உலகப் போர்- (1914-1918)
11. இரண்டாம் உலகப் போர் (1939-1945)
12. அராபிய-இஸ்ரேல் போர் 1967
13. இந்தோ பாகிஸ்தான் போர்- (1965-1966)

தொகுப்பு:- மு.சக்திலேந்திரன்-கொழும்பு-12.

## அறிவியல் துணுக்குகள்

★ கொலரா நோய்க்கிருமிகளை முதன் முதலில் கண்டறிந்தவர் ஜெர்மனைச் சேர்ந்த ராபர்ட் கோக்.

★ ஹோமியோபதி மருத்துவ முறையை அறிமுகப் படுத்தியவர் சாமுவேல் ஹானிமன்.

★ யூரேனசைக் கண்டுப்பிடித்தவர் வில்லியம் ஹெர்ஷல்.

★ விண்வெளிப்பயண விதிகளை வரையறுத்த முதல் விஞ்ஞானி சேர்.ஐசக்நியூட்டன்.

★ மையூற்றுப் பேனாவை கண்டுப்பிடித்தவர் அமெரிக்கரான எல்.இ.வோட்டர்மேன்.

★ மின்விளக்கை உருவாக்கியவர் தோமஸ் அல்வா எடிசன்.

★ ஜெட் என்ஜினை உருவாக்கியவர் இங்கிலாந்தைச் சேர்ந்த சேர்.பிராங்லிட்டில்.

★ தீக்குச்சியை உருவாக்கியவர் சுவீடனைச் சேர்ந்த கஸ்டன் பாங்க்.

★ அலுமினியம் அதிகமாக உற்பத்தியாகும் நாடு அமெரிக்கா.

தொகுப்பு:-ருக்ஷிலா, கொழும்பு-13.

## சின்னச் சின்ன செய்திகள்

01. உலகில் 26 நாடுகளுக்கு கடற்கரை இல்லை.
02. மனிதனுக்கு உணவுப் பொருளைத் தரும் ஒரே பூச்சி இனம்-தேனீ.
03. உலகில் 80 சதவீதம் ரோஜாக்கள் ஆசியாவிலே உற்பத்தி செய்யப்படுகின்றன.
04. நீர்யானைகளை அதிகளவில் ஏற்றுமதி செய்யும் ஐரோப்பிய நாடு ஹங்கேரி.
05. அமெரிக்காவில் 1 நிமிடத்திற்கு 12 கார்கள் தயாரிக்கப்படுகின்றன.

தொகுப்பு: என்.எம்.நிஸாம்-
தேசியபாடசாலை,
காத்தான்குடி-02.

## ஐந்தின் சிறப்பு

1. **ஐம்பெரும் காப்பியம்:-** சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி.
2. **ஐஞ்சிறுகாப்பியம்:-** உதயணன்கதை, நீலகேசி, சூளாமணி, நாககுமாரகாவியம், இயசோதர காவியம்.
3. **பஞ்சலோகம்:-** பொன்,வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.
4. **பஞ்ச இலக்கணம்:-** எழுத்து,சொல், பொருள், யாப்பு, அணி.
5. **பஞ்சபாண்டவர்:-** தர்மன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்.
6. **பஞ்சாங்கம்:-** திதி, வாரம், நாள், யோகம், கரணம்.
7. **ஐங்குரவர்:-** அரசன், ஆசிரியன், அன்னை, தந்தை, தமையன்.
8. **பஞ்சவர்ணம்:-** பச்சை, மஞ்சள், வெண்மை, கருமை, செம்மை.
9. **ஐம்படைத்தாலி:-** திருமாலின் சங்கு, சக்கரம், கதை, வாள், வில் என்னும் ஐந்து படைகளின் வடிவங்கள்.
10. **பஞ்ச சயனம்:-** இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண் பஞ்சு, மயிர், அன்னத்தூவி, ஆகிய ஐவகைப் படுக்கைகள்.
11. **ஐந்திணை:-** குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்.
12. **ஐம்புலன்கள்:-** மெய், வாய், கண், மூக்கு, செவி.
13. **ஐம்பூதம்:-** நீர், நெருப்பு, காற்று, நிலம், வானம்.

நுணாவிலூர் கா.விசயரத்தினம்-
(இலண்டன்)

## விடுகதைகளும் விடைகளும்

01. வெள்ளை அரிவாள் வீதியிலே கிடக்கு. அது என்ன?

02. புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதோ ஓர் ஆண்டு. அவன் யார்?

03. உயர உயர பறக்கும் குருவி. உலகைச் சுற்றும் குருவி. சிறகடிக்காத குருவி. அது யார்?

04. அச்சு இல்லாத சக்கரம். அழகு காட்டும் சக்கரம். அது என்ன?

05. என் தம்பி வித்துவான். செவியை முறுக்கினால் கத்துவான். அவன் யார்?

### விடைகள்

1. பிறைச் சந்திரன் 2. கலண்டர் 3. விமானம் 4. வளையல் 5. வானொலி

ஏ.எம்.நளீம்-வாழைச்சேனை-05.

## உலகில் புகழ்பெற்ற நூல்களும், அவற்றை இயற்றியோரும்

திருக்குறள்-திருவள்ளுவர்
சிலப்பதிகாரம்-இளங்கோ அடிகள்
கந்தபுராணம்-கச்சியப்பசிவாச்சாரியார்
திருவிளையாடல் புராணம்-
புலியூர் நம்பிபவனந்தி முனிவர்
சீராபுராணம்-உமருப்புலவர்
மகாபாரதம்-
வேதவியாசர் (வடமொழியில்)
கீதாஞ்சலி-இரவிந்திரநாத்தாகூர்
சகுந்தலம்-காளிதாசன்
பகவத்கீதை-வேதவியாசர்
இராமாயணம்-வால்மீகி
இயேசு காவியம்-
கவிஞர் கண்ணதாசன்
இலியட் ஒடிசி-ஹோமர்
அர்த்த சாத்திரம்-கௌடில்யன்
கின்னஸ் வேல்ட் ரெக்கோட்-
நாரிஸ்டேவர் ஆலயன் ரஸ்
சொபின்சன் குரூசோ-
டானியல் டிபோ
அரிச்சந்திர புராணம்-
வீரகாவிராயர்.

எஸ்.ஜுவைனிகரீம், அல்-அக்ஷா

மர்மத் தொடர்

# மேனகாவின் மர்மம்

12

கிரைம்சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

நவரத்னம் ரிஸீவரை வைத்தார். குணசேகர் வேகவேகமாய் மாடியேறி வந்தார். பிரமை பிடித்துப்போய் உட்கார்ந்து இருந்த நவரத்னத்துக்கு முன்பாய் வந்தார்.

"ஸார்...! மல்லிகை மன்னன் சொன்னதைக் கேட்டீங்களா..?"

"ம்... கேட்டேன்... தேவேந்திரன் கதையை யாரோ முடிச்சுட்டாங்கன்னு மல்லிகை மன்னன் சொன்னார். யார் அந்த தேவேந்திரன்...?"

"அன்னிக்கு அதிகாலையில் ஒரு கல்யாண மண்டபத்தில் கல்யாண மாப்பிள்ளை ஒருத்தர் கொலை செய்யப்பட்டதா போலீஸ் கண்ட்ரோல் ரூமிலிருந்து எனக்கு தகவல் கிடைச்சுது. அந்த கேஸை இன்ஸ்பெக்டர் பராந்தகன் இன் வெஸ்டிகேட் பண்ணிட்டிருக்கார். அவரை கன்சல்ட் பண்ணினால், இது சம்பந்தமாய் வேறு ஏதாவது தகவல் கிடைக்கலாம்."

"மல்லிகை மன்னன் இங்கே இப்போ வர்றதாக சொல்லியிருக்கார். அவர் வரட்டும். என்னோட ப்ரதர் ஜீவரத்னம் கொலை செய்யப்பட்டதுக்கான காரணம், கொலை செய்த நபர் யார்ங்கிற விபரமும் அவர்க்கு தெரிஞ்சு இருக்கலாம்..."

இருவரும் காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

★★★

இன்ஸ்பெக்டர் பராந்தகன் பதினைந்து நிமிஷம் கழித்து, மறுபடியும் பெங்களூரில் இருந்த பட்டேல் ஹாஸ்பிடலைத் தொடர்புகொண்டார். சீஃப் டாக்டரிடம் பேசினார்.

"டாக்டர்... அந்த மேனகாவைப் பற்றி என்கொயர் செய்து பார்த்தீர்களா..?"

டாக்டர் சொன்னார். "என்கொயரி செய்தேன். மேனகா என்கிற பெண்ணுக்கு எங்கள் ஹாஸ்பிடலில் நர்ஸ் வேலைக்குச்சேர அப்பாயின்ட் மெண்ட் ஆர்டர் அனுப்பியிருந்தோம். ஆனால், அந்தப் பெண் மேனகா வேலைக்கு வந்து சேரவில்லை. அப்படி சேராததற்கு காரணம் தெரிவித்து கடிதமும் எழுதவில்லை..."

பராந்தகன் திடுக்கிட்டார்.

"டாக்டர்! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? மேனகா உங்கள் ஹாஸ்பிடலில் வேலைக்கு வந்து சேரவில்லையா?"

"ஆமாம்..."

"தேங்க்யூ வெரிமச் ஃபார் யுவர் இன்ஃபர்மேஷன் டாக்டர்"

பராந்தகன் ரிஸீவரை வைத்து விட்டு நர்ஸ் ஆரோக்கியமேரியிடம் திரும்பினார்.

"சிஸ்டர்...! மேனகா பெங்களூருக்குப் போய் அந்த பட்டேல் ஹாஸ்பிடல்ல ஜாய்ன் பண்ணவே இல்லையாமே?"

"ஜாய்ன் பண்றதாதானே என்கிட்ட சொல்லிட்டு போனா! ஸார் நடக்கிற சம்பவங்களைப் பார்த்தா, மேனகாவுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்கலாமோன்னு என் மனசுக்குப்படுது. ஏன்னா அவ எங்கே இருந்தாலும் இத்தனை நாளா என்னை காண்டாக்ட் பண்ணாமே இருக்கமாட்டா. ஒரு லெட்டராவது போட்டிருப்பா..."

சில விநாடிகள் யோசனையாய் நெற்றியைத் தேய்த்த இன்ஸ்பெக்டர் பராந்தகன் நர்ஸ் ஆரோக்கியமேரியை ஏறிட்டார்.

"நீங்க இப்ப ஃப்ரீயா இருக்கீங்களா சிஸ்டர்?"

"ஃப்ரீதான்...."

"என்கூட ஜி.ஹெச்., வரைக்கும்வர முடியுமா?"

"எதுக்கு ஸார்....?"

"ஸ்பாட்ல ஆறுபேர் இறந்து போயிருக்காங்க. ஆனா அந்த இடத்துல ஆக்ஸிடெண்டில் சிக்கி உயிரிழக்காமல் கொலை செய்யப்பட்ட ஒரு பெண்ணோட பாடி கிடைச்சுது.

பாடியோட முகம் குரூரமா சிதைக்கப்பட்டு இருந்ததால, அடையாளம் தெரியாமே போயிருச்சு... என்னுடைய நண்பர் இன்ஸ்பெக்டர் குணசேகர்தான் அந்தப் பெண் சம்பந்தமா இன்வெஸ்டிகேட் பண்ணிட்டிருக்கார். நீங்க சொல்ற மேனகா ஒருவேளை அந்தப் பெண்ணாகக்கூட இருக்கலாம். வந்து பார்த்து ஐடென்டிஃபை பண்ணினா பரவாயில்லை."

ஆரோக்கியமேரி கண்ணீரோடு தலையாட்டினாள். "வர்றேன் ஸார்...."

புறப்பட்டார்கள்.

ஜீப் ஜீ.ஹெச்சை நோக்கி பயணப்பட ஆரோக்கியமேரிக்கு பக்கத்தில் உட்கார்ந்திருந்த ப்ரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதா கேட்டாள்.

"ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்ல கொலை செய்யப்பட்டுகிடந்த பெண்ணோட முகம் அடையாளம் தெரியாதபடிக்கு சிதைக்கப்பட்டிருக்கு.... நீங்க எப்படி அடையாளம் கண்டுபிடிப்பீங்க சிஸ்டர்?"

ஆரோக்கியமேரி சொன்னாள்... குரல் தழுதழுக்க. "மேனகா நல்ல நிறம். நல்ல உயரம். உடம்பைப் பார்த்தாலே தெரிஞ்சுடும்... அதுவுமில்லாமே மேனகாவுக்கு இடது கணுக்காலில் நீளமா தீக்காயத் தழும்பு ஒண்ணு இருக்கும்."

"மேனகாவோட ஃபேமிலியைப் பத்தி நீங்க சொல்லவேயில்லையே...?"

"அவ ஓர் ஆர்பன். சின்ன வயசிலேயே ஃபேரண்ட்ஸை இழந்துட்டா. 'பெதேன்'ங்கிற ஒரு ஆர்பனேஜில்தான் அவ வளர்ந்தா... படிச்சா.. அதுக்கப்புறம் நர்ஸ் கோர்ஸ்ல சேர்ந்தா,"

"வேலை செய்யும் போது மேனகா எங்கே தங்கியிருந்தா...?"

"நர்ஸ் ஹாஸ்டலில்..."

பேசிக்கொண்டே வந்ததில் ஜி.ஹெச். வந்திருக்க ஜீப் உள்ளே போய் நின்றது.

பராந்தகன், நிவேதிதா, ஆரோக்கியமேரி மூன்று பேரும் இறங்கி ஹாஸ்பிடலின் மார்ச்சுவரி இருந்த திசையை நோக்கி நடந்தார்கள். வராந்தாவில் பாதி தூரத்தை கடந்து இருந்தபோது, எஸ்.ஐ. ஒருவர் எதிர்ப்பட்டு பராந்தகனுக்கு சல்யூட் வைத்தார்.

"என்ன... பாலு...?"

"ஸார்...! தப்பிச்சுபோன அந்தக் கைதி கனகு செங்கல்பட்டு போலீஸ்ல மாட்டிகிட்டான். இப்பதான் ஒரு அஞ்சு நிமிஷத்துக்கு முன் தகவல் வந்தது ஸார்,"

"குட்... ஒரு பிரச்சனை முடிஞ்சுது. இனிமே அவனைப் பத்தி கவலைபட்டுகிட்டு இருக்க வேண்டாம்."

"ஸார்...! நான் செங்கல்பட்டுக்கு கிளம்பி போகட்டுமா.....?"

"நீங்க கிளம்புங்க! நான் இதை டீல் பண்ணிக்கிறேன். மார்ச்சுவரி ரூம் பூட்டியிருக்கா... திறந்திருக்கா."

"திறந்திருக்கு ஸார்...."

பராந்தகன் நடந்தார். அவனைத் தொடர்ந்து நடந்த ஆரோக்கியமேரிக்கு கால்கள் பின்னியது.

'கடவுளே மார்ச்சுவரியில இருக்கிற பாடி மேனகாவாய் இருக்கக் கூடாது...'

மானசீகமாய் சிலுவைக்குறி போட்டுக் கொண்டே நடந்தாள்.

மார்ச்சுவரி வந்தது.

காவலுக்கு இருந்த அட்டெண்டர் கதவைத் திறந்துவிட்டு தள்ளி நிற்க, மூவரும் உள்ளே போனார்கள்.

தகர மேசைகளின் மேல் வரிசையாக உடல்கள் காற்றில் 'பார்மல் டி.ஹைட்' நெடி.

பராந்தகன் ஒரு உடம்புக்கு முன்பாய் போய் நின்று அதன் மேல் பரவியிருந்த வெள்ளை விரிப்பை விலக்கினார்.

போஸ்ட்மார்ட்டம் செய்து முடிக்கப்பட்ட அந்தப் பெண்ணின் உடம்பு நீளமாய் நிறம்கன்றிப் போய்த் தெரிந்தது.

நிவேதிதா ஆரோக்கியமேரியைத் தொட்டாள். "பார்த்து சொல்லுங்க சிஸ்டர். இது மேனகாவா...?"

ஆரோக்கியமேரி தயக்கமாய் நடந்து போய் உடலை வெகு கிட்டத்தில் பார்த்துவிட்டு இடது கணுக்காலைக் கவனித்தாள்.

இருதயம் உச்சத்துடிப்புக்கு போனது.

கணுக்காலில் அந்த தீக்காயத் தழும்பு இருந்தது. ஆரோக்கியமேரி இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டு ஒரே அழுகைக்கு தயாராகி முதுகு குலுங்கினாள்.

"ஸ... ஸார்.... ஷி... ஈஸ்... மேனகா...."

பராந்தகன் வியப்போடு நிவேதிதாவின் பக்கம் திரும்பினார்.

"இது மேனகா என்றால், நேற்று ராத்திரி கல்யாண மண்டபத்துக்கு ஃபோன் செய்து தேவேந்திரனோடு பேசிய மேனகா யார்...?"

"ஸார்... மறுப்டியும் கேஸ் சிக்கலாயிடுச்சு. ஆரம்பத்திலிருந்து மறுபடியும் இதைக் கிளறிப் பார்க்கணும்."

நிவேதிதா சொல்லிக்கொண்டிருக்கும் போதே, மார்ச்சுவரின் வாசலில் அந்த பூட்ஸ் சத்தம் கேட்டது.

பராந்தகன் திரும்பிப் பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் குணசேகர் உள்ளே வேகமாய் நுழைந்துகொண்டு இருந்தார்.

குணசேகர் உள்ளே நுழைய, பராந்தகன் ஆர்வமாய் அவரை நோக்கிப் போனார்.

"வாங்க! மிஸ்டர் குணசேகர். நானே உங்களை பார்க்க வரலாம்ன்னு நினைச்சிட்டிருந்தேன்."

குணசேகர் புன்னகைத்தார். "உங்களைப் பார்த்து பேசறதுக்காக ஸ்டேஷனுக்குப் போனேன். நீங்க இங்கே வந்து இருக்கிறதாக ஸ்டேஷன் ரைட்டர் சொன்னார். இங்கேயே உங்களைப் பார்த்துப் பேசிடலாம்னு வந்தேன்..."

"என்ன விஷயம் சொல்லுங்க..."

"மிஸ்டர் பராந்தகன்! கல்யாண மண்டபத்துல நடந்த ஒரு கொலையை நீங்கதானே இன்வெஸ்டிகேட் பண்ணிட்டு வர்றீங்க...?"

"ஆமாம்..."

"அந்தக் கொலையைப் பத்தி கொஞ்சம் சொல்ல முடியுமா...?"

"கொலை செய்யப்பட்ட நபரோட பெயர் தேவேந்திரன். கல்யாண மாப்பிள்ளை."

"அந்தக் கொலைக்கான காரணம் ஏதாவது தெரிஞ்சுதா..?"

"உறுதியா தெரியலை. பட் கொலை செய்யப்பட்ட தேவேந்திரன் மேனகாங்கிற ஒரு பொண்ணை லவ் பண்ணியிருக்கான். மேனகா ஒரு நர்ஸ். அந்தப் பெண்ணை கல்யாணம் பண்ணிக்கிறதா சொல்லி ஏமாத்தியிருக்கான் தேவேந்திரன். தேவேந்திரனோட இந்தக் கொலைக்கு மேனகா காரணமாக இருந்து இருக்கலாமோ என்று நினைத்த நேரத்தில், மேனகாவே கொலை செய்யப்பட்டிருக்கிறாள் என்பது ஒரு அதிர்ச்சியான செய்தி. மேனகாவின் முகம் சிதைக்கப்பட்டு அடையாளம் தெரியாத நிலையில் இருந்தாலும், அது மேனகாதான்னு அடையாளம் காட்டியிருக்காங்க, நர்ஸ் ஆரோக்கியமேரி. மேனகாவும் ஆரோக்கியமேரியும் தொழில் ரீதியா திக்கஸ்ட் ஃப்ரண்ட்ஸ். பாடியின் இடது கணுக்காலில் இருந்த ஒரு தீக்காயத் தழும்பை வெச்சு அது மேனகாதான்னு உறுதிபடுத்தியிருக்காங்க..."

"நோ டவுட் மிஸ்டர் பராந்தகன்! ஆக்ஸிடேண்ட் ஸ்பாட்டில் இருந்த அந்த டெட்பாடி மேனகாதான். அவளை கொலை பண்ணின நபர் இப்போ உயிரோடு இல்லேன்னாலும் அந்த கொலைக்கு ஒரு வகையில் காரணகர்த்தாவான நபரை கைது பண்ணிட்டோம்..."

பராந்தகன் வியப்பாய் நிமிர்ந்தார். ப்ரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதாவும் வேக வேகமாய் பக்கத்தில் வந்தாள்.

"யாரு ஸார்... அது...?"

"அவர் பேரு மல்லிகை மன்னன். ஒரு மேடைப் பேச்சாளர், எம்.எல்.ஏ. நவரத்னத்தோட ப்ரதர் ஜீவரத்னத்தோட ஃப்ரண்ட். ஜீவரத்னம் இப்போ உயிரோடு இல்லை. தேவேந்திரன் மாதிரியே அவரும் கொலை செய்யப்பட்டுவிட்டார்."

*மர்மம் தொடரும்...*



# பாடல் பிறந்த கதை

**நான்** பாடலாசிரியராக அறிமுகம் ஆனதே எம்.ஜி. ஆர். படங்களில்தான். குறைவான எண்ணிக்கையில்தான் எழுதியிருந்தேன். அந்தப் பாடல்கள் பிரபலமானாலும் அதன்பின் வாய்ப்புகள் ஏதும் இல்லாமல் இடைவெளி அதிகம் ஆகி விட்டது.



கவிஞர். நா. காமராசன்

இடையில் 'தென்னகம் 'மக்கள் குரல்' போன்ற பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருந்தேன். "எம்.ஜி. ஆர். படங்களில் பாடல் எழுதியும் இப்படி இடைவெளி உள்ளதே" என்று எஸ்.டி சோமசுந்தரம் நடத்தும் 'சமநிலை பத்திரிகையில் 'நிலாக் காலத்து புலம்பல்கள்' என்ற தலைப்பில் என்னுடைய வேதனையை வெளிப்படுத்தி கட்டுரை எழுதியிருந்தேன்.

அதில் எம்.ஜி.ஆர். படங்களில் குழுப்பாடல்களையெல்லாம் வாலிதான் எழுதுகிறார். எனக்கு வாய்ப்பே அளிப்பதில்லை என்றும் எழுதினேன்.

இதைப் படித்ததும் எம்.ஜி.ஆரின் மனது மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது. உடனே என் வீட்டிற்கு கார் அனுப்பி என்னை கூட்டி வரச் சொன்னார். நானும் போனேன்.

"இதற்கு என்ன அர்த்தம்?" என்று கட்டுரையைக் காட்டினார்.

"ஆமாம் எல்லாவற்றிற்கும் நீங்கள்தான் காரணம். ஒரிரு பாடல்களுக்கு மட்டும் வாய்ப்புக் கொடுத்துவிட்டு அப்படியே விட்டுவிட்டால் நான் என்ன செய்வது?" என்றேன்.

எம்.ஜி. ஆர். யோசித்தார்.

அப்போது 'பல்லாண்டு வாழ்க' படத்திற்காக டிஸ்கஷன் நடந்து கொண்டிருந்தது. அதன் தயாரிப்பாளர் இதயம் பேசுகிறது மணியன் அவர்கள்.

"உடனே மணியனைப் போய்ப் பார். படத்தின் கதையைக்கேட்டு உனக்கு எந்த ஸீன் பிடிக்கிறதோ அந்த ஸீனுக்கு பாடல் எழுது!" என்று என்னை அனுப்பீ வைத்தார்.

அந்தப் படத்தில் அனைத்து பாடல்களையும் புலமைப்பித்தன் தான் எழுதிக் கொண்டிருந்தார். இந்த விஷயத்தை மணியன் எம்.ஜி. ஆரிடம் சொல்ல அவர்,

"காமராசனுக்கு எப்படியாவது ஒரு பாடலாவது கொடுங்கள். அப்படி அவருக்கு பாடல் எழுத வாய்ப்பு கொடுக்காவிட்டால் நான் சூட்டிங்கிற்கே வர மாட்டேன்" என்று சொல்லிவிட்டார். மணியனும் சமாதானமாகி என்னை வரச்சொல்லி பாடலின் சிச்சுவேஷனை சொன்னார்.

"எவ்வளவு இலக்கியமாக வேண்டுமானாலும் எழுதுங்கள். ஆனால் எக்ஸ்பிரசன் எளிமையாக இருக்க வேண்டும்" என்றார்.

பிறகு இசையமைப்பாளர் மகா தேவன் பல்லவிக்கு மட்டும் மெட்டுப் போட்டுக் கொடுத்துவிட்டு "இதற்கு எழுதுங்க" என்றார்.

உடனே அந்த இடத்திலேயே நாலுவரி பல்லவி எழுதினேன்.

நான் எந்தப் பாடலை எழுதினாலும் சோசலிச கருத்துக்களை அதில்சேர்த்து எழுதினால்தான் எனக்கு திருப்தியாக இருக்கும். அந்த முறையில் பல்லவியிலேயே ஒரு கருத்தை வரியாக எழுதினேன்.

பல்லவி அனைவருக்கும் பிடித்துப்போய் விட்டது.



பிறகு சரணத்திற்கு மெட்டுப் போட்டு "இதற்கும் எழுதுங்க" என்று மகாதேவன் சொல்லி விட்டார்.

நான் ஒரு வாரம் டைம் எடுத்து ஒவ்வொரு வரியையும் இலக்கியமாகவும், எளிமையாகவும் எழுதினேன். இசையமைப்பாளர் மகாதேவனும் ஒரு மாத காலமாக அந்தப் பாடலை மெருகுபடுத்தினார்.

அப்போது எம்.ஜி. ஆர்.மைசூர் பகுதியில் வேறு ஒரு படத்திற்கான சூட்டிங்கில் இருந்தார்.

எம்.ஜி. ஆரைப் பொறுத்தவரை அவர் நடிக்கும் படங்களுக்கான பாடல்களின் ஒவ்வொரு வரியையும் அவரிடம் காட்டி ஓ.கே. செய்தாக வேண்டும். மணியன், அவர் இல்லாமலேயே பாடல் பதிவிற்கு ஏற்பாடு செய்து விட்டார்.

முதலில் ஆபீஸிலேயே ஜேசுதாஸையும் டி.கே.கலாவையும் வரவழைத்து அந்தப் பாடலை பாடச்சொல்ல, பின்னர் விஜயா கார்டனில் பாடல் பதிவானது.

எம்.ஜி. ஆர்.வந்து இந்த விஷயத்தை கேள்விப்பட்டதும் மிகவும் கோபமடைந்தார். "நான் இல்லாமல் எப்படி பாடலை பதிவு செய்தீர்கள்?" என்று சத்தம் போட்டார். அவரை சமாதானப்படுத்தி பாடலை போட்டுக் காட்டினார்கள்.

பாடலைக்கேட்ட அவர் மிகவும் சந்தோஷமானார். பாடல் டபுள் ஓ.கே. என்றார்.

அது மட்டுமல்ல "கடந்த பத்தாண்டு கால திரையுலக வரலாற்றில் என்னைக் கவர்ந்த பாடல் இது" என்று பம்பாய் பத்திரிகைகளுக்கு பேட்டியும் அளித்தார்.

'இந்தப்பாடல் என்னையே கன்னத்தில் அறைந்து திரும்பிப் பார்க்க வைத்து விட்டது. இந்த காமராசன் சிறந்த கவிஞராக வருவார்" என்று கவிஞர் கண்ணதாசனே மனந்திறந்து பாராட்டினார்.

*நான் அன்று எழுதிய அந்தப் பாடல்:*
*போய் வா நதி அலையே*
*இவள் பூச்சுடும் நாள் பார்த்து வா*
*வா வா நதி அலையே*
*ஏழை பூமிக்கு நீர் கொண்டு வா!*

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 42

# எஸ்.டி.எஸ். கண்ட பாரதி

'ஃபிட்டேனா பார்' என்று தன்னுடைய ஃபோர்ட் செண்ட் ஜோர்ஜ் கஸட்டிலும் 1928 செப்டம்பர் 11ம் திகதி ஒரு தடை உத்தரவைப் பிரசுரித்தது-

இதிலும் ஓர் ஆச்சரியம்! பாரதியார் அமரரானது 1921 செப்டம்பர் 11ம் திகதி.

அவருடைய பாடல்களைத் தடை விதித்து சென்னை அரசாங்கம் கஸட் உத்தரவு வெளியிட்டது 1928 செப்டம்பர் 11ம் திகதி. சரியாக ஏழு ஆண்டுப் பூர்த்தி அன்று.

கஸட்டில் பிரசுரமான இந்த பறிமுதல் உத்தரவை வைத்துக் கொண்டு சென்னைப் பொலிஸார் சார்பில் புலன் விசாரணைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனாப் சப்தூர் ஹுசைன் ஒருவிண்ணப்பத்தை நீதிமன்றத்திலே தாக்கல் செய்து பாரதி நூல்கள் இருக்கும் இடங்களிலெல்லாம் புகுந்து அவற்றைப் பறிமுதல் செய்ய கோர்ட் ஆணை பெற்றார்.

இதன்பிரகாரம், சென்னை திருவல்லிக்கேணி இந்திப் பிரசார சபை, தலையாரித் தெருவில் இருந்த பாரதி ஆஸ்ரமம், புத்தக வெளியீட்டாளர்களான ஒ.என். தண்டபாணி கம்பனி ஆகிய இடங்களில் பொலிஸார் புகுந்து அங்கிருந்த பாரதி பாடல்களை எல்லாம் பறிமுதல் செய்தார்கள்.

இதிலும் ஒரு வேடிக்கை. ஏழு ஆண்டுகளாக பாடசாலைப் பாடப் புத்தகங்களில் பாரதி பாடல்கள் இடம்பெற்று வந்தன. அவை பொலிஸார் கண்ணில் படவே இல்லை!

பாரதி பாடல் பறிமுதல் சம்பவம் பாரதி பக்தரான திரு.எஸ்.சத்தியமூர்த்திக்கு ஆவேசத்தை உண்டு பண்ணிவிட்டது.

அப்போது அவர் சென்னை சட்ட சபையில் ஓர் உறுப்பினராக இருந்தார்.

சபை ஒத்திவைப்பு நேரத்தில், அதி முக்கிய பொது விஷயம் என்ற தலைப்பில் திரு.சத்தியமூர்த்தி பாரதி பாடல் பறிமுதலை எதிர்த்து ஒரு பிரேரணையைத் தாக்கல் செய்து, மிகுந்த உணர்ச்சிபூர்வமான ஓர் ஆங்கிலச் சொற்பொழிவை ஆற்றினார்.

அவருடைய அன்றையப் பேச்சு பாரதியாரின் திறமைக்கும். உயர்வுக்கும், கவிதா விலாசத்துக்கும், தேச பக்திக்கும், தமிழ் மொழி ஆர்வத்துக்கும் வழங்கப்பட்ட ஆணித்தரமான ஓர் ஆக்கத்தாக இன்று வரை விளக்குகிறது.

திரு.சத்தியமூர்த்தி அன்று அழகான ஆங்கிலத்தில் பேசிய அந்த அற்புதமான பேச்சின் சில பகுதிகளை இங்கு தமிழில் தருகிறேன்:

"தலைவர் அவர்களே, சுப்பிரமணிய பாரதியார் ஒரு பெரும்தேச பக்தர். அவருடைய நாவிலே சரஸ்வதி தேவி நர்த்தனமாடினாள்.

அவர் ஒரு சுதந்திர நாட்டில் பிறந்திருந்தால், ஏன், இந்தியா தவிர்ந்த வேறொரு நாட்டில் அவர் அவதரித்திருந்தால், அவர் ஆஸ்தானக் கவிஞர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருப்பார்.

மக்கள் உணர்ச்சியை, மக்கள் மனநிலையை அறியக்கூடிய ஓர் அரசாங்கம் இங்கு இருந்திருந்தால், அவருக்குப் பலவிதமான பட்டங்களையும், பதவிகளையும், விருதுகளையும் வழங்கியிருக்கும்.

நமது நாடு ஓர் அடிமை நாடாக விருப்பதால் பாரதியாரை உரிய முறைப்படி நம்மால் கௌரவிக்க முடியவில்லை. அதனால் அவர் ஒரு தேசப் பிரஷ்டனைப் போல ஃபிரஞ்சு அரசாங்கத்தின் தயவில்



புதுச்சேரியில் வாழ வேண்டியவரானார்.

நமது அரசாங்கத்தின் கீழ் அவர் எதுவித ஆதரவையும் பெறமுடியாது போன காரணத்தால் அவர் வறுமையில் வாடி, உடைந்த இருதயத்தோடு இறக்கலானார்.

அவருக்கு முன்பு வாழ்ந்த தியாகிகளும், தேச பக்தர்களும் எந்த வழியில் சென்றார்களோ அந்தப் பரிதாபகரமான வழியில் தான் பாரதியாரும் செல்ல வேண்டி நேரிட்டது. இது பெரும் துர்ப்பாக்கியமாகும்.

சுப்ரமணிய பாரதியார் ஒரு தேச பக்தனாகவே வாழ்ந்தார். தேச பக்தனாகவே மறைந்தார்.

தலைவர் அவர்களே, பாரதியார் மறைந்து விட்டார் என்பது உண்மைதான். ஆனால் தமிழ் மக்கள் அவரை மறக்க மாட்டார்கள். அவருடைய பாடல் நூல்களை அரசாங்கப் பொலிஸார் பறிமுதல் செய்வதன் மூலம் அவரை மறைக்கவோ, மக்கள் மறக்கவோ செய்துவிட முடியாது.

அவருடைய பாடல்களின் அச்சுப் பிரதிகள் இல்லாவிட்டால் என்ன? நமது புனித வேதங்கள், புத்தகங்கள் மூலம் பாது காக்கப்படவில்லை. நமது மூதாதையர்களான இந்துக்கள் வேத சுலோகங்களை மனனஞ் செய்து, பரம்பரை பரம்பரையாகக் கையளித்து வந்திருக்கிறார்கள்.

அப்படியே பாரதி பாடல்களையும் நமது மக்களும் மாணவர்களும் மனனஞ் செய்தே பாதுகாப்பார்கள். மெக்காலே பிரபு, மில்டன் என்ற ஆங்கிலக் கவிஞர் எழுதிய 'சுவர்க்க நீக்கம்' என்ற காவியத்தின் ஒவ்வொரு வரியையும் தம் மனதில் பதித்து வைத்திருந்தார் என்று சொல்வார்கள்.

நான் இந்தச் சபையிலே சூளுரைத்துச் சொல்கிறேன், தலைவர் அவர்களே, பாரதியின் புத்தகங்கள் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டால், நாங்கள் ஓர் இயக்கத்தையே ஆரம்பிப்போம். பாரதியின் பாடல்களை ஆயிரம் ஆயிரம் மக்கள் ஏக காலத்தில் வாய் மொழியாகக் கேட்டுச் செவி வழியாக மனனஞ் செய்யும் இயக்கமாக அது அமையும்.

வேத மந்திரங்களை அத்தியனம் செய்வது போல பாரதி பாடல்களையும் அத்தியயனம் செய்து பரப்புவோம்.

எல்லாத் தமிழர்களும் அழிந்து, ஒரே ஒரு தமிழன் மட்டும் உயிர் வாழ்ந்தாலும் அவனுடைய மனதிலே பாரதியின் தேச பக்திப் பாடல்கள் அழியாமல் இடம் பெற்றிருக்கும்.

அரசாங்கம் பாரதியின் புத்தகங்களைப் பறிமுதல் செய்து அழிப்பதற்கு 'பொலிஸார்' என்ற இயந்திரப் பொறியினைப் பாவிக்கலாம். ஆனால் மனிதனுடைய ஞாபகத்தில் உள்ளவற்றைப் பறிமுதல் செய்து அழிப்பதற்கு அரசாங்கம் எந்தவிதமான ஒரு விஞ்ஞானப் பொறியையும் இது வரை கண்டு பிடிக்கவில்லை.

ஆகையால், பாரதி நூல்களைப் பறிமுதல் செய்வது போன்ற வீண் வேலைகளில் அரசாங்கம் ஈடுபடக் கூடாது என்று நான் இச்சபையிலே பிரேரிக்கிறேன்"

மேற்கண்ட சாரப்பட தீரர் திரு.எஸ்.சத்தியமூர்த்தி முழங்கித் தீர்த்தார்.

சட்ட சபையில் அன்று 103 உறுப்



பினர்கள் சமுகமாயிருந்தனர். திரு.சத்தியமூர்த்தியின் உருக்கமான பேச்சைக் கேட்டு அரசாங்கச் சார்புடையவர்களில் கூடப் பெரும்பாலோர் ம்னந் திரும்பிவிட்டனர்.

பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. 76 உறுப்பினர் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தனர். 12 பேர் எதிர்த்தனர். 15 பேர் நடுநிலைமை வகித்தனர்.

இந்த நிலையில், பாரதி பாடலை அரசாங்கம் பறிமுதல் செய்வது என்ற விலங்கு தவிடுபொடியாக நொறுக்கப்பட்டது!

இந்த நிகழ்ச்சிதான் 1932ம் ஆண்டில் பாரதியார் படத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திரைநீக்கம் செய்துவிட்டு சென்னை திரும்பிய தீரர் சத்தியமூர்த்தியின் மனதில் Flash-back படமாக ஓடிக் கொண்டிருந்த நிகழ்ச்சியாகும்.

சென்னை சேர்ந்த சத்திமூர்த்தி புதிய உத்வேகத்தோடு செயல்பட்டார். நண்பர்களிடம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கண்ட பாரதி எழுச்சியைப் பற்றி எடுத்துரைத்தார். பல புதிய பாரதி மன்றங்களை அமைத்தார். மேடைகளில் பாரதி பாடல்களைத் தமது அரசியல் சொற்பொழிவுகளினூடே அபரிமிதமாகப் பொழிந்து தள்ளினார்.

மூன்று ஆண்டுகள் உருண்டு ஓடின. 1935ம் ஆண்டில் சென்னைச் சட்டசபையில் தேர்தல் வந்தது. திரு.சத்தியமூர்த்தி காங்கிரஸ் கட்சியின் சார்பில் சென்னை மாநகரத் தொகுதியில் நின்றார்.

அப்போது அவரை ஆதரித்துப் பிரசாரம் செய்வதில் ஒரு பத்திரிகை ஆசிரியர் முன்னணி வகித்தார். அவர்தான் திரு.ரா. கிருஷ்ணமூர்த்தி என்ற பேராசிரியர் கல்கி ஆவார்.

அவர் அப்போது 'ஆனந்த விகடன்' வார இதழின் ஆசிரியராக விளங்கினார்.

திரு.சத்தியமூர்த்தியோடு திரு.கிருஷ்ணமூர்த்தி நெருங்கிப் பழகினார். திரு.பெரியசாமிதூரன் என்ற அறிஞரும் சேர்ந்து கொண்டார். பின்னவர் இருவருக்கும் முன்னவரான சத்தியமூர்த்தி 'தீட்சை' வைத்து 'பாரதியார்' என்ற மந்திரத்தைக் காதில் ஊதிவிட்டார்.

அப்போதிருந்தே ஆசிரியர் கல்கிக்கு பாரதியார் பித்துப்பிடிக்க ஆரம்பித்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழக ஸ்தாபகர் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் மீதும் ஒரு பற்று ஆரம்பித்தது.

பாரதி உயிர் வாழந்த காலத்துக்குப் பின்னர், ஒரளவு மறக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் கிடந்த பாரதியின் பெரும் புகழைத் தமிழ் நாட்டிலே, தமிழ் மக்களுடைய கவனத்துக்குக் கொண்டு வந்தவர்களில் இருவர் விசேஷமாகக் குறிப்பிடப் பட வேண்டியவர்களாகிறார்கள்.

அவர்களில் ஒருவர், 'கல்கி' என்று அழைக்கப்பட்ட பேராசிரியர் ரா.கிருஷ்ணமூர்த்தி.

மற்றவர் தமிழ்க் கலைக்களஞ்சியம் என்ற நூற்றொகுதியின் பதிப்பாசிரியராக விளங்கிய திரு.பெரியசாமி தூரன்.

இந்த இருவருக்கும் முன்னோடிகளாக விளங்கியவர்களின் பெயர்களையும் இங்கு பொறிப்பது அவசியம். அந்தப் பெயர்கள் பின்வருமாறு:- பரலி சு.நெல்லையப்பர், வ.வே.சு.ஐயர், தீரர் எஸ்.சத்தியமூர்த்தி, சுவாமி விபுலாநந்தர், ராஜா சேர் அண்ணாமலை செட்டியார், வ.ராமசாமி (வ.ரா), டி.கே.சிதம்பரநாத முதலியார், சேர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார், சக்கரவர்த்தி ராஜகோபாலச் சாரியார், சேர்.சி.பி.ராமசாமி ஐயர், சேர்.அழகப்ப செட்டியார்.

மேலே தரப்பட்டிருக்கும் பட்டியலில் காணப்படும் தி.வ.ராமசாமி ஐயர் (வ.ரா) என்பவர் ஒரு மிகப் பெரிய எழுத்தாளர். முற்போக்காளர் பகுத்தறிவாளர். பத்திரிகையாளர். பல நூல்களின் ஆசிரியர்.

இவர், சிறிது காலம் இலங்கையில் வாழ்ந்தவர். 'வீரகேசரி' பத்திரிகையின் ஆசிரியராக விளங்கியவர்.

'வீரகேசரி'-திரு.சுப்பிரமணியம் செட்டியார் என்பவரால் கொழும்பு செட்டியார் தெருவில் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை. அதன் முதல் ஆசிரியராக பெயருக்கு இருந்தவர் திரு.சுப்பிரமணியம் செட்டியார் தான். ஆனால், ஒரு வங்கியில் வேலை பார்த்துக் கொண்டே பத்திரிகையின் பகுதி நேர நிஜ ஆசிரியராகப் பணிபுரிந்தவர் திரு.எச்.நெல்லையா என்பவராவர்.

அந்தக் காலத்தில் திரு.எச்.நெல்லையா ஒரு மிகச் சிறந்த எழுத்தாளராகவும் புகழ்பெற்ற மேடைப் பேச்சாளராகவும் விளங்கியவர். அவர் அரசியல் பேசினால் மக்கள் 'ஆ' வென்ற வாயுடன் உட்கார்ந்து அனுபவித்துக் கேட்பார்கள். அடிக்கடி 'அவுட்'டுச் சிரிப்புச் சிரித்து மகிழ்வார்கள். அப்படிப்பட்ட பேச்சாளர் அவர்.

இந்த திரு.நெல்லையா நோய்வாய்ப்பட்டு இந்தியா சென்றபின், வீரகேசரிக்கு புதிய ஆசிரியராகச் சென்னையிலிருந்து அழைத்து வரப்பட்டவர் திரு.வ.ரா.

வ.ரா.வைத் தொடர்ந்து, வந்தவர்தான் இன்றையத் தலைமுறையின் ஞாபகத்தில் இருந்து, சமீபத்தில் மறைந்தவரான திரு.கே.பி.ஹரன்.

திரு.வ.ரா. வீரகேசரியின் ஆசிரியராக விருந்த பொழுது சுவாமி விபுலாநந்தருக்கும் வ.ராவுக்கும் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் கொழும்பு மேட்டுத் தெருவில் உள்ள விவேகாநந்த சபையில் ஓர் சிறிய அறையிலே சில மாதங்கள் சுவாமி விபுலாநந்தர் தங்கியிருந்தார். அங்கு வ.ரா. அடிக்கடி சென்று சுவாமி விபுலாநந்தருடன் நீண்ட நேரம் உரையாடி வந்தார்.

கொழும்பில், அந்தக் காலத்தில், சிறந்த தமிழ் நூல்களைக் கொண்ட-பழந்தமிழ் நூல்களைக் கொண்ட-ஒரே ஒரு நல்ல வாசிகசாலை விவேகாநந்த சபையில் தான் இருந்தது. அந்த வாசிகசாலையில் நூல்களைப் பார்ப்பதற்கும் படிப்பதற்குமாகத் தான் வ.ரா. அங்கு செல்வது வழக்கம். வீரகேசரியின் முக்கிய தலையங்கங்களையும் இலக்கியக் கட்டுரைகளையும் வ.ரா. அங்குதான் வைத்து எழுதினார் என்பது பலருக்குத் தெரிந்திராத ஒரு விஷயமாகும்.

இப்படியாக வ.ரா.அங்கு வந்த சமயங்களில் சுவாமி விபுலாநந்தருடன் இலக்கிய சர்ச்சைகளில் ஈடுபட்டார். முக்கியமாக இருவரும் பாரதியைப் பற்றியும், பாரதி பாடல்களின் சிறப்புகள் பற்றியும், பாரதியின் முற்போக்கு சிந்தனைகள், செயல்கள் பற்றியும் கருத்துப் பரிமாறல் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

நான் 'வீரகேசரி' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த காலத்தில் வ.ரா. காலத்து பழைய பத்திரிகைக் கட்டுரைகளைப் புரட்டிப் பார்த்திருக்கிறேன். அப்போது சுவாமி விபுலாநந்தர் கட்டுரைகளில் சில வீரகேசரியில் அச்சாகியிருப்பது தெரிய வந்தது. வ.ரா.பாரதி பற்றி எழுதிய கட்டுரைகளும் இடம்பெற்றிருந்தன.

வ.ரா. வீரகேசரியை விட்டு விலகி இந்தியா சென்று அங்கும் பல பத்திரிகைகளில் ஆசிரியராகவும், எழுத்தாளராகவும் பணியாற்றினார்.

அந்த நேரத்தில அவர் வெளியிட்ட ஒரு நூல் தமிழ் நாட்டிலே பெரும் பரபரப்பை உண்டு பண்ணியது. மகாகவி பாரதியார் என்பது அந்த நூலின் பெயர். அதிலே வ.ரா. பாரதியாரை 'உலக மகாகவி பாரதியார்' என்று உயர்வாகச் சித்தரித்திருக்கிறார்.

**(இன்னும் வரும்)**

தொகுத்தளிப்பவர்

## கிரா.பத்மநாதன்

---

## 5.சொல்லும் செயலும்

**சொ**ல்றது ஒண்ணு செய்யறது ஒண்ணுங்கறது இந்தக் காலத்துலே ரொம்ப சகஜமாப் போச்சு!

வாக்குறுதி குடுக்கறதுக்கு நிறைய பேர் இருக்காங்க. அதை நிறைவேத்தறதுக்குத் தான் ஆள் இருக்காது!

குடுத்த கடனை திருப்பிக் கேக்கப் போனா நான் எப்ப வாங்கினேங்கறான்! இவன் எங்கே கொடுத்த வாக்கை காப்பாத்தப் போறான்.

பெரியவங்கள்லாம் இப்படி இல்லே... சொன்னா சொன்னபடி நடந்துக்குவாங்க! அவங்கள்லாம் வாக்கு கொடுத்தா கொடுத்தது தான்! என்ன வந்தாலும் அவங்க அதை மீற மாட்டாங்க!

கர்னாடக சங்கீத உலகத்துலே தியாகராஜரைப்பத்தி தெரியாதவங்க இருக்க முடியாது!

அபூர்வ ராகங்கள்லே பல மேன்மையான கிருதிகளைப்படைச்சவர் அவர்.

ஆனந்த பைரவி ராகத்துலே அவரு மூணே மூணு பாட்டுத்தான் எழுதியிருக்கார்.

அதுக்கு மேலே அவரு ஏன் எழுதலே?

இதுக்குக் கார்ணம் என்னவா இருக்கும்ங்கறது கர்னாடக சங்கீதம் படிச்ச பல பேருக்கு ஏற்படற ஒரு சந்தேகம். இதுக்குப் பதிலை தேட முயற்சி பண்ணினப்போ ஒரு தகவல் கிடைச்சுது.

தகவல்ன்னு ஒண்ணு கிடைச்சதுக்கப்புறம் அதை உங்க காதுலே போட்டு வைக்கலேன்னா எப்படி?

அந்த காலத்துலேயெல்லாம் சங்கீதம் பாடறவங்க ஒவ்வொரு ராகத்துலே 'ஸ்பெஷலிஸ்ட்'டா இருப்பாங்க!

அந்த ராகமே அவங்களுக்கு அடைமொழியாவும் ஆயிடறது உண்டு. இந்த வகையிலேதான்...

'அடாணா' அப்பய்யான்னு ஒருத்தர்

# வரம் ஒரு வார்த்தை!

இருந்தார்.

'தோடி' சீதாராமய்யான்னு ஒருத்தர் இருந்தார்.

அப்போ... திரிபுவனம் சுவாமிநாத அய்யர்ன்னு ஒருத்தர் இருந்தார்.

இவர் பார்த்தார். எந்த ராகத்தை எடுத்துக்கலாம்ன்னு யோசிச்சார்.



'ஆனந்த பைரவி'யை எடுத்துக்கிட்டார். அதுலே ரொம்பவும் பெரிய 'ஸ்பெஷலிஸ்ட்'டா ஆயிட்டார். பல பேரோட கவனம் அவரு பக்கம் திரும்ப ஆரம்பிச்சுது.

ஒரு சமயம் ஒரு 'பொம்மலாட்ட கோஷ்டி, திருவையாறுக்கு வந்தது!

அதோட, திரிபுவனம் சுவாமிநாத அய்யரும் வந்தார். பல நாள் அங்கே தங்கியிருந்து 'பொம்மலாட்டம்' நடத்தினாங்க! அதுலே இவர் 'ஆனந்த பைரவி'யை தினமும் தவறாமே பாடுவார்.

தியாகராஜரோட சீடர்கள் சில பேர் பொம்மலாட்டம் பார்க்க வந்திருக்காங்க! அவங்க இவரோட ராக ஆலாபனையிலே ரொம்பவும் லயிச்சிப் போயிட்டாங்க! அதுமட்டும்இல்லே! திரும்பிப்போனதும் தியாகராஜர்கிட்டே இந்த சேதியைச் சொல்லியிருக்காங்க!

தியாகராஜர் உடனடியா இதுக்கு பதில் எதுவும் சொல்லலே!.

ஒருநாள் தியாகராஜரே அங்கே நேரிலே போயிட்டார். ஒரு இடத்துலே மறைவா நின்னு கவனிச்சார்.

திரிபுவனம் சுவாமிநாதய்யர் ஆனந்த பைரவி ராக ஆலாபனையை ஆரம்பிச்சார். உண்மையிலேயே அதை மெய்மறந்து கேட்டார் தியாகராஜர்.

ஆட்டம் முடிஞ்சவுடனே கூட்டத்துலே முண்டியடிச்சி மேடைகிட்டே போனார்-தன்னுடைய பாராட்டைத் தெரிவிக்கிறதுக்காக!

சங்கீத மகானே அங்கே வந்திருக்கிறதை பார்த்ததும் சபையிலே ஒரு சலசலப்பு.

உடனே சுவாமிநாதய்யர் மேடையிலே இருந்து கீழே குதிச்சார். தியாகராஜர் கால்லே விழுந்தார்.

"சுவாமி! தாங்கள் சபையிலே இருக்கிறப்போ நான் ராக ஆலாபனை செய்ய முனைஞ்சது அதிகப்பிரசங்கித்தனம். என்னை மன்னிச்சிடுங்க"ன்னார்.

தியாகராஜரோ "உங்களுடைய கச்சேரியைக் கேட்டுத் திருப்தியும் ஆனந்தமும் கொண்டேன்"னார்.

கூட்டத்துலே ஒரே கைத்தட்டல். ஆரவாரம். இந்த சமயத்துலே சுவாமி

## தென்கச்சி – கோ. சுவாமிநாதன்

நாதய்யர் தயக்கத்தோட ஆரம்பிச்சார்.

"புலவர் பெருமானே! உங்களிடம் ஒரு வரம்வேண்டுகிறேன்!"னாரு.

"நீங்கள் கேட்பதற்கு முன்பாகவே கொடுக்கிறேன்" னார் தியாகராஜர்.

அவர் சொன்னார்:

"சுவாமி! நான் வேண்டுற வரம் இது தான். இன்று முதல் ஆனந்த பைரவி ராகத்துலே பாடல் இயற்றுவதை தாங்கள் நிறுத்திப் புடணும். வருங்காலத்துலே தியாகராஜர் ஆனந்த பைரவி ராகத்துலே ஏன் அதிகமா பாட்டு எழுதலேங்கற கேள்வி எழறப்போ... இப்போ நடந்ததை சொல்லுவாங்க! அதனாலே என்னோட பேரும் தலைமுறை தலைமுறையா மக்கள் மனசுலே நிலைச்சிருக்கும்!"ன்னார்.

மக்கள் வாயடைச்சி நின்னாங்க.

ஆனா தியாகராஜர் ஒண்ணும் அதிர்ச்சியடையலே!

முகத்துலே புன்னகையோட அவரு வேண்டுகோளை ஏத்துக்கிட்டதா தலையை அசைச்சார்.

அன்னைக்கு கொடுத்த வாக்கை அப்படியே நிறைவேத்தினார் தியாகராஜர்.

அதுக்கப்புறம் 'ஆனந்த பைர'வியிலே அவரு பாட்டு எழுதவே இல்லே!

அது மட்டுமில்லே!

ஏற்கனவே எழுதியிருந்த மூணு பாடலையும் அதுக்குப்பிறகு புதுசா வந்த சீடர்களுக்கும் கற்பிக்கவே இல்லே!

'ராம ராம நீ வாரமு' என்கிற திவ்ய ராமக்கீர்த்தனை.

'க்ஷீர சாகர விஹார' என்கிற உற்சவ சம்பிரதாய கீர்த்தனை,

"நீகே தெலியக" என்கிற கிருதி.

இது மூணும் இந்த சம்பவம் நடக்கறதுக்கு முந்தியே கத்துக்கிட்டு கையாண்டு வந்த சீடர்கள் வழியாத்தான் இன்னைக்கு வழக்கத்துலே இருந்துக்கிட்டிருக்கு!

இதை எதுக்குச் சொல்றேன்னா...

பெரியவங்கள்லாம் எப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள்லே கூட வாக்கு கொடுத்திருக்காங்க...

அதை எவ்வளவு உறுதியா காப்பாத்தியிருக்காங்க என்கிறதை தெரிஞ்சிக்கணும்ங்கறதுக்காகத்தான்.

**(வார்த்தைகள் தொடரும்)**

# காதலி

## ஆரையம்பதி-பூ.இதயரெத்தினம்



என் சிந்தனைகள் யாவும் நண்பன் பிரபாவை பற்றியதாய் தான் இருந்தன. என்னையே வெறிக்கப்பார்த்துக் கொண்டிருந்தவனை "மச்சான் பிரபா உன்னப்பற்றி எதுவும் புரிஞ்சி கொள்ள முடியல்லடா. இவ்வளவு நாளும் பிடிவாதமா இருந்த நீ இப்பிடி ஒரு நொடியில மாறிப் போவாய் எண்டு நான் நினைக்கல்ல மச்சான்!" என் வார்த்தைகளுக்கு மௌனத்தை மட்டும் பதிலாய் தந்து மெதுவாய் சிரித்தான்.

"மச்சான் அவளோட வீட்டுக்காரங்க உன்ன எப்படியெல்லாம் அவமதிச்சியிருக்காங்கடா. நீ அவள உயிரா காதலிச்சே, அவளும் உன்னைய விரும்பினாள். அவளோட அண்ணன்மாரும் உன்னை விரும்புறமாதிரி நடிச்சிட்டு அப்புறமா குணம் மாறி கௌரவம் பார்த்து உன்ன புடிக்கல்ல எண்டாங்க. அவள பார்க்கப்போன உன்ன எப்படியெல்லாம் தரக்குறைவா பேசி அனுப்பினாங்க. அப்போவெல்லாம் உன்பக்கம் நின்னு எதுவுமே பேசாம மௌனமாக அண்ணாமார் சொன்னது சரிதான் என்கிறதுபோல இருந்தாளே. உன்னோட காயா. இப்போ ஒரு வருஷமாச்சி-நீ அவள பார்க்கல்ல. அவள் உன்ன பார்க்கவரல்ல. ஆனா நேற்று அவளுக்கு சுகமில்ல; பெரியாஸ்பத்திரியில இருக்கிறாள், ஏதோ ஒப்பரேசனாம் எண்டு அறிஞ்ச உடனேயே அவசரமா இண்டைக்கே ஓடிப்போய் பாத்திட்டு வந்திருக்கியே. இதுக்கெல்லாம் அர்த்தம் என்ன மச்சான்? இன்னும் நீ அவள மறக்கல்லயா? அவளத்தான் கல்யாணம் கட்டுவன் எண்டு காலமெல்லாம் காத்திருக்கப்போறியா?" நான் கேட்க நீண்ட பெருமூச்சொன்றை விட்டவாறே,

"மச்சான் இதுதான்டா அவள் மேல நான் வெச்சிருந்த உண்மையான அன்பு-காதல். இதையெல்லாம் புரிஞ்சிக்கிற சக்தி அவளுக்குமில்ல, அவள்ட வீட்டாருக்குமில்லடா. எது எப்பிடி இருந்தாலும், அவள கல்யாணம் கட்டுற நோக்கம் என்னிட்ட இல்ல மச்சான்!" அவன் முடிக்கவில்லை,

"நீ என்னடா சொல்ற?" நான் குழம்பிப் போய் கேட்க,

"மச்சான் நான் ஆஸ்பத்திரிக்கு அவளப் பார்க்கப்போன உடனேயே எல்லாரும் நினைக்கிறீங்க அவளோட வீட்டார் செய்த அவமரியாதையெல்லாம் மறந்து போயிட்டன் அப்பிடின்னு. எல்லாத்தையும் மறந்திட்டு அவளத்தான் கட்டிக்கப்போறேன் எண்டு நினைக்கிறாங்க. அது தப்பு மச்சான். உண்மையில நான் காயாவை பார்க்கப் போனது, அவளோட துயரத்துல பங்கு கொள்ள நினைச்ச என்னோட தூய்மையான அன்புதான் காரணம். ஆனா அவங்களால என் உள்ளத்தில பட்ட காயம் என்னைக்குமே ஆறாது மச்சான். கம்பால அடிச்ச காயம் ஆறிடும். சொல்லால அடிச்சது எப்பவுமே மறக்கமாட்டன் மச்சான். நான் அவள கல்யாணம் கட்டிக்கிட்டாக்கூட அதையெல்லாம் மறக்கிற சக்தி எனக்கு இல்லடா. காயா அந்தக் குடும்பத்துக்கு ஒரேயொரு பெண் என்கிறதால அவள் சகோதர பாசத்துக்குள்ள கட்டுப்பட்டுக்கிடக்கிறாள். அதில இருந்து அவளால எப்பவுமே விடுபட முடியாதுடா. அவள் என்னய கட்டிக்கிட்டாக்கூட அவளோட சகோதரங்களப் பிரிஞ்சி காலமெல்லாம் கவலப்படுவாள். அத என்னால தாங்கிக்க முடியாது. அதனால எண்டைக்கோ ஒரு நாள் அவள் மனம் மாறி அண்ணன்மாருக்கு பிடிச்ச மாப்பிள்ளய கட்டிக்கிட்டு சந்தோசமா வாழணும். அப்போதான் நான் சந்தோசப்படுவேன்!" அவன் சொல்லிக்கொண்டே போக..


'கைவிட்டுப்போன பின்னும்கூட அவள் உள்ளம் கலையால் காயப்பட்டுப் போகக்கூடாது' என்று நினைக்கும் இவன் உள்ளத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் போன அவர்கள் அபாக்கியசாலிகள்தான் என மனதுக்குள் எண்ணியபடி, "மச்சான் எல்லாத்தையும் விட்டுப்போட்டு எழும்புடா. நாம கன்னியம்மன் கோயிலடி வரைக்கும் போவம்!" என்றபடி எழுந்து நடக்கிறேன் நான்.

# காதலர்கள் கவனத்திற்கு...!

## ராகுலன்-வெள்ளவத்தை

"எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்..."
-பகவத் கீதாசாரம்.

வாசிப்பதை இடைநிறுத்தி யோசித்தேன். வாழ்க்கையில் எத்தனையோ சம்பவங்கள் நிகழ்கின்றன. சிலவற்றை நாம் சந்தோஷமாக எடுத்துக்கொள்கிறோம். வேறு சில எமக்கு கவலையை, மனவருத்தத்தைத் தருகின்றன. இவையெல்லாம் எப்படி நன்றானவையாக இருக்கமுடியும்? அப்படியானால் கீதாசாரம் முரண்படுகிறதே. குழப்பத்தில் எழுந்தேன். வீடு கடற்கரையோரமாக இருந்தபடியால், சூரிய அஸ்தமனம் தெளிவாகத் தெரிந்தது. அதை இரசித்தபடி வீதியில் இறங்கினேன். என் நண்பன் ரமேஷ் வந்துகொண்டிருந்தான்.



"டேய் ரமா, எப்படிடா?"

ஆர்வமாக அவன் தோளில் கைபோட்டேன். அவனிடம் ஒருவித வித்தியாசம் தெரிந்தது. வழமையான உற்சாகம் இருக்கவில்லை.

"ம்!" என்றுவிட்டு மௌனமாக நடந்தான்.

"டேய், நாளையன்றைக்கு காதலர்தினம்டா!" என்றேன் உற்சாகமாக. சென்ற காதலர்தினத்திற்கு ரமேஷ் சொன்னது இன்னமும் ஞாபகமிருக்கிறது.

"மச்சான் அடுத்த லவர்ஸ்டேக்கு அவளுடைய சம்மதத்தை கேக்கத்தான்போறன்!" அத்தோடு அவன் நின்றுவிடவில்லை. அதே நாளில் ரோஜாச் செடியொன்றையும் நட்டுவைத்தான். ஆர்வம் மேலிட மீண்டும் அவன் தோளை உலுப்பினேன்.

"என்னடா ரமா, இந்த முறை ரோஸ் கொடுக்கிறது தானே!" உள்ளங்காலை அலைகள் முத்தமிட்டு ஓடிக்கொண்டிருந்தன. தோளில் இருந்த என் கையை விலக்கிவிட்டு அலைகளையே வெறித்தான் ரமேஷ். ஒரு சில நிமிடம் எங்களுக்குள் மௌனம். அலைகளின் ஆர்ப்பரிப்பு அப்படியே கேட்டது. 'இவனுக்கென்ன நடந்தது..?' இந்தக்கேள்விக்கு விடைதேடி, முடியாமல் சுயநினைவிற்கு மீண்டபோதும் ரமேஷ் அப்படியே நின்றிருந்தான்.

"ரமா, என்னடா கடலுக்குள்ள எதையோ தொலைச்ச மாதிரி நிக்கிறாய்?" சொல்லிச் சிரித்தேன்.

"ஓமடா, எல்லாத்தையும் தொலைச்சிட்டன்; அவள தொலைச்சிட்டன்; என்ற வாழ்க்கையை தொலைச்சிட்டன். எதிர்பார்ப்பு எல்லாமே தொலைஞ்சுபோச்சு!" அடுக்கிக் கொண்டே போனான். எனக்கு வார்த்தைகள் புரிந்தும் விவரம் புரியாமலும் விழித்தேன்.

"காம் டௌன் ரமா!" அவனை அமைதிப்படுத்த முயன்றேன்.

"ரமா என்ன நடந்தது, நிதானமாச் சொல்லு?"

"இனி என்னத்தைச் சொல்ல இருக்குடா, அவள் என்னவிட்டு, இந்த நாட்டைவிட்டு போயிட்டாள்!" சொல்லி முடிப்பதற்குள் அவன் கண்ணிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் உடைந்து கன்னத்தில் பரவியது. சின்னக் குழந்தைபோல என் கையில் முகம் புதைத்து அழ ஆரம்பித்துவிட்டான்.

"ரமா, என்னடா இது... என்னடா?" அவள்போன விவரம் அறிய முன்பாக அவனை அமைதிப்படுத்திட வேண்டும்போல் உணர்ந்தேன். அவனுடைய காதல் புத்தகத்தை ஒவ்வொரு பக்கமாக, ஒவ்வொரு சொல்லாக எனக்கு ஒப்பித்திருக்கிறான். ஒரு நண்பன் என்ற ரீதியில் அந்தக் காதல் கதையில் எனக்கும் பங்கு இருக்கிறது. இன்னமும் எத்தனையோ அவனுக்காகச் செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தேன். அதற்குள் இப்படியாகிவிட்டதே, ஒரு பக்கம் அழுதுவிக்கிக்கொண்டிருந்த ரமேஷ். மறுபக்கம் 'ச்சீ அதுக்குள்ள இப்படியாப் போச்சே!' என்று என்மனம்.

"ரமா, அப்படியெல்லாம் இருக்காதடா, அவள் போயிருக்கமாட்டாள்!" இதுமட்டும் உண்மையாயிருந்தால் எவ்வளவு நல்லது. அங்கலாய்ப்பில் அவன் முகம் பார்த்தேன். அவனுடைய கண்கள் இறுகிச் சிவந்திருந்தன. பரவாயில்லை அவன் அழட்டும்; மனதில் ஒருபோதும் கவலைகளை முடக்கிவைக்கக்கூடாது. அழுகையிலாவது அதைக் கரைத்துவிடவேண்டும். நான் மௌனமானேன். 'எது நன்றாக நடந்தது, எது நன்றாக நடக்கிறது...?'

அன்று பெப்ரவரி 14; காதலர் தினம். பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி எல்லாவற்றிலும் காதல்! காதல்! காதல்! ரமேஷும் நானும்கூட அன்று அதே கடற்கரையில் சந்தித்தபோது, அங்கும் ஏராளம் காதல் ஜோடிகள். அவர்களுக்குள் ரமேஷும் அவளும் கைகோர்த்து வருவது போல் ஒரு பிரமை வந்துபோக, அவனைப்பார்த்தேன். அவனிடம் தெளிவு தெரிந்தது. புறமுதுகுக்காட்டி நின்றவன் திரும்பிச் சொன்னான்.

"மச்சான், ஆண்டவன் ஒரு போதும் ஒருத்தரையும் கைவிடமாட்டாண்டா... அவள வெளியில அனுப்பினது கூட நல்லதொரு வாழ்க்கையை அவளுக்கு அமைச்சுக் கொடுக்கிறதுக்காக இருக்கலாம்.... ஆனா மச்சான் அவள் நல்லா இருக்கவேணும். சந்தோஷமாக இருக்க வேணும்!" ரமேஷின் குரல் கொஞ்சம் தளதளத்தது.

'ரமா நீ தோத்தாலும் உன்ர அன்பு தோக்கலை.' மனதுள் நினைத்துக் கொண்டு ரமேஷைப்பார்த்தேன். அவன் முதுகுப்புறம் காட்டி திரும்பி நின்றவாறு சொன்னான். "இந்த ரமேஷ் சாதிக்கவேண்டியது நிறையவே இருக்கு, ஒரு எடுத்துக்காட்டா ஒருபொதுச் சொத்தா இவனுடைய பங்களிப்பு எவ்வளவோ இருக்கு. அப்படிப்பட்டவன் தனியொருத்திக்குச் சொந்தமாகிடக் கூடாது, கடவுள் இப்படிக்கூட கணக்குப் போட்டிருக்கலாம்!" அவன் குரலில் உறுதி தொனித்தது. அப்படியே நடக்க ஆரம்பித்தவனை பார்த்துக்கொண்டே நின்றேன். அவனுடைய பிம்பம் சிறுத்துக்கொண்டிருக்க, அவன் முன்பாக பெரியதொரு பாதை தெரிந்துகொண்டிருந்தது.

ஆம்,
எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.

# காதலர் தினம்

## இணுவில் உத்திரன்

**1995** பெப்ரவரி 14ம் திகதி இடப்பட்ட அந்தக் கடிதம் இவ்வளவு புயலை ஏற்படுத்தும் என்பதை சத்தியமூர்த்தியால் நினைத்தும் பார்த்திருக்க முடியவில்லைத்தான். 'நிலானி' அப்படியொன்றும் பெரிய அழகி என்று சொல்லமுடியாது. அவளிடம் என்ன இருக்கிறது? புரியவில்லை. ஆனாலும் அவள் அவனைப் பாதித்து இருந்தாள். அவன் சந்திக்காத பெண்களே இல்லை. ஆனாலும் எவரிடமுமே இல்லாத ஏதோ ஒன்று அவளிடம் இருந்தது. இதற்கு பெயர்தான் காதல் என்பதா? இந்த காதலுக்கு கண் இல்லை என்பது உண்மைதான். அல்லது அவனிலும் பார்க்க



எத்தனையோ. வயதில் குறைந்த நிலானி மேல்தான் காதல் வந்து தொலைக்க வேண்டுமா? கல்லூரியில் படித்துக் கொண்டு இருந்த அவளுக்கு பாடம் சம்பந்தமாக பல சந்தேகங்களையும் தீர்த்து வைப்பான். அவளோடு சதுரங்கம் விளையாடுவான். சண்டைப் பிடிப்பான். சமாதானம் ஆவான். அவளுடைய ஒவ்வொரு சின்னச் சின்ன அசைவுகளும் கூட அவனுடைய இதய நாடியை மீட்டுக்கொண்டு தான் இருந்தது. அவளோடு பழகுவதை கொஞ்சம் கொஞ்சமாக தவிர்த்தும் பார்த்தான். முடியவில்லை. முடியவில்லை. மீண்டும் சொல்கின்றேன் இந்தக் காதலுக்கு கண் இல்லை என்பது சரிதான். ஏனென்றால் அது எந்தவிதமான பக்கவிளைவுகளைப் பற்றியும் சிந்திப்பதே இல்லை. இந்த காதல் உலகத்திற்கு என்று சில பிரத்தியேகமான சட்டதிட்டங்கள் உண்டு. காதல் என்பது சாதி, மதம், நிறம், குணம், வயது எதைப் பற்றியும் சிந்திப்பதே இல்லை. ஏதோ ஒரு பைத்தியக் காரத்தனம். அது எந்த நேரத்திலும் ஏற்படலாம். யார் மீதும் ஏற்படலாம். அதற்கு எந்த காரணங்களும் தேவை இல்லை. யதார்த்தங்கள் கூட சிலவேளைகளில் இந்த காதல் உலகத்து சட்டத்திற்கும் சரத்துக்களுக்கும் சாதகமாக கைகளை உயர்த்தி விடுவதுண்டு. அத்தோடு இங்கு மட்டும்தான் தோல்விகளில் கூட சுகம் கிடைக்கும்.

அவனுக்குள் பெரிய ஒரு போராட்டமே நடந்து கொண்டு இருந்தது. இந்த காதலை அவளிடம் வெளிப்படுத்தத்தான் வேண்டுமா?...... இறுதியில் காதல் வென்றது. அதன் விளைவுதான் இந்தக்கடிதம்.

"சத்தியமூர்த்தி!" முதல்தடவையாக அப்படி பெயரைச்சொல்லி அழைத்தாள். "உங்களோடை இப்படி நெருக்கமாய் நட்பாய் பழகினதாலை அதை காதல் எண்டு நினைக்கிறதா? உடனை கடிதம் வேறை எழுதுவீங்களாக்கும்."

"இதிலை என்ன தவறு இருக்கு நிலானி? நல்ல நட்புத்தான் காதலாக முடியும். ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சு கொள்ளுறதிற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் தானே?"

"எப்பிடி? இதை எப்பிடி? என்னாலை ஒத்துக்கொள்ள முடியும். நீங்கள் செய்தது தவறுதான். உங்களுக்கு இப்படி ஒரு நினைப்பு வந்து இருக்கவே கூடாது. உங்களுக்கும் எனக்கும் இடையிலை எவ்வளவு இடைவெளிகள் இருக்கு தெரியுமா?"

"நிலானி காதல் மனம் சம்பந்தப்பட்டவிசயம். மனம் உண்டானால் இடம் உண்டு. உங்களுக்கு என்னைப்பிடிச்சு இருந்தால், இந்த இடைவெளிகள் எல்லாம் இரண்டாம்பட்சம்தான். ஏன் நீங்கள் கூட எனக்கு அப்பிளிக்கேஷன் போட்டு இருக்கக் கூடும்."

"நோ. நோ. நோ. ஒருவேளை எனக்கு உங்களை பிடிக்கேல்லை எண்டு சொன்னால் உடனேயே உங்களை எனக்கு பிடிக்கவைக்கிற முயற்சியிலை இறங்கிவிடுவீங்கள். நோ. நீங்கள் இப்படி நினைச்சே இருக்கக் கூடாது தான்." சத்தியமூர்த்திக்கு கொஞ்சம் கோபமாக இருந்தது.

"இந்தா பாரும் நிலானி! காதல் யாரையும் கேட்டுக் கொண்டு வாறதில்லை. எங்களை அறியாமலே எங்களுக்கை எழுகிற ஒரு எமோசன் தான் காதல். எத்தனையாம் திகதி? எத்தனை மணிக்கு? எந்த நிமிசத்திலை அது வந்தது என்று யாராவது சொல்ல முடியுமா?

. உங்களுக்கு அதை ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ உரிமை இருக்கு. ஆனால்! என்னுடைய எண்ணம் தவறு எண்டு சொல்ல எந்தவித உரிமையும் கிடையாது. நான் யாரையும் விரும்பலாம். அது என்னுடைய உரிமை. அது ஒருதலைப்பட்சமாய் இருந்தால்கூட இந்த காதலர் தினத்திலை உந்த உரிமைகளை முதலிலை வரை அறுத்துக் கொள்ளுவம்."

சிறிது நேர அமைதியின் பின் அவள் பேசினாள். "இதைகேளும் சத்தியமூர்த்தி. இதற்குப் பிறகும் நாங்கள் நல்ல நண்பர்களாக பழக முடியாது. எண்டு நினைக்கிறேன்.

நான் எந்த விதத்திலையும் உங்களை பாதித்துவிடக் கூடாது. ஒருவேளை நீங்கள் உங்கடை எண்ணம் தவறு எண்டு உணர்ந்துகொண்டால், வேண்டுமானால் அதற்கு பிறகு பார்த்துக் கொள்ளலாம். அதுவரைக்கும் உங்களோடை பேச, பழக எதுக்குமே நான் தயாரில்லை ஐயாம் சொறி." அத்தோடு அவள் விடை பெற்றுக் கொண்டாள்.

நிராகரிக்கப்படும் காதலைவிட நெஞ்சில் ஒளித்து வைக்கப்படும் காதல் சிறந்தது என்பார்கள். காரணம். காலம்பூராகவும் காதல் காயம்படாமலே இருக்குமே! 'எங்கே நான் அவசரப் பட்டுவிட்டோனோ?' என்று அவன் நினைத்தாலும், தன்னுடைய விருப்பம் தவறு என்று எந்த காலத்திலும் ஒத்துக்கொள்ள அவன் தயாரில்லைத்தான்.

**14ம்** திகதி பெப்ரவரி 2001ம் ஆண்டு 'அன்புள்ள கஜன்' என்று ஆரம்பித்து 'இப்படிக்கு உங்கள் நிழலிற்காக ஏங்கும் நிலானி.' என்று முடித்து இருந்த அந்தக் கடிதத்தை அவனிடம் கொடுத்தாள் நிலானி. நிலானி அந்த பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு மாணவி. கஜன் அப்போதுதான் முதலாம் ஆண்டு மாணவனாக சேர்ந்து இருந்தான். அவனுடைய துடிப்பும், இளமையும், பேச்சாற்றலும் அவளுக்குப் பிடித்திருந்தன. "கஜன்!" என்றுபெயரை உச்சரிக்கும் போதே ஓராயிரம் பூக்கள் சொரிந்தன. அவனுடன் பழகத்தொடங்கிய அந்த கொஞ்சக் காலத்திலேயே அவளுடைய மனம் அவனை தேட ஆரம்பித்து இருந்தது. இன்னும் இரண்டு வருடங்களுக்காவது தனது கல்வி நீடிக்கக் கூடாதா? என்று அவள் மனம் ஏங்கும். சில நிர்ப்பந்தங்களும் கூட நியாயப்படுத்தப்படுகின்றன. அவளுடைய நிர்ப்பந்தம், எதற்கும் துணிந்த மனம். அந்தக் கடிதத்தை வரைந்து இருந்தது. அந்தக் கடிதத்தை படித்து விட்டு நிமிர்ந்தான் கஜன்.

"நிலானி நீங்களா இப்படி?" அந்த முதல் கேள்வியிலேயே அவள் குறுகிப் போனாள்.

"நீங்கள் என்னிலும் பார்க்க அறிவிலையும் வயதிலையும் மூத்த நீங்கள் இப்படிச் செய்யலாமா? ஒரு ஆணும் பெண்ணும் நட்பாய் பழகவே கூடாதா? உடனே அதை காதலாக்கி கொள்கிறதா?" அவளுக்கு அழுகைவந்தது. அவனை நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை. காதலுக்கு கண் இல்லை என்றுதான் சொல்வார்கள். ஆனால் இதயமே இல்லைபோல் இருக்கிறது. யார் யாரோவை எல்லாம் சிக்கவைத்து யார் யாரோவை எல்லாம் அழவைத்து, உலகத்திலேயே மிகவும் கொடிய நோய் இந்த காதல்தான். அன்றைய காதலர் தினத்திலே ஒரே ஓர் உண்மையை மட்டும் தெரிந்துகொண்டாள். நிலானி. அதாவது 'காதல் என்பது எப்போதும் ஏற்படலாம். யார் மீதும் ஏற்படலாம் அதற்கு எந்தவித காரணங்களோ நியாயங்களோ தேவை இல்லை, என்பதனை.

"எப்படி நிலானி எப்படி? நீங்கள் இப்படி நினைத்து இருக்கவே கூடாது. நீங்கள் செய்தது தவறுதான். உங்களுக்கும் எனக்கும் இடையிலை எவ்வளவு இடைவெளிகள் இருக்கு தெரியுமா?"

"கஜன் காதல் மனம் சம்பந்தப்பட்ட விடயம் உங்களுக்கு என்னைப் பிடிச்சு இருந்தால், இந்த இடைவெளிகள் எல்லாம் இரண்டாம்பட்சம் தானே?" என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது. ஆனால் முடியவில்லை. ஏனென்றால் அது சத்தியமூர்த்தி அவளுக்காக விட்டுச்சென்ற வார்த்தைகள். ஏனோ தெரியவில்லை. அப்பொழுது ஒருதடவை சத்தியமூர்த்தியை நினைத்துக் கொண்டாள் நிலானி.

அவளுடைய கண்களில் இருந்து பூத்த கண்ணீர்த் துளிகள் அன்றைய காதலர் தினத்தை புனிதமாக்கிக் கொண்டு இருந்தன. சத்தியமூர்த்தியால் காதலைப்பற்றி அவள் இன்று புரிந்து கொண்டாள். அவளினால் என்றோ ஒருநாள் கஜனும் புரிந்துகொள்ளத்தான் போகின்றான் நிச்சயமாக!

# ஆசை வெள்ளத்தில் நீந்தும் மனம்!

இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

"மனதை ஒரு வில்லாக்கி வான்பொறியை நாணாக்கி எனதறிவை அம்பாக்கி எய்வதினி எக்காலம்?"

"என்னடா குமரேஷ், சித்தர் பாட்டில் விழுந்து விட்டாய்? வாழ்க்கை வெறுத்துவிட்டதா?"

"வா ஜீவா! இப்படி இரு. வெறுத்தது வாழ்க்கையில்லை, இந்த மனதைத்தான். இதைத்தான் என் வழிக்குத் திருப்ப முடியவில்லை. அது அதுபாட்டுக்கு கட்டையில் கட்டிய பசுவைப் போல் ஒன்றையே சுற்றிச் சுற்றி வருகிறது..."

"அடுத்த மாதம்தான் ஊருக்குப் போய்விடப் போகிறாயே... அதற்குள் கலாவின் நினைவு வந்துவிட்டதா? இப்போது வேலையில் கவனம் வை. அங்கே போனபிறகு அவளைக் கவனித்துக்கொள்ளலாம்..."

"துணி வெளுக்க மண்ணுண்டு; தோல் வெளுக்கச் சாம்பருண்டு; மணி வெளுக்கச் சாணையுண்டு; மனம் வெளுக்க வழியில்லையே..."

"என்னடா இன்றைக்கு ஒரே பாட்டாயிருக்கு, அதுவும் ராகம் இழுத்துப் பாடுமளவுக்கு நல்ல 'முட்'டிலும் இருக்கிறாய் போலிருக்கு..."

"ஓமோம் ஜீவா. மனம் பொங்குகிறது. அவள் நினைவு வேண்டாம் என்று அடக்க முயற்சித்தாலும் மறுக்கிறது. இந்த மனநிலையில் அம்பிகாபதிபோல ஒரு நூறு பாடலென்ன, ஓராயிரம் பாடலை ஒரே முச்சில் பாடிவிடுவேன். அப்படிப் பாடாவிட்டால் மனதின் எழுச்சி அடங்காதென்றும் தோன்றுகிறது..."

"அப்ப பாடு.. நான் கேட்கிறேன்... எல்லாவற்றையும் பாடிக் கொட்டி, மனதை அமைதிப்படுத்து, உலகில் காகம், கழுதை, கோட்டான் என்று எத்தனை வினோத சத்தங்கள் கேட்கின்றன. என் உயிர் நண்பனான உன் குரலைத் தாங்கிக் கொள்ள மாட்டேனா, என்ன? பாடு குமரேஷ் பாடு..."

"அடி வாங்காதே. நீ கேட்டால் என்ன கேட்காவிட்டால் என்ன, பாடத்தான் போகிறேன். சித்தனுக்குச் சித்தன் என் அப்பனுக்கு அப்பன் பாரதியின் பாடல். கேட்க முடிந்தால் இருந்து கேள். இல்லாவிட்டால் எழுந்து போய்க் கொண்டே இரு ..."

என்று சொல்லிச் சிரித்தவன், பெருங்குரலெடுத்துப் பாட ஆரம்பித்தான். கண்களை மூடினான். அகத்திலிருந்தும் சுற்றுப் புறத்தை, சூழலை அகற்றிவிட முனைந்தான். தன் குரல் ஒன்றே தன் காதுவழி புகுந்து மனதை நிறைத்துவிட்டும் என்று விரும்பினான். பொங்கப் பொங்க அவள் நினைவையே நிறைத்து நிரப்பிக் கொண்டிருந்த மனத்துள் தன் பாடல் சென்று நிறையட்டும் என்ற ஆவேசத்தில் பாடினான்.



"மனமெனும் பெண்ணே! வாழி நீ கேளாய்!
ஒன்றையே பற்றி ஊசலாடுவாய்!
அடுத்ததை நோக்கி அடுத்தடுத் துலவுவாய்!
நன்றையே கொள் எனிற் சோர்ந்து கை நழுவுவாய்!
விட்டு விடென்றதை விடாது போய் விழுவாய்!
தொட்டதை மீளவும் தொடுவாய்!
புதியது காணிற் புலனழிந்திடுவாய்!
புதியதை விரும்புவாய் புதியதை அஞ்சுவாய்!
அடிக்கடி மதுவினை அணுகிடும் வண்டுபோல்
பழமையாம் பொருளிற் பரிந்துபோய் வீழ்வாய்..."

குமரேஷ் விட்ட இடைவெளியில் புகுந்தான் ஜீவா. "பார்த்தாயா, குரங்குபோல் தாவிக் கொண்டேயிருக்கிற மனத்தைத்தான் பாரதி சொல்கிறான். நீயோ கட்டை இடித்துக் கட்டிய மாடென்றல்லவா ஒரே இடத்தில் சுழல்கிறது உன் மனது என்கிறாய்..."

"மனதின் விசித்திரக் கூத்துக்களை அறிய மார்க்கந்தான் என்ன? 'நன்றையே கொள் எனிற் சோர்ந்து கை நழுவி, விட்டு விடு என்றதில் விடாது போய் விழும்' மனநிலையில்தான் இப்ப நான்..."

"ம்... அதுவும் சரிதான். பாலகுமாரனின் ஒரு கவிதை. வரிகள் ஞாபகமில்லை. தெருவிலே அழகழகாய் பெண்கள் போகிறார்களே பார் என்றால், ஒரு கணம் பார்த்து மயங்கிவிட்டு மனம் மீண்டும் தாவுது அவளுக்காய். தாயின் இடுப்பைவிட்டு இறங்க மாட்டேன் என்று அடம்பிடிக்கிற குழந்தையைப் போல அவளின் நினைப்பை இடுக்கிக்கொண்டு ஜொள்ளை உறிஞ்சுகிறது மனக்குழந்தை... ஏறக்குறைய உன் நிலைமையிலேதான் அந்தக் கவிதையும் பிறந்திருக்கும் போல..."

"போடா, நீயும் எரிகிற என் தீயிற்கு எண்ணெய் வார்க்கிறது போலத்தான் பேசுகிறாய், பாடி மனதைத் திருப்பலாம் என்று முயற்சித்ததையும் குழப்பி விட்டாய். குறுந்தொகைத் தலைவன் ஒருவனின் கவலைதான் நினைவுக்கு வருகிறது..."

என்ன கவலை... அவனவன் வெளியூரில் போயிருந்து கொண்டு வாய் பேசா மிருகங்களையும், மேகத்தையும், காற்றையும், நீரையும் தூதனுப்பிக் கொண்டிருந்ததைத்தானே சொல்லப் போகிறாய்...?"

"இல்லை. உயர்ந்த மரக்கிளையிலே தன் குட்டியை அன்போடு தழுவிக்கொண்டிருக்கும் தாய்க் குரங்கைப் போல தன் குறையைக் கேட்க யாருமில்லையே என்று வருந்துகிற தலைவனின் பரிதாப நிலை..."

"போடா. இலக்கியக் கவலையை எல்லாம் எடுத்து உனக்குப் பொருத்திப் புலம்பிக் கொண்டிராதே. உன் குறைதான் ஒரு மாதத்தில் தீர்ந்துவிடுமே.. அதுவரை மனதை அலட்டிக் கொள்ளாமல், வேறு பராக்குகளில் செலுத்திக் கொண்டிரு என்கிறேன்... வேறென்ன சொல்லச் சொல்கிறாய்?"

"நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். என் மனதுக்குத்தான் ஆறுதல் கிடைக்கவில்லை. அதற்கு நீ என்ன செய்ய முடியும்? அதற்கு ஆறுதலான உரையை யாரும் தந்துவிட முடியாது. சுடாத பச்சை மண் பானைக்குள் மழை வெள்ளத்தை நிரப்பினால் எப்படி இருக்கும்? அதுபோலத் தாங்க முடியாத ஆசை வெள்ளத்தில் நீந்துகிறது மனம்.

நினைத்தவுடன் கிட்டிவிடுகிற சுகமா? அவளே எட்டாத தூரத்திலல்லவா இருக்கிறாள்? அதுதான் மனம் தாங்க முடியாமல் கரைந்துகொண்டிருக்கிறது..."

"ம்... நீதான் உன் மனதுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும்."

"அவளை உடனே சந்தித்துவிட வேண்டும் என்கிற எட்டாக் கனிக்கு ஆசைப்படுகிறது மனம். அந்த ஆசையின் கனத்தைத் தாங்கவும் முடியவில்லை. குறையை யாருக்கும் புதிய வைத்து விடவும் முடியாது. இந்நிலையில் அவள்தான் வேண்டும் என்று அடம்பிடிக்கும் இந்த மனிதன் மேல் கோபப் படுவதைத் தவிர வேறு வழியிருப்பதாகவும் தெரியவில்லை."

**நல்லுரை இகந்து புல்உரை தாஅய்ப்**
**பெயல் நீர்க்கு ஏற்ற பசும்கலம் போல,**
**உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி**
**அரிது அவா உற்றனை நெஞ்சே! நன்றும்**
**பெரிதால் அம்ம! நின்பூசல்! உயர் கோட்டு**
**மகவு உடை மந்தி போல**
**அகன் உறத் தலீஇக் கேட்குநர்ப் பெறினே.**

*(குறுந்தொகை: 29)*

# ஸ்போர்ட்ஸ்

## 2000ம் ஆண்டில் முதலிடங்களில் கங்குலி-ரஸாக்

கடந்த வருடம் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்கள் பட்டியலில் முதலிடத்தில் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் சௌரவ் கங்குலியும் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் பட்டியலில் முதலிடத்தில் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் அப்துல் ரஸாக்கும் இருக்கின்றனர்.

கடந்த வருடம் ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள், அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள், அதிக கட்ச்களைப் பிடித்தவர்கள், அதிகமானோரை அவுட்டாக்கிய விக்கெட் கீப்பர்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

அதிக ஓட்டங்களைக் குவித்த முதல் 10 வீரர்கள்:

| வீரர்கள் | (நாடு) | போட்டிகள் | ஓட்டங்கள் | அதிகபட்சம் | சதங்கள் | சராசரி |
|---|---|---|---|---|---|---|
| 1. சௌரவ் கங்குலி | (இந்தியா) | 32 | 1579 | 144 | 7 | 56.39 |
| 2. கேரி கேர்ஸ்டன் | (தெ. ஆபிரிக்கா) | 36 | 1467 | 115 | 2 | 44.45 |
| 3. சச்சின் டெண்டுல்கர் | (இந்தியா) | 34 | 1328 | 146 | 3 | 39.06 |
| 4. ஜக்ஸ் கலிஸ் | (தெ. ஆபிரிக்கா) | 39 | 1300 | 98* | – | 44.83 |
| 5. யூசுப் யுஹானா | (பாகிஸ்தான்) | 41 | 1162 | 100 | 1 | 32.28 |
| 6. இன்ஸமாம்-உல்-ஹக் | (பாகிஸ்தான்) | 34 | 1074 | 121* | 1 | 42.96 |
| 7. ரொஜர் டுவோஸ் | (நியூஸிலாந்து) | 25 | 1068 | 103 | 1 | 56.21 |
| 8. ராகுல் ட்ராவிட் | (இந்தியா) | 31 | 980 | 85 | – | 31.00 |
| 9. அலிஸ்டர் கம்பல் | (ஸிம்பாப்வே) | 28 | 960 | 105* | 1 | 38.40 |
| 10. அன்டி ஃபிளவர் | (ஸிம்பாப்வே) | 32 | 943 | 120* | 1 | 31.43 |

## அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய முதல் 10 வீரர்கள்

| வீரர்கள் (நாடு) | போட்டிகள் | விக்கெட்டுகள் | கொடுத்த ஓட்டங்கள் | சிறந்த வீச்சு | சராசரி |
|---|---|---|---|---|---|
| 1. அப்துல் ரஸாக் (பாகிஸ்தான்) | 38 | 61 | 1370 | 5/48 | 22.46 |
| 2. ஷோன் பொல்லோக் (தெ.ஆபிரிக்கா) | 38 | 61 | 1319 | 5/20 | 21.62 |
| 3. ஜக்ஸ் கலிஸ் (தெ.ஆபிரிக்கா) | 39 | 46 | 1356 | 3/47 | 29.49 |
| 4. லான்ஸ் குளுஸ்னர் (தெ.ஆபிரிக்கா) | 41 | 39 | 1231 | 5/47 | 31.56 |
| 5. கிளென் மக்ராத் (அவுஸ்திரேலியா) | 21 | 36 | 682 | 5/49 | 18.94 |
| 6. வாஸிம் அக்ரம் (பாகிஸ்தான்) | 30 | 36 | 1054 | 3/10 | 29.28 |
| 7. ஹீத் ஸ்ட்ரீக் (ஸிம்பாப்வே) | 30 | 35 | 1212 | 3/26 | 34.63 |
| 8. அஜித் அகார்கர் (இந்தியா) | 28 | 34 | 1231 | 4/25 | 36.21 |
| 9. பிரெட் லீ (அவுஸ்திரேலியா) | 20 | 34 | 757 | 5/27 | 22.26 |
| 10. முத்தையா முரளீதரன் (இலங்கை) | 21 | 34 | 680 | 7/30 | 20.00 |

## அதிகம்பேரை அவுட்டாக்கிய விக்கெட் கீப்பர்கள்

| வீரர்கள் (நாடு) | போட்டிகள் | அவுட்கள் (கட்ச்/ஸ்டம்ப்ட்) |
|---|---|---|
| 1. மொய்ன் கான் (பாகிஸ்தான்) | 38 | 56 (44/12) |
| 2. மார்க் பவுச்சர் (தெ.ஆபிரிக்கா) | 37 | 56 (55/01) |
| 3. அடம் கில்கிறைஸ்ட் (அவுஸ்திரேலியா) | 23 | 38 (37/01) |
| 4. றிட்லி ஜேக்கப்ஸ் (மே.இ.தீவுகள்) | 18 | 28 (24/04) |
| 5. அன்டி ஃபிளவர் (ஸிம்பாப்வே) | 32 | 20 (18/02) |

## அதிக கட்ச்களைப் பிடித்த வீரர்கள்

| வீரர்கள் (நாடு) | போட்டிகள் | கட்ச்கள் |
|---|---|---|
| 1. மார்க் வோவ் (அவுஸ்திரேலியா) | 23 | 15 |
| 2. ஜக்ஸ் கலிஸ் (தெ.ஆபிரிக்கா) | 39 | 15 |
| 3. ஷோன் பொல்லோக் (தெ.ஆபிரிக்கா) | 38 | 15 |
| 4. சௌரவ் கங்குலி (இந்தியா) | 32 | 14 |

## 2000ம் ஆண்டில் நடந்த ஒருநாள் போட்டி முடிவுகள்

| அணி | போட்டிகள் | வெற்றி | தோல்வி | கைவிடப்பட்டவை | சமநிலை | வெற்றிச் சராசரி |
|---|---|---|---|---|---|---|
| 1. இலங்கை | 21 | 16 | 5 | – | – | 76.19 |
| 2. அவுஸ்திரேலியா | 23 | 15 | 6 | 1 | 1 | 65.21 |
| 3. தெ.ஆபிரிக்கா | 41 | 25 | 14 | 1 | 1 | 60.98 |
| 4. இங்கிலாந்து | 21 | 11 | 9 | 1 | – | 52.38 |
| 5. பாகிஸ்தான் | 41 | 20 | 21 | – | – | 48.78 |
| 6. இந்தியா | 34 | 15 | 19 | – | – | 44.11 |
| 7. நியூஸிலாந்து | 25 | 10 | 13 | 2 | – | 40.00 |
| 8. மே.இ.தீவுகள் | 19 | 6 | 12 | 1 | – | 31.58 |
| 9. ஸிம்பாவே | 32 | 9 | 23 | – | – | 28.13 |
| 10. பங்களாதேஷ் | 4 | – | 4 | – | – | 00.00 |
| 11. கென்யா | 1 | – | 1 | – | – | 00.00 |
| மொத்தம் | 131 | 127 | 127 | 3 | 1 | |

# சிந்தியா பதில்கள்

**♠ காதலர் தினத்தன்று மனதில் இடம் பிடித்திருப்பவருக்கு எதைப் பரிசளித்தீர்கள்?**

எஸ். குட்டி, கொத்தியாபுலை.

*எப்போதையும் போல என்னையே...*

**♠ ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருப்பாளாம். என் தோல்விக்குப் பின் ஒரு பெண் இருக்கிறாளே...?**

சு. இராமச்சந்திரன், மாரதென்ன.

*ப. பெண்ணை எப்போதும் உங்கள் பின்னுக்கு வைத்தே பார்த்துப் பழகியதன் விளைவு!*

**♠ 'மின்னலே' ரீமா சென், 'உள்ளம் கொள்ளை போகுதே' அஞ்சலா-நடிப்பில் யார் தேறுவார்கள்?**

எஸ். ரமணாகரன், கொழும்பு-12.

*நடிக்க ஆரம்பிக்கட்டும். பிறகு சொல்கிறேன்.*

**♠ "என்ன?" என்றால் என்ன .சிந்தியா, (கோபிக்காது விடை தரவும்)?**

பே. ஜெயந்தன், கோளாவில்.

*இதில் கோபிக்க என்ன இருக்கிறது ஜெயந்தன்? உங்கள் கேள்வியிலேயே அந்தச் சொல்லை எதற்குப் பயன்படுத்துகிறோம் என்பது தெளிவாக இருக்கிறதே!*

**♠ சிந்தியா, நீங்கள் ஜொள்ளரா, லொள்ளரா?**

என். ராகுலன்-கொழும்பு.

*பெண்களிடம் ஜொ. உங்களிடம் லொ. ஹி...ஹி...ஹி...*

**♠ தப்பே செய்யாதிருப்பவர்கள் என்று யாரையேனும் சொல்ல முடியுமா?**

ஜி. ஜோ., கொழும்பு-13.

*எனக்குத் தெரிந்து இருவர் இருக்கிறார்கள். ஒருவர் இறந்துவிட்டார்; மற்றவர் இன்னும் பிறக்கவில்லை.*

**♠ சிந்தியா, கோயிலுக்குப் போவதுண்டா?**

எஸ். தயானந்தன், பதுளை.

*நமக்குப் பிடித்தமானவர்களுக்கு அதனால் சந்தோஷம் என்று அறிந்தால் போவதுண்டு.*

*மற்றபடி, நாம் சரியாகவும், நேர்மையாகவும் நடந்துகொண்டால், கடவுள் நம்மைத் தேடி வருவார் என்பவர்களுடைய கட்சி நான்.*

*கதை ஒன்றைக் கேளுங்கள்:*

*கடவுள் ஒருநாள் மனித வேடத்தில் ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார். ஒரு வயலில் ஒரு பெண் தன்னந்தனியே வேலை செய்து கொண்டிருந்ததைக் கண்டார்.*

*அவளிடம் சென்று, "நீ மட்டும் தனியாக இங்கே உழைத்துக் கொண்டிருக்கிறாயே, வயல்களில் யாரையும் காணவில்லை. எங்கே போய்விட்டார்கள்?" என்று கேட்டார்.*

*"இன்றைக்குக் கோயிலில் திருவிழா. அதுதான் எல்லோரும் போய்விட்டார்கள்!"*

*"நீ ஏன் போகவில்லை?"*

*"எனக்கு ஐந்து குழந்தைகள். நான் அவர்களைக் காப்பாற்ற வேண்டும். சாமியைப் பார்க்கிறதுக்காக ஒருநாள் கூலியை விட்டுவிட முடியாது!" என்றாள் அந்தப் பெண்.*

*கடவுள் அந்தப் பெண்ணின் கையிலே தன்னிடமிருந்த தங்க ஆபரணங்களையெல்லாம் கழற்றிக் கொடுத்துவிட்டுச் சொன்னார்: "அம்மா, இதை வைத்துக்கொள். கடவுளைப் பார்க்கப் போனவர்கள் திரும்பி வந்ததும், கடவுள் உன்னைப் பார்க்க வந்தார் என்று சொல்!" சொல்லிவிட்டுக் கடவுள் திரும்பி நடந்தார்.*



அஞ்சலா

**♠ சினிமாவில் வருகிற சில குழந்தைகள் தகப்பன் பாத்திரத்தை 'நீ, வா, போ' என்று விளித்துப் பேசுகின்றனரே...?**

வ. அரசு, ஹட்டன்.

*அது அங்கே உள்ள சில பிராமணக் குடும்பங்களிலுள்ள பழக்கம். நடிகர் கமல் ஹாசன் ஒரு பேட்டியில், தான் மிகச் சிறு வயதிலேயே ஔவை சண்முகம் அவர்களின் நாடகக் கம்பனியில் போய்ச் சேர்ந்திருக்காவிட்டால், தன்னால் தந்தையை ஏகவசனத்தில் விளிக்கும் இந்தப் பழக்கத்தைக்கூட விட முடியாது போயிருக்கும் என்று சொல்லியிருக்கிறார்.*

**♠ 'பொய்' என்று நமக்குத் தெரிந்ததை, 'உண்மை' என்று அடித்துப் பேசி, தங்கள் வாதத் திறமையால் நம் வாயடைப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?**

ச. வசந்தகுமார், இரத்தினபுரி.

*வாதத்திறமையால் வெற்றி பெற்றுக் கொள்வது, அவர் தனக்குத் தானே திருப்திப் பட்டுக்கொள்ள உதவுமே தவிர, வாழ்க்கையில் வெற்றிபெற உதவாது. இருக்கும் நண்பர்களையும் இழந்துவிடத்தான் அது உதவும். நம்மை ஒருவருக்குப் புரிய வைப்பது, நம்முடைய வாக்குச் சாதுரியத்தில் மட்டும் இல்லை.*

*உலகப் புகழ்பெற்ற ரஷ்ய நடன விற்பன்னர் பலோவா, ஒரு நடன நிகழ்ச்சியில் நடனமாடி முடித்த பிறகு, அவரது ஒப்பனை அறைக்குள் வந்த ஒரு பார்வையாளர், "இன்று உங்கள் நடனம் மிகப் பிரமாதம். நீங்கள் ஆடிய நடனத்தில் மூன்றாம் அங்கம் எனக்குப் புரியவில்லை. அது என்ன என்று சற்று விளக்கிச் சொல்வீர்களா?" என்று கேட்டார்.*

*அதற்கு பலோவா அம்மையார் அளித்த பதில் இதுதான்!*

*"அந்த நடனத்தின் விளக்கத்தை வார்த்தைகளால் சொல்லிப் புரிய வைத்துவிட முடியுமானால், நான் நடனம் ஆடியிருக்கவே தேவையில்லையே..."*

**♠ இந்திய சனத்தொகை 100ஆவது கோடியைத் தொடுவதாகப் பிறந்த குழந்தையைப் பற்றி விபரம் தரமுடியுமா?**

த. கோபாலகிருஷ்ணன், ஹாலிஎல.

*2000 மே மாதம் 11ம் திகதி நண்பகல் 12.30 அளவில் நியூடெல்லியில் பிறந்தது. தாய் அஞ்சலி அரோரா. குழந்தைக்கு 'ஆஸ்தா' என்று பெயர்.*

**♠ 'தெனாலி' பாட்டில் கிறங்கிவிட்ட சிந்தியாவே, சாதனா சர்கம்தான் உமக்குப் பிடித்த பாடகியா?**

செ. சுஜாதா, கொழும்பு-05.

*அப்போ சொன்னது அது. இப்போ கிறக்கியிருப்பது பம்பாயிலிருக்கும் ஒரு தமிழ்க் குரல். கீழ்ஸ்தாயியில் குழைந்து மனதை வருடுகிற ஜெயஸ்ரீ குரலில் மயங்கி நெஞ்சினித்துக் கிடக்கிறது. காதல் ஒரு முடிவிலியாம். அங்கே இந்தக் கடிகார நேரமெல்லாம் கிடையாதாம். நிமிஷங்கள் வருஷங்களாகவும் வருஷங்கள் நிமிஷங்களாகவும்... காலப்பிரக்ஞை கடந்த உலகுக்கு அழைத்துப் போக முடிகிறதே ஒரு பாடலால்! அந்த 'வசீகரா' தான் இப்போது எனது 'வயாகரா'!*

**♠ சிந்தியா, நீங்கள் நன்றாகப் பாடுவீர்களா?**

ஐ.எஸ். பிரிட்டி, கித்துள்.

*ஆமாம். ஆனால் அதை மற்றவர்கள் ஒப்புக்கொள்வதில்லை.*

**♠ பொருட்களின் விலைவாசி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. யுத்தமும் நின்றபாடில்லை. இந்த நிலை நீடிக்குமானால் எதிர்காலம் என்னவாகும்?**

எச்.எம்.எம். இத்றிஸ்தீன், ஒட்டமாவடி.

*14 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தை ஆண்ட மூன்றாம் எட்வேர்ட் மன்னனின் காலத்தில், நாட்டு மக்கள் எல்லோரும் ஒரு நாளைக்கு இரண்டு வேளைக்கு மேல் சாப்பிடக்கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டு, அது இரண்டு நூற்றாண்டுகள் வரை அமுலில் இருந்ததாம். நமக்கும் அந்தநிலை வரலாம்.*

*அதற்குள், நமது புத்திஜீவிகள், பிரமுகர்கள், சமூக அக்கறைகொண்டவர்கள் எல்லோரும் ஒன்று கூடி வெளிவர வேண்டும். அவர்கள் தாங்கள் ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து, அதுகுறித்துப் பேச, சண்டையிடும் இரு தரப்பையும் நெருக்க வேண்டும். நல்லவர்களின் மௌனத்தை பயத்தை கலைப்பது யார் என்பதுதான், பூனைக்கு மணி கட்டுகிற கேள்வி!*

மா மன்னர் விக்கிரமாதித்தனுக்கும் வீமாபுரி இளவரசியான பேசா மடந்தைக்குமிடையில் தொங் கவிடப்பட்டிருந்த திரைச் சீலை தனது கதையைத் தொடர்ந்தது. மந்தாகினிபுர இளவரசன் மதனமோகனும் அமைச்சர் மகனான தந்திரலோகனும் வேட்டைக்குச் சென்ற போது, அக்கானகத்திலுள்ள கோயிலின் வடக்கு வீதியில் அழகிய பெண்ணின் சிலை ஒரு பூச்செண்டினை கையிலேந்திக் கொண்டு நின்றதைக் கண்ட இளவரசன் அந்தச் சிலையை உண்மையான பெண்ணெனக் கருதி அதன்மீது மோகம் கொண்டான். பித்துப் பிடித்தவன் போல் "பெண்ணே பூவைத் தா!" என்று கேட்டவண்ணமிருந்தான்.

இந்நிலையைக் கண்ட அவன் நண்பன் தந்திரலோகன் அந்தக் கோயில் பூசகரைக் கண்டு அந்தச் சிலையைச் செய்த சிற்பியைத் தேடிச் செல்கிறான்.

சிற்பியார் தனக்குத் தெரிந்த குயவன் ஒருவன் கொடுத்த இரத்தினம் போன்ற ஒரு பெண்ணின் நகத்தை வைத்தே, அத்தகைய நகத்தையுடைய பெண் எவ்வாறிருப்பாள் எனக் கற்பனை செய்தே அந்தச் சிலையைச் செய்ததாக தந்திரலோகனிடம் கூறினான்.

தந்திரலோகன் குயவனைத் தேடிச் சென்று நகத்துக்குரிய பெண்ணைப்பற்றி விசாரித்தபோது, கார்க்கோடகன் என்ற ஒரு வேடுவனே அந்த நகத்தைக் கொடுத்ததாகக் கூறினான்.

# மன்னாதி மன்னன் 45

தந்திரலோகன் எப்படியாவது அந்த அழகியைக் கண்டு பிடித்து தன் நண்பன் மதனமோகனிடம் சேர்ப்பித்தாக வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் கார்க்கோடகன் என்ற வேடுவனைத் தேடிப் புறப்பட்டான்.

கார்க்கோடகன், தான் ஒருநாள் வேட்டைக்குச் சென்றபோது ஒரு மிருகமேனும் அகப்படாமையினால் சோர்வடைந்து ஒரு மரத்தின் கீழ் படுத்திருந்ததாகக் கூறினான். களைப்பு நீங்கி எழுந்து பார்த்தபோது, தரையில் பளபளவென்று ஏதோ ஒரு பொருள் மின்னியதாகவும் தான் அதை எடுத்துவந்து அடுத்தநாள் காலையில் பார்த்தபோது அது ஒரு பெண்ணின் நகம் என்று தெரிந்ததாகவும் கார்க்கோடகன் கூறினான்.

அந்த நகத்தைத்தான் தன்னுடைய நண்பனான குயவனிடம் கொடுத்ததாகவும் கூறினான்.

வேடுவன் சொன்ன கதையைக் கேட்டு தந்திரலோகன் வேதனைக்குள்ளானான். அந்த நகத்துக்குரியவளைக் காண்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. தனது நண்பனின் ஆசையை நிறைவேற்ற முடியாத நிலையில் உயிரோடு வாழ தந்திரலோகன் விரும்பவில்லை. இருப்பினும் கடைசி முயற்சியாக வேடுவன் நகத்தைக் கண்டெடுத்த மரம் எங்கே இருக்கிறது என்று கண்டு கொண்டு அங்கே போய்ப்பார்க்க எண்ணினான்.

வேடுவன் கூறியபடி குறிப்பிட்ட மரத்தைக் கண்டு கொண்டான். பல காததூரம் நடந்து சென்றமையினால் களைப் பேற்பட்டது. அந்த மரத்தின் கீழே படுத்துக் கொண்டான்.

களைப்பு நீங்கி எழுந்த தந்திரலோகன் அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் அதே மரத்தின்கீழ் சோகமாக அமர்ந்திருந்தான்.

மாலையாகி இருள் சூழத் தொடங்கியது. காட்டில் வனவிலங்குகளின் ஓசையும் தந்திரலோகனைப் பயமுறுத்தின. இதே வேளையில் இரை தேடியலைந்த ராஜகிளி ஒன்று அந்த மரத்தின் மீது வந்தமர்ந்தது.

## பெண்ணழகியைத் தேடி.....!

மரத்தின் கீழே ஓரிளைஞன் சோகமேயுருவாக அமர்ந்திருப்பதைக்கண்டு கீழிறங்கி வந்தது. தந்திரலோகனைப் பார்த்து, "ஐயா, இங்கு கொடிய மிருகங்கள் உலாவுகின்ற இடம்-உங்களைக் கண்டால் அவை உங்களைக் கொன்று தின்றுவிடும். ஏன் இந்த நேரத்தில் சோகமாக இங்கு வந்திருக்கிறீர்கள்!" என்று கேட்டது.

"ராஜகிளியே, நான் முக்கியமான காரியமாகப் புறப்பட்டு வந்தேன். அந்தக் காரியம் நிறைவேறாது போல் தோன்றுகிறது. எனவே நான் உயிர் வாழ்வதைவிட காட்டு விலங்குகளுக்கு இரையாகி விடுவதே மேல்!" என்று தந்திரலோகன் கிளியிடம் கூறினான்.

இதனைக் கேட்ட கிளி, "அவ்வாறு கைக்கூடாத காரியம் என்னென்பதை நான் அறியலாமோ?" என்று கேட்டது. கிளியிடம், கோயிலில் கண்ட சிலை பற்றியும் அதனைக் கண்ட தன் நண்பனின் நிலைபற்றியும் எடுத்துக்கூறி, அந்தப் பெண்ணின் நகம் பற்றியும் அந்த நகத்துக்குரியவளை தான் தேடி அலைவது பற்றியும் தெரிவித்தான்.

தந்திரலோகனின் கதையைக் கேட்ட ராஜகிளி, "ஐயா! நீங்கள் கூறிய நகத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இருப்பினும் எங்கள் கிளிகள் கூட்டத்தில் எவருக்காவது நகம்பற்றி தெரிந்திருக்க வேண்டும். சற்றுப் பொறுங்கள். கிளிகளை அழைத்துக் கேட்டுப் பார்க்கிறேன்," என்று கூறிய ராஜகிளி, கிளிகளையெல்லாம் அழைத்து, அந்த நகத்தைப் பற்றி விசாரித்தது.

அப்போது ஒரு சின்னஞ் சிறிய பஞ்சவர்ணக்கிளி முன்வந்து, "அந்த நகம் பற்றிய கதை எனக்குத்தான் தெரியும். நாங்கள் அனைவரும் ஒருநாள் இரைதேடி ஏழு கடல்களைத் தாண்டிச் சென்றோம். அங்கேயிருந்த பழத்தோட்டத்தில் வேண்டிய பழங்களைத் தின்றுவிட்டு, ஒவ்வொரு கிளியும் ஒவ்வொரு பழத்தைக் கவ்விக் கொண்டு பறந்து வந்தோம். வழியில் மல்லிகாபுரம் என்ற தீவில் ஓர் அழகிய மாளிகையைக் கண்டோம். அந்த மாளிகையின் உப்பரிகையில் ஓர் அழகான பெண் தலைவிரி கோலமாக நின்று தன் கூந்தலைக் கோதிக் கொண்டு நின்றாள். அவளுடைய கைவிரல்களிலுள்ள நகங்கள் யாவும் இரத்தினக்கற்களைப் போல் பள பளவென மின்னிக் கொண்டிருந்தன.

அதேவேளை அந்த பெண்ணின் நகமொன்று தானாகவே கழன்று தரையில் வீழ்வதை நான் கண்டேன். என்னுடன் பறந்து வந்த மற்ற கிளிகளுக்குத் தெரியாமல், நான் மட்டும் கீழே போய் தரையில் கிடந்த அந்த மோதிரத்தைத் கவ்விக் கொண்டேன்.

அந்த நகத்தையெடுத்து வந்த அடுத்த நாளே, தங்களிடம் தந்தேன். தாங்கள் அப்போது ஏனைய கிளிகளை அழைத்து உரையாடிக் கொண்டிருந்தமையினால், நகம்பற்றி நான் கூறிய கருத்துக்களை நீங்கள் செவிமடுக்கவில்லை. நான் மீண்டும் மீண்டும் தங்களிடம் நகத்தைக்காட்டி அது எங்கு கிடைத்தது என்பதையும் கூறினேன். தாங்கள் கோபத்துடன் அந்த நகத்தை வாங்கிப் பார்த்துவிட்டு." பூ... பெண்ணின், நகத்தைக் காட்டுவதற்காகவா இத்தனை பாடு பட்டாய்?' என்று கூறி, என் தலையில் குட்டினீர்கள்.

ஏமாற்றமும் சோர்வும் சேர்ந்தமையினால் அந்த நகத்தை மீண்டும் கவ்விக் கொண்டு அந்த ஆலமரத்தடியில் போட்டுவிட்டு வந்தேன்," என்று பஞ்சவர்ணக்கிளி நகத்தின் கதையைக் கூறி முடித்தது.

இந்தக் கதையைக் கேட்ட தந்திரலோகன் ஓரளவு மகிழ்ச்சியடைந்தான். பஞ்சவர்ணக்கிளிக்கு நன்றி கூறிவிட்டு, ராஜகிளியிடம், "ஏழு கடல்களுக்கு அப்பாலுள்ள மல்லிகாபுரம் செல்லும் வழியை அறிந்து சொல்ல முடியுமா?" என்று கேட்டான்.



ராஜகிளி பஞ்சவர்ணக்கிளியை மீண்டும் அழைத்து, மல்லிகாபுரம் போகும் வழியை தந்திரலோகனுக்குக் கூறும்படி கேட்டுக் கொண்டது.

பஞ்சவர்ணக்கிளி, "இங்கிருந்து தெற்கே மூன்று கல் தொலைவில் ஒரு தீவு இருக்கிறது. அத்தீவின் நடுவில் ஒரு பெரிய அரசமரம் இருக்கிறது. அம்மரத்தில் ஆணும் பெண்ணுமான அண்டரண்டம் பட்சிகள் வசிக்கின்றன.

அவை மிகவும் பொல்லாதவை. தந்திரமான முறையில்தான் அவற்றை அணுக வேண்டும். அவ்வாறு அந்த பட்சிகளை அணுகினால் அவற்றிலொன்று ஏழு கடல் களையும் தாண்டி உங்களை மல்லிகாபுரம் கொண்டு போய்ச் சேர்க்கும்," என்று கூறியது

இந்தத் தகவலையறிந்த தந்திரலோகன் பஞ்சவர்ணக்கிளி குறிப்பிட்ட அரசமரத்தை நோக்கிப் புறப்பட்டான். அங்கு போய்ச் சேரும் போது இருள் கவ்வத் தொடங்கியது. அரச மரத்தைக் கண்டதும் அதன்மீது அண்டரண்டப் பட்சிகள் இருக்கின்றனவா, என்று பார்த்தான். அங்கு பட்சிகளைக் காணவில்லை.

அப்பட்சிகளின் குஞ்சுகளிரண்டு அரச மரத்தின் அடிப்பக்கம் பார்த்து பயந்து நடுங்கிக் கொண்டிருந்தன. அங்கே ஒரு கருநாகப்பாம்பு பட்சிகளைப் பிடித்து உண்பதற்காக மெதுவாக ஏறிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

சற்று நேரம் தாமதித்தாலும் பாம்பு குஞ்சிகள் இரண்டையும் ஒரே தாவில் தாவி விழுங்கிவிடும் என்பதையும் உணர்ந்தான்.

**இராஜகுமாரன்**

பாம்பு தங்களை விழுங்குவதற்காக வந்து கொண்டிருப்பதைக் கண்டு தான் குஞ்சிகள் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தன.

தந்திரலோகன் உடனடியாக தனது உடைவாளை உருவியெடுத்து அந்தப் பாம்பை இரு கூறாக வெட்டி வீழ்த்தினான். குஞ்சுகள் இரண்டும் பயம் நீங்கி மகிழ்ச்சியுடன், தந்திரலோகனுக்கு நன்றி கூறின.

அதிலொரு குஞ்சு மீண்டும் பயந்து நடுங்கியது. அடுத்த குஞ்சு "ஏன் பயப்படுகிறாய்?" என்று கேட்டது. அப்போது முதல் குஞ்சு, "உனக்கு நமது பெற்றோரைப் பற்றி தெரியாதா? நம்முடைய உயிரைக் காப்பாற்றிய இவரை எதுவித விசாரணையுமின்றி அவர்கள் பிடித்துத் தின்று விடுவார்கள். ஆகவே அவர்கள் இங்கு வருமுன்னரே இவர் தப்பிச் செல்லட்டும்!" என்று கூறியது.

*(மன்னன் வருவான்...)*

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் அடுத்தடுத்த இதழ்களில்.

## சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமைஇல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:................... பெயர்:......................... ஒப்பம்:...................



**நோட்டீஸ்பலகை**

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி*

அபிமான வாசகர் போட்டியில் முதலாவது: சென்ற ஆண்டின் அதிபெரிய பொய் எது? இதற்கான பதிலை ஒரு வசனத்தில் எழுதி அனுப்புங்கள். சிறந்த பொய்யைக் கூறியவர் 'பொய்யறி மேதை'யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசளிக்கப்படுவார். முடிவுத் திகதி பெப்ரவரி 28. பெறுபேறு அறிவிக்கப்படும் திகதி ஏப்ரல் 1.

இந்திய மீனவரைச் சுட்டுப் பிடிக்க வேண்டாமெனவும், தேவையெனில் வலைவீசிப் பிடிக்கும் படியும் இந்தியா இலங்கையிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தியாவில் ஏற்பட்ட குஜராத் பூகம்பத்துக்கு பாகிஸ்தான் நிவாரண உதவி வழங்கியதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்த சமாதானப் பிரியர்கள், இரு நாட்டுக்குமிடையே நட்புறவை வளர்க்க எதிர்காலத்தில் இவ்வாறான நிறையப் பூகம்பங்கள் ஏற்படவேண்டுமென வேண்டிக் கொண்டனர்.

தமிழ்நாட்டில் "கருணா... நிதியே... குருவே.... சரணம்..." என்று பாட்டுப் பாடிக்கொண்டிருந்த பாட்டாளிமக்கள் கட்சித்தலைவர் ராமதாஸ், இப்போது திடீரென "ஜெயஜெய அம்மா, ஜெயஜெய அம்மா துர்கா தேவி சரணம்" என்று பாட்டை மாற்றிவிட்டதற்கு கொடுத்த விளக்கம் இது: "ஏம்பா, நான் கொள்கை மாறிட்டேன்னு நொச்சீகளா? இதோபாருங்க, ஏங் கொள்கை இன்னா? யாரையும் புகழ்ந்து பல்லவி பாடிக்கிட்டு இருக்கிறது. ஏம் பொலிசியில்ல. நேர சரணத்துக்கே போயிடுவேன். சரணம் தான் ஏங் கொள்கை. கருணாநிதிக்கு சரணம் போட்ட நா இப்போ, ஜெயலலிதாவுக்கு போட்டுக்கிறேன். என்ன தப்பு? சரணம் மாறலையே! ("அசத்திட்டார் போங்க"-இது பப்ளிக் கமெண்ட்)

இடையில் குறுக்கிடும் இத் திரைப்பட விளம்பரத்தைச் சகித்துக்கொண்டு அடுத்த அம்சத்துக்குச் செல்லுங்கள்.

"வெள்ளித் திரைகளிலும் திருட்டு வீடியோக்களிலும் விரைவில் எதிர்பாருங்கள், தமிழர் வியாபாரக் கூத்தணி பெருமையுடன் வழங்கும் 'எலிபாபாவும் ஏழெட்டுத் திருடர்களும்' வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் திருகுதாளத் திரைக்காவியம். கதாநாயகன் வேடத்தில் எலிபாபா செந்திலாக அமுக்கு சங்கரி, வில்லன் விவேக்காக இரகசிய ராஜ், கவுண்டமணியாக மாவை சேனையற்றராஜா, வெள்ளை வடிவேலாக ஜெசெப் பணராசசிங்கம் ஆகியோருடன் ஆவி வேடத்தில் அண்ணல் அமிர் மற்றும் பேய் பிசாசு வேடங்களில் சம்பந்த சம்பந்தமில்லாப் பலரும் பங்குபற்றும் புல்லரிக்கவைக்கும் புத்தம் புதிய திரைக்கதை. படம் பார்ப்பவர்களுக்கு அதிஷ்டப் பரிசுக்கான கேள்வியொன்றும் உண்டு.

**அடுத்து இடம்பெறுவது: அரட்டை அரங்கம் தலைப்பு: தடைக்கு யார் தடை?**

தடை விதிக்கப்பட்டவர்கள் சிலர்கூடி. தமக்கு விதிக்கப்பட்ட தடைக்கு மத்தியிலும், தம்மைத் தடை விதித்தவர் தடைசெய்யப்படுவதைத் தடை செய்ய முனையும் முயற்சியைத் தடையின்றி மேற்கொண்டு, தடைசெய்யப் போகிறவர்களைத் தடுத்து நிறுத்தித் தம்மைத் தடைசெய்தவர்களைத் தடையிலிருந்து காத்தாலும், தமது தடையை நீக்கும்படி தம்மைத் தடைசெய்தவர்களிடம் தடையின்றிக்கோரத் தடையிருக்குமாயிருந்தால் தடைசெய்யப்பட்டவர்களின் தடைக்கு யார் தடை? தடைசெய்யப்பட்டவர்களா? தடைசெய்யப்பட்டவர்களைத் தடைசெய்தவர்களா? தடைசெய்யப்பட்டவர்களைத் தடைசெய்தவர்களைத் தடைசெய்ய முனைபவர்களா? தடைசெய்யப்பட்டவர்களைத் தடைசெய்தவர்களைத் தடைசெய்ய முனைபவர்களைத் தடுத்தவர்களா? தடைசெய்யப் பட்டவர்களைத் தடைசெய்தவர்களைத் தடைசெய்ய முனைபவர்களைத் தடுத்தும்கூட தடைசெய்யப்பட்டவர்களின் தடையை நீக்க முன்வராதவர்களா? தடைசெய்யப்பட்டவர்களைத் தடை செய்தவர்களைத் தடை செய்ய முனைபவர்களைத் தடுத்தும் கூடத் தடை செய்யப்பட்டவர்களின் தடையை நீக்க முன்வராதவர்களிடம் தடையை நீக்கும்படி கோரத் தெம்பில்லாதவர்களா? (விடை தெரிந்தவர்கள் எழுதியனுப்பினால் விசுவின் அரட்டை அரங்கத்திற்கான இலவச அனுமதியைப் பெற்றுத்தருவதாக காதிலபூ கந்தசாமி உறுதியளிக்கிறார்)

வாசித்துக் களைத்துவிட்டவர்களை ரிலாக்ஸாக்க ஒரு நகைச்சுவைக் கதை:

ஒரு திருவிழா. ஒரே கூட்டம். கூட்டத்தின் மத்தியில் ஒரு தூக்குக்காவடி. காவடி எடுத்தவரின் உடலெல்லாம் ரத்தம். அதைப் பார்த்த பக்தர்கள் கூட்டத்துக்குப் பக்தி பரவசம். காவடிக்குப் பின்னால் "அரோகரா அரோகரா" என்ற கோஷத்தோடு சனமோ ஊர்வலம். காவடி முடித்து அந்த மனிதர் இறங்கி வந்தார். அரோகரா சொன்ன சனம் அவரை மகிழ்ச்சியோடு வரவேற்றது. "ஐயாவுக்கு கடவுளிட்ட என்ன வேண்டுதலோ...?" ஒருவர் வினவினார். காவடி எடுத்தவர் சொன்னார், "என்னோட வியாபாரம் அமோகமாக நடக்க வேணுமெண்டுதான் காவடி எடுத்தேன்." "அதுக்கென்ன, யாவாரம் நல்ல நடந்தால் நாட்டுக்கும் நன்மைதானே". பக்தர்கள் தமக்குள் சமாதானம் சொல்லிக் கொண்டார்கள். "நாங்களும் உங்கட வேண்டுதலுக்காகத்தான் பிரார்த்தனை செய்தோம் தம்பி." ஒரு வயதானவர் முன்னால் வந்து சொன்னார். "அப்படியா?" என்று விட்டுப் புறப்பட்ட காவடி எடுத்தவரிடம் இன்னொருவர் கேட்டார் "அப்பிடி என்ன வியாபாரம்...?" காவடியெடுத்தவர் திரும்பிப் பார்த்து சாதாரணமாகச் சொன்னார் "சவப்பெட்டி வியாபாரம்". (உங்களுக்குத்தான்! எங்கள் அரசியல்வாதிகள் போடுற கோஷத்துக்கெல்லாம் அரோகரா போடாதீர்கள். புரிகிறதா?)

**யாவும் கலப்படமற்ற கற்பனை**


அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப்பேசுகின்றன.
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lspk.com/aiul


↓ கவர்ச்சிப் பாடகி மடோனாவின் வெப்சைட் ஒன்றை இன்டர்நெட்டில் துவக்கி, மடோனாவுக்குச் சிக்கலை ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஹொலிவூட் நடிகைகளுக்குத் தெரியாமலேயே அவர்களது பெயர்களில் வெப்சைட் துவக்கி, ஆபாசக் கலக்கலைத் தூவி விடுவது இப்போதெல்லாம் சில நிறுவனங்களுக்கு வாடிக்கையாகிவிட்டது.

இப்படிப்பட்ட சில நிறுவனங்கள் தான் மடோனா பெயரிலும் ஒரு வெப்சைட்டைத் துவக்கியுள்ளன.

இந்த வெப்சைட்டில் பணம் கட்டி உள்ளே போனால் கவர்ச்சி வெள்ளம் தான். அத்தனையும் ஆபாசப்படங்களுடன் 'உல்டா' செய்யப்பட்ட படங்கள்.

கன்கூசம் அளவிற்குக் கவர்ச்சியை வாரி வழங்கியிருக்கிறார் மடோனா. இதைப் பற்றிக் கேள்விப்பட்ட மடோனா சும்மா இருப்பாரா என்ன?

"என் உரிமையை மீறி என் போப் அயிட்டங்களைத் தவறாகப் பயன்படுத்தி விட்டது. நான் சும்மா விடமாட்டேன். உலகக் காப்புரிமை அமைப்பில் புகார் செய்யப்போகிறேன்" என்று கொதித்துப் போயிருக்கிறார்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


## சிக்கலில் பாடகி



## அசத்தல் சிறுமி



## இரத்தக் குழாய்



← வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மனிதனை இருதய நோய் வெகுவாகப் பாதிக்கிறது. இரத்த நாளங்களில் ஏற்படும் அடைப்புத்தான் இருதய நோய்க்கான மூல காரணி.

இரத்த நாளம் ஒன்றின் வெட்டுமுகத் தோற்றத்தையே படத்தில் பார்க்கிறீர்கள். இரத்த நாளத்தின் சுவரில் கொழுப்புத் தேங்கி உறைந்து விடுவதனால், இரத்த ஓட்டம் பாதிப்புக்குள்ளாகிறது. இதனால்தான் இரத்த ஓட்டம் சீராக இல்லாமற்போக இருதயம் இயங்குவது சிரமமாகிவிடுகிறது. இதனால் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. நாளத்தின் சுவரில் கொழுப்புப்படிந்திருப்பதை அவதானிக்கலாம். ○

---

→ காலில் உருளைகளைப்பூட்டி ஓடுவது ஒரு வகை விளையாட்டு சீனாவைச் சேர்ந்த சாகசக் காரச் சிறுமியான க்ஸு வாங் தரையிலிருந்து 14.6 செண்டி மீட்டர் உயரம் மட்டும் பொருத்தப்பட்டிருந்த கம்பியின் கீழே தன் உடலைப் புகுத்தி சாதனை புரியும் காட்சி இது.

இக்காட்சி 1999 செப்டம்பர் 25ம் திகதியன்று தொலைக் காட்சியில் காட்டப்பட்டது. □

→ உஷ்ணவலய நாடுகளின் கடற்கரைகளில் அழகான பவளப்பாறைகள் உற்பத்தியாகின்றன. இவை லோங்கு, கடற்குதிரை, நண்டு மற்றும் பலவகை மீனினங்கள் பல்கிப் பெருகி வாழ்வதற்கான சரணாலயமாக விளங்குகின்றன.

இப்பாறைகளில் வாழும் மீன்கள் சில பல வர்ணங்களைக் காட்டி, அவற்றை உணவாக உட்கொள்ள வரும் ஏனைய பெரிய மீன்களை எச்சரிக்கின்றன.

பவளப் பாறைகள் கடலரிப்பினைத் தடுக்கும். ஓர் அரியசாதனையாகவும் விளங்குகின்றன. அவுஸ்திரேலியக் கடற்கரைகளில் காணப்படும் பவளப்பாறைகள் பிரசித்தமானவை. இந்தியாவின் இலட்சதீவுகள், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் ஆகியவற்றுடன் மன்னார் குடாவும் பலவகையான பவளப் பாறைகளைக் கொண்டுள்ளன.



பவள மின்னல்

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



செல்வன். அபிஷேக் — 07.02.2001

திரு. திருமதி ஜெயசீலன்-சுதிரா தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் அபிஷேக் தனது முதலாவது பிறந்தநாளை ஜேர்மனியில் கோலாகலமாகக் கொண்டாடினார்.

அபிஷேக் குட்டியை அவரது அப்பா, அம்மா, அம்மம்மாமார், தாத்தாமார், மாமன்மார் (ஜேர்மனி), அப்பப்பா, அப்பம்மாமார், சித்தப்பாமார், மாமிமார் (மட்டக்களப்பு), பாட்டி, பாட்டா, அம்மம்மாமார், தாத்தாமார், மாமன்மார், அன்ரிமார் (யாழ்ப்பாணம்), தாத்தா குடும்பம் (லண்டன்), தாத்தா குடும்பம் (லெபனான்), தாத்தா குடும்பம் (கொழும்பு), தாத்தாமார் குடும்பம் (பசறை), மாமிமார் குடும்பம் (கவின்), மற்றும் உற்றார், உறவினர்கள் யாவரும் மழலையைப் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்- சீலன் ஜேர்மனி 08324 820861, 0173 9987935.



ஆகப் பெரிய ஆமை

← 'டேர்மோசெலிஸ் கொரியாசி' என்ற இனத்தைச் சேர்ந்த ஆமைகளே ஏனைய ஆமை வகையறாக்களில் மிகவும் பெரியவை. இவற்றின் ஓடு தோல் போன்ற அமைப்பினைக் கொண்டது. மிக வேகமாக நீந்தக்கூடிய இந்த ஆமைகள் உலகின் எல்லாக் கடல்களிலும் காணப்படுகின்றன. 1,200 மீட்டர் (3973 அடி) ஆழம்வரை சுழி ஓடக்கூடிய ஆற்றல் கொண்டவை. □